
# கல்கி

KALKI 23-3-80 90 காசு




வாரீர் புதுமை தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril
பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு.
லிரில். அலையெறியும் தளதள பச்சை. அதன்
நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக்
குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.
லிரில்
புத்துணர்வு சோப்
மனம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.
லின்டாஸ்-LR.27-203 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

# Kalki Shopping Page

தடைப்பட்டிருந்த மின்சாரம் திடீரென்று ஒளியைப் பாய்ச்சுகிறது. காத்திருந்த நெஞ்சங்களில் குதூகல உணர்வு பொங்குகிறது. தில்லித் தமிழ்ச் சங்கக் கூட்டம் தொடங்குகிறது. காலம் தாழ்ந்தாயினும், முற்றிலும் தகுதி வாய்ந்த தி. ஜானகிராமனைக் கௌரவித்த சாகித்ய அகாதமியின் செயல், இந்தக் காலம் தாழ்த்தி வந்த மின்சாரம் போல் குதூகலமே தருகிறது. அன்று ஜானகிராமனை வாழ்த்திப் பேசியவர் பலர். சிலரது கருத்துக்களிலிருந்து முக்கியமான, ரசமான பகுதிகள்:

**சி. வி. நரசிம்மன்**

''கோதாவரிக் குண்டு'' கதையை ஒரு வாக்கியத்தில் சொல்லி விடலாம். சக்தி வைத்தியம் தொகுதியின் மிக நீண்ட கதையான ''வீடு'' கதையை நான்கு வரிகளில் சொல்லிவிடலாம். சொல்லும் உத்தியில் இக்கதைகளின் உயர்வு மிளிர்கிறது. பாத்திரங்களை முழுமையாக அனுபவிக்கும் வகையில், இவரது எழுத்துக்கள் நேர்படப் பேசுகின்றன.

**கே. எஸ். ஸ்ரீனிவாசன்**

வாழ்வின் விசித்திர அவலங்களை Ironyகளை, இவரது எழுத்துக்களில் காண்கிறோம். இவரது தகுதி பற்றிய சர்ச்சையை நாம் லட்சியம் செய்ய வேண்டாம்; இவரது எழுத்துக்களில் ஆழ்ந்து லயிப்பதே நமக்குப் போதும்.



**இந்திரா பார்த்தசாரதி**

கும்பகோணத்தில் நான் எஸ். எஸ். எல். சி. படிக்கும் போது இளைஞராக, கிராம ஊழியனில் ''அமிர்தம்'' எனும் நாவலைப் படைத்த எழுத்தாளராக, திருஜானகிராமன் என்னைக் கவர்ந்தார். கு. ப. ராஜகோபாலன் கரிச்சான் குஞ்சு, எம். வி. வெங்கட்ராம், தி. ஜாவுடன் இலக்கிய சர்ச்சை செய்வதைத் தொலைவிலிருந்து மாணவனாக ரசித்து, ரசித்து, எழுத்தாளனாக வேண்டும் என்று என் அடி மனத்தில் லட்சியம் உருவானது.

தி. ஜா.வின் கூரிய பார்வை வேறு யாருக்கும் அமையவில்லை என்று உறுதியாகச் சொல்கிறேன். அவரது திருஷ்டி, நோக்கு அலாதி. He is himself nothing என்பார்கள், ஷேக்ஸ்பியர் பற்றி. தி. ஜா. வும் தமது கதா பாத்திரமாகவே ஆகிவிடுகிறார். மற்றவர்களுக்குப் புலப்படாத நுண்ணிய உணர்வுகளை, மனச் சலனங்களைப் படம் பிடித்துக் காட்டி விடுகிறார். பெண்களை இழிவுபடுத்தி எழுதுகிறார் என்பது இவரைப் பற்றிய சமீபத்திய குற்றச்சாட்டு. இதற்கு ஆதாரமில்லை. ஆண்களைக் குறைப்படுத்திச் சித்திரிக்கிறார் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆண்களின் இரட்டை வேடத்தை, கோழைத்தனத்தை, பலஹீனங்களை இவர் சாடுகிறார். ''மரப் பசு''வில் பட்டாபியைத்தவிர மற்ற எல்லா ஆண்பாத்திரங்களையும் முதுகெலும்பற்றவர்களாக, போலிகளாகச் சித்திரித்திருக்கிறார். ஆண்களின் சந்தர்ப்பவாதப் போக்கினைத் தம் கதைகளில் படம் பிடித்துக் காட்டுகிறார். உலகினை ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் கவனித்து, ஆச்சர்ய உணர்வுடன் எழுதுகிறார். ஜானகிராமனின் இந்த ஆச்சரிய பாவம் தொடரட்டும்! இந்த ஆச்சரியம் தீர்ந்ததோ, தொலைந்தது! அவர் விமர்சகர் ஆகிவிடுவார்; அது வேண்டாம்!

**இ. கஸ்தூரிரங்கன்**

ராஜம் கிருஷ்ணன் சாடும் ''விடுதலை'' கதையைப் பார்ப்போம். தன் ரசனைகளில் பங்கு கொள்ளாத டாக்டர் கணவனை, எடுத்ததற்கெல்லாம் குற்றம் சொல்லும் அவனை, dominating உணர்வுகள் கொண்ட புருஷனை வெறுக்கும் மனைவி தன் ரசனைகளில் பங்கு கொள்ளும் கம்பவுண்டரை விரும்புகிறாள். தன் கணவனிடம் இல்லாத குணங்களைக் கம்பவுண்டரிடம் அவள் கண்டு மயங்கியதில் தவறென்ன? இந்த வாழ்வின் Irony அல்லவா இங்கு சித்திரமாகிறது? ஜானகிராமன் காட்டும் ஆதர்சத் தம்பதிகளான ''கோதாவரிக் குண்டு'' கதாபாத்திரங்களான ராயர் தம்பதிகள் ராஜம் கிருஷ்ணனின் கண்களில் படவில்லையா?

# ஜானகிராமனுக்கு ஜே!

**வாஸந்தி**

டெல்லிக்கு வந்துவிட்டாலும் காவிரியின் பிரவாகத்தை நினைவுறுத்தும் இவரது சொல் நடை. எவ்வளவு பெரிய சிருஷ்டிகர்த்தா இவர்! அதுபற்றிய ஒரு ஜபர்தஸ்து, அந்தஸ்து, தோறாதா—? மூச், ஒன்றுமில்லையே இவரிடம்! பவ்வியம்; எளிமை இவரது உரிய குணம்.

**தி. ஜானகிராமன்**

இதற்கெல்லாம் நான் உங்களுக்குத்தான் (சமூகத்துக்கு) நன்றி சொல்ல வேண்டும். உங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டு, உங்களில் ஒருவனாக, உங்களை வைத்துக்கொண்டு தானே எழுதுகிறேன்?

என்னுடைய எழுத்துக்கள் சமூகத்தில் எவ்வித மாறுதலையும் புரட்சியையும் ஏற்படுத்தி விட முடியாது என்று தெரிந்துகொண்டே எழுதுகிறேன். பெரியவர்களின் மத்தியில் சிக்கிய குழந்தை அவர்களின் கவனத்தைக் கவரப் பல வகையில் முயலும். என் உணர்ச்சிகளை இந்தக் குழந்தையைப் போல் வெளிப்படுத்தவே எழுதுகிறேன்.

தொகுப்பு: **தேவி மைந்தன்**

# பம்பாயில் காஞ்சி

ஐம்பது நாட்களாக பம்பாய் மாநகரில் எங்கு திரும்பினாலும், ஒருவரை மற்றொருவர் சந்திக்கும்பொழுது 'சௌக்கியமா?' என்பதற்குப் பதில் 'பெரியவா தரிசனம் ஆச்சா?' என்றுதான் கேட்டார்கள். பம்பாய் முழுவதும் ''ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர'' என்ற கோஷம்தான். ஜனவரி 9ந் தேதி முலண்ட் வந்தடைந்த பெரியவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பையும் பூஜை ஏற்பாடுகளையும் பார்த்து, பிரமித்த பம்பாய் மக்கள் கொலாபா வரை எல்லா இடங்களிலும் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்புகளையும் மற்ற ஏற்பாடுகளையும் கவனித்தனர்.

ஒவ்வொரு பகுதி மக்களும் தங்கள் ஏற்பாடுதான் சிறந்தது என்று எண்ணும்படி பெரியவாள் நடந்து கொண்டது அவருடைய பெருந்தன்மையைக் காட்டியது.


பம்பாயில் ஒரு பர்லாங் நடக்க யோசனை செய்பவர்கள்கூட வெறும் வேஷ்டி துண்டோடு பெரியவாளின் மின்னல் வேகத்துக்கு ஈடு கொடுத்துக் கொண்டு ஓடினார்கள். பசுவைத் துரத்திக் கொண்டு கன்றுகள் ஓடுவது போலிருந்தது. ஒவ்வொரு இடத்திலும் பெரியவர் சின்னஞ் சிறிய விஷயத்தைக் கூடக் கவனித்துப் பாராட்டியது எல்லோர் மனத்திலும் பரவசத்தை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு நாளும் மூன்று கால பூஜையும், பெரியவர்களின் தரிசனமும், பம்பாய் வாசிகளுக்குத் தெய்வ அநுக்கிரகத்தால் கிடைத்தன. பெரியவர் பம்பாயில் பல்வேறு கோயில்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் விஜயம் செய்து எல்லோரையும் தங்களுக்காகவே பெரியவா வந்தது போல் எண்ணச் செய்ததை என்னவென்று சொல்ல! ஒவ்வொரு உபன்யாசத்திலும் பெரியவரின் பொன்மொழிகள், அன்றாட நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்து வருவதாக, பயன்படுவதாக அமைந்தது. வெவ்வேறு மொழிகளில் அவர் பேசும்போது கிளி கொஞ்சியது என்பார்களே அதுபோல் அமைந்தது. பாஷையின் இனிமையா,பெரியவாளின் குரல் இனிமையா அல்லது அவரது அன்பு மனத்தின் இனிமைதான் காரணமா? எப்படியோ ஜனங்கள் கண்ணனின் வேய்ங்குழலால் கட்டிப் போடப்பட்டது போல் கிடந்தார்கள். இன்னும் சற்றுப் பேசமாட்டாரா என்று ஏங்க வைத்தார். ஒவ்வொரு நாளும் களைப்பைப் பாராட்டாமல் யார் கூப்பிட்டாலும் நடந்தே வந்து எல்லோரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தினார். அன்று ஆதி சங்கரர் நடந்தது இதிகாசம், இன்று காஞ்சிப் பெரியவா நடப்பது பிரத்யட்சம்.

பல்வேறு ஏற்பாடுகளில் சிகரம் போல் அமைந்தது அந்தேரியிலிருந்து சிவாஜி பார்க் வரை ஏற்பாடு செய்யப்பட்ட 'சோபா யாத்திரை'. இந்த யாத்திரையில் ஒரு மைல் தூரத்துக்குச், சுமார் 85 லாரிகள் பங்கேற்றன. ஒவ்வொரு லாரியும் நமது இதிகாச புராணப் படங்கள், உருவச்சிலைகள், பொன்மொழிகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. திருத்தலங்கள், புண்ணிய நதிகள் ஆகியவை போல ஜோடிக்கப்பட்ட லாரிகளும் இருந்தன. வேறு லாரிகளில் பல்வேறு மொழிகளைச் சேர்ந்த

✠ மின் விளக்கு அலங்காரத்தில் ஜொலிக்கும் பம்பாய் சங்கரமடம்

✠ சங்கரமடத்தில் ஆதிசங்கரருக்கு அபிஷேகம்





பள்ளிக்கூடக் குழந்தைகள் பலவித இதிகாச, புராண வேடங்கள் அணிந்து வந்தனர். மராத்தி, ஹிந்தி, குஜராத்தி, தமிழ் ஆகிய மொழிகளில் பஜன்கள், பிரார்த்தனைகள் செய்தனர். வேத பாராயணம், செய்தனர். கடைசியாக ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், சதிரவனின் உக்கிரத்தையும் பனித் துளிகளாக நினைத்துச் சுமார் பன்னிரண்டு கிலோ மீட்டர் நடந்து வந்தார். பம்பாய் நகர்ப் பெருமக்கள் சாலையின் இரு புறங்களிலும் நின்று வணங்கினர்.

சுமார் நாலு மணிக்குப் புறப்பட்ட இந்த சோபா யாத்திரை இரவு ஒன்பதரை மணி அளவில் சரித்திரப் பிரசித்தி பெற்ற சிவாஜி பார்க் மைதானத்தை வந்தடைந்தது. அவ்வளவு லாரிகளையும் வரிசையாக நிறுத்தினர். மைதானத்தில் இருபதாயிரம் ஜனங்கள் காத்திருக்க, பெரியவர்கள் ஹிந்தியில் செய்த உபந்யாசத்தை வர்ணித்து எழுத ஆயிரம் கை போதாது. அந்த உபந்யாசத்தில்தான் ஜனங்களுக்கு மன அமைதிக்கான பத்து அம்சத்திட்டத்தை வெளியிட்டார்கள். ஒவ்வொரு லாரியையும் பெரியவா பார்த்து ஏற்பாடுகளைப் புகழ்ந்து அநுக்கிரஹித்தார்கள்.

பம்பாய் செம்பூர் சுப்ரமணியர் கோவில் கும்பாபிஷேகத்தை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டது பெரியவாளின் விஜய யாத்திரை. (விவரம் கல்கி 9–3–80 இதழ்).

⌘ காட்சிஜோடனை - லாரிக்குள்ளே மார்க்கண்டேயன் நாடகம்

⌘ இன்னொரு லாரிக்குள் பட்டாபிஷேகக் காட்சி





இந்த விஜய யாத்திரையில் மூன்று முறை மாதுங்கா ஸ்ரீ சங்கர மடத்தில் தங்கி மாதுங்கா வாழ் ஜனங்களை அநுக்கிரஹித்தார்கள். ஆதிசங்கரரின் சன்னதி பக்கத்திலேயே சந்திரமௌளீஸ்வரர் பூஜை செய்தது கண்கொள்ளாக் காட்சி. எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக மகாமகமே சங்கர மடத்துக்கு வந்ததுதான் மெய் சிலிர்க்க வைத்தது.. பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட விமானத்தில் கும்பகோணத்திலிருந்து புண்ணிய தீர்த்தம் பெல்காம் அருகில் பரமாசிரியருக்கும் பம்பாயில் பெரியவாளுக்கும் வந்தது. ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பூஜை செய்து முடிந்ததும் மத்தியானம் மூன்று மணி அளவில் மகாமக தீர்த்தத்தால் அவருக்கு அபிஷேகம் நடந்தது. அதனைக் கண்டவர் கண் பெற்றதன் பயனை அடைந்தனர். அன்று சங்கர மடத்தில் கூடிய எல்லோருக்கும் புண்ணிய தீர்த்தத்தால் புரோட்சண பாக்கியம் கிட்டியது. மகாமக ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைத்தது.

பெரியவர்கள் பம்பாயை விட்டுச் சென்ற பிறகு தாயைப் பிரிந்த கன்றுகள் போல் ஜனங்கள் தவிக்கிறார்கள். ஸ்ரீ பெரியவர்களின் விஜயபாத யாத்திரையின் பயனாகப் பலவித டிரஸ்டுகளும், இதர கைங்கரியங்களும் உருவாகியுள்ளன. எல்லோரும் அவற்றுக்கு உதவி செய்து பெரியவாளின் ஆசிகளுக்கும் அநுக்கிரகத்துக்கும் பாத்திரமாவோமாக.

ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர!

—லட்சுமி கண்ணன்

⌘ அன்பினால் ஆட்கொண்ட அருளாளர்



வெள்ளித்திரையில் எம்.ஜி.ஆர்:

# காணக் காத்திருக்கும் கண்கள் கோடிக் கணக்கில்

● 9—3—80 இதழ் அட்டையில் இடம் பெற்றுள்ள அழகிய நங்கை 'மிஸ். ரூபா' தானே? பிலிம் இன்ஸ்டிடியூட்டில் பட்டம் பெற்றவர். என்ன நான் சொல்வது சரி தானே?

இராஜபாளையம் — எஸ். விஜயன்

✖ ரொம்ப சரி — ஆசிரியர்

● திரை உலகுக்குத் திரும்பும் எம். ஜி. ஆர். கருத்தரங்கு படித்தோம். திரு. மதி ஒளி ஷண்முகம் அவர்களின் கூற்று எங்களுக்கு மனவேதனையைத் தந்துள்ளது.

பதினாறு வயதினிலே, முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள் போன்றவைதாம் இயற்கையான படங்களா? அன்றைய அன்பே வா, இதய வீணை போன்ற எம். ஜி. ஆர். படங்களில் இயற்கை நயமே இல்லையா?

சென்னை-39 — திருமதி நாராயண ராவ் குடும்பத்தினர்

● பதினாறு வயதினிலே, முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள் போன்ற இயற்கையான படங்கள் வெற்றியைத் தழுவிய சமயத்தில் தான் திரிசூலம், ப்ரியா, நான் வாழவைப்பேன், தர்ம யுத்தம், கல்யாண ராமன் போன்ற பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த படங்களும் பெரும் வெற்றியைத் தழுவின என்பதை மதி ஒளி சண்முகம் மறந்துவிட்டாரா?

போடிநாயக்கனூர் — எஸ். சையது முகமது

● எம். ஜி. ஆரின் திரையுலக வருகையால், குடும்பத்தோடு சினிமாப் பார்க்கும் அமைதி கெட்டுவிடும் என்கிறார் மதி ஒளி சண்முகம். இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்?

ஒரு குறிப்பிட்ட படத்தின் காட்சிகளுக்குச் சில நகரங்களில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை — முன் எச்சரிக்கை நடவடிக்கையாக! இவ்வளவுக்கும் அது 'யு' படம்!

சாலியமங்கலம், — ந. மெய்ப்பொருள்

● தமிழ்த் திரை உலகில் முடிசூடா வேந்தன், மக்கள் திலகம், புரட்சி நடிகர், பொன்மனச் செம்மல், கொடை வள்ளல், கலைப்பேரரசர், முன்னாள் தமிழக முதல்வர், ஏழைகளின் பாதுகாவலன், புரட்சித் தலைவர், எமது இதயத் தெய்வம் உயர்திரு எம். ஜி. ஆர். மீண்டும் திரை உலகுக்குத் திரும்புவது குறித்து ஆனந்தமும், இரண்டரை ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அவரைத் திரை உலகில் காணப் போகிறோம் என்பதில் மகிழ்வும் என் மனத்தில் பெருக் கெடுக்கின்றன. என்னைப்போல் கோடிக்கணக்கான இதயங்கள்.

பெங்களூர் — எஸ். வினோத்



● முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர். நடிப்பது பற்றிக் கவலை இல்லை! ஆனால் பார்ப்பதற்குத்தான் முன்போல் ரசிகர்கள் இல்லை. கமலையும், ரஜனியையும், விஜயனையும் பார்த்து இளமை ரசனையில் தங்களை மாற்றிக்கொண்டுவிட்ட தமிழ்ப் பட உலகம் ''முதுமை''களை முழுக்கவே ஒதுக்கிவிடும்.

பெங்களூர். — பாரதி

● 'சத்தான சந்தானம்' தலையங்கம் கண்டு உள்ளம் நெகிழ்ந்தேன். 'முதிர்ந்து உதிர்ந்த சந்தானம் சத்தோடு சத்தாகி விட்டார்! சத்து என்பதற்குக் கடவுள் என்றும் சதுர் மறையாளர் பொருள் கூறிப் போற்றுவர்.

சத்தெனத் தத்தெனச் சதுர்மறையாளர்
நித்தமும் போற்றும் நிர்மலக் கடவுள்'

என்று பாடியுள்ளார் 'விநாயகர் நான்மணி மாலை'யில் அமர கவி பாரதியார்.

சென்னை-75 — வி. ச. வாசுதேவன்

● 'திருச்செம்பூர் திருவிழா' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையின் கடைசிப் பகுதியில் ''இந்துக்கள் வணங்கும் முருகப் பெருமானின் ஆலயத் திருப்பணிக்குக் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த ஒருவரும், முஸ்லீம் மதத்தைச் சார்ந்த ஒருவரும் ஒத்துழைத்திருக்கும் இந்த அற்புதம் இந்தியாவில் வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை எனலாம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய அற்புதம் முன்பும் நிகழ்ந்திருக்கிறது. திருநெல்வேலி ஜில்லா பாளையங்கோட்டை நகரின் அருகே நுழைவாயிலில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ''வேலவ விநாயகர்'' கோவில் இந்துக்கள் இறைவழிபாடு செய்வதற்காக ஏ. செல்லத்துரை என்ற கிறிஸ்தவத் தொழில் அதிபர் நன்கொடையால் கட்டப்பட்டது. இந்த விநாயகப் பெருமான் சிலையை உருவாக்கிய சிற்பி அலியார் என்ற முஸ்லிம் ஸ்தபதி.

இருநகர் — டி. பிச்சுமணி

● தியாகு, விஸ்வநாதன் குறிப்பிட்டிருக்கும் மெய் சிலிர்க்கும் சம்பவம் (நகை காணாமல் போய்க் கிடைத்தது) நடைபெற்றது மாதுங்கா சங்கர மடத்தில்தான். முலுண்டில் அல்ல. இந்த நிகழ்ச்சியை நான் கண் கூடாகப் பார்த்தேன்.

பம்பாய், — ரா. தேவாதி ராஜன்

● 'மகளிருக்கு ஒரு மங்கை' உரையாடல் பகுதியை மகளிர் சிறப்பு இதழில் பிரசுரித்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும். பல கேள்விகளைக்கேட்ட வாசகிகள்'' 'மங்கை' ஒரு மங்கையை ஆசிரியராகக் கொண்டு வெளிவராமல் தாங்கள் ஆசிரியராக இருந்து நடத்துவதின் மர்மம் என்ன?'' என்ற கேள்வியை ஏன் கேட்வில்லை?

சென்னை-33 — கே. பாபு

# அகாதமி விவகாரம்

[ஹேமா ஆனந்த தீர்த்தன் வழங்கும் இந்தக் கட்டுரையுடன் இந்த விவாதம் முடிவடைகிறது. மிக ரசமான விதத்தில், கண்ணியமான முறையில் வாதப் பிரதிவாதங்களைச் சமர்ப்பித்த இருவருக்கும் நன்றி.
-ஆசிரியர்]

திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்கள் சாகித்ய அகாதமி விவகாரத்தில் எனக்குப் பதில் அளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள கருத்துக்களைக் கண்டேன்.

நான் ''சுயபுராணம்'' பாடுவதாகச் சகோதரி குற்றம் சாட்டியிருக்கிறார்.

அவருடைய பேட்டிக் கட்டுரையில் ''நான்'', ''எனது'' போன்ற வார்த்தைகள் எத்தனை இடங்களில் வந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் நான், எனது, எனக்கு என்ற உணர்விலிருந்து அம்மையாரும் விலகியவரல்ல என்பதை எளிதாக யாரும் உணரலாம்.

''இப்போதெல்லாம் இது மாதிரி ஏதாவது கிளப்பிவிட்டு ஒரு கோழிச் சண்டை மாதிரி மட்டமான முறையில் பிராபல்யம் தேடுவது வழக்கமாகி விட்டது'' என்கிறார் ராஜம் கிருஷ்ணன். மட்டமான முறையில் பிராபல்யம் தேடுவது என்கிற குற்றச் சாட்டை என்பேரில் சுமத்துகிறாரா அல்லது பத்திரிகை ஆசிரியர்பேரில் சுமத்துகிறாரா என்பது தெளிவாக இல்லை. எவ்வாறானாலும் அது நியாயமான குற்றச்சாட்டாகாது. பிராபல்யத்தைத் தேடுவதற்காகப் பத்திரிகைகள் இந்த மாதிரி விவாதங்களைக் கிளப்பி விடுவதில்லை. நானும் அதற்காக விவாதத்தில் இறங்கவில்லை. கல்கி பத்திரிகையோ நானோ பிராபல்யம் புதிதாகத் தேடிக் கொள்ள அவசியம் இல்லை. பட்டிமன்றங்கள் செய்யும் வேலையைப் பத்திரிகைகள் செய்து வாசகர்களுக்குச் சுவையான ஓர் அம்சத்தைக் கொடுக்கின்றன. விவாதம் கண்ணியமாக நடக்கும்வரை, ஆரோக்கியமான வாதப் பிரதிவாதங்களால் தெளிவு பிறக்கவே செய்யும். நன்மையே விளையும்.

''திரு ஜானகிராமனின் எழுத்துத் திறமையை நான் குறைவாகக் குறிப்பிடவில்லை'' என்கிறார் திருமதி ராஜம் கிருஷ்ணன். அகாதமியின் பரிசு அந்த எழுத்துத் திறமைக்குத் தான்.

''இன்று முக்கால்வாசிப் பத்திரிகைகள், வாசகர்களைக் கவர்வதாகக் கூறிக்கொண்டு பாலுணர்வு, வன்முறைகளை வளர்க்கும் விதமாகவே வெளியாகின்றன'' என்பது சகோதரியின் அடுத்த குறை.

பாலுணர்வில் கெடுதல் ஒன்றும் இல்லை. அது இயற்கையின் நியதிகளில் ஒன்று. பத்திரிகை ஆசிரியரிடமோ எழுத்தாளர்களிடமோ அல்லது படிப்பவரிடமோ மனப் பக்குவம் இல்லாமைதான் கெடுதலை விளைவிக்கிறது. அப்போதுதான் பாலுணர்வு விரசமாக மாறுகிறது

'' 'சக்தி வைத்தியம்' கதைத் தொகுப்பில் சமுதாயப் பொறுப்போடு எழுதப்பட்ட சிறப்பு இருக்குமானால் ஆனந்ததீர்த்தன் எடுத்துக் காட்டட்டுமே'' என்று சவால் விடுகிறார் அகாதமியிலிருந்து வெளியேறிவிட்ட அம்மையார். சமுதாயப் பொறுப்போடு எழுதப்பட்டதுதான் இலக்கியம் என்பதை நான் ஒப்புக் கொண்டால்தானே அந்த அம்சம் அக்கதைகளில் இருக்கிறதா என்பதை நான் தேட வேண்டும்? திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்களே ''வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுதான் இலக்கியம்'' என்று ஒப்புக் கொண்டிருக்கிறாரே? வாழ்க்கையில் எல்லாமே நல்லவையாகவா இருக்கின்றன? எல்லோருமே நல்லவர்களாகவா இருக்கிறார்கள்?




சமுதாயப் பொறுப்போடு எழுதுவது என்பது என்ன? நமது கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களின் பார்வையில் பாட்டாளி வர்க்கத்தின் துன்பங்களையும், முதலாளிகளின் கொடுமைகளையும் விவரிப்பதுதான் சமுதாயப் பிரச்னையாக இருக்கிறது. சில பெண் எழுத்தாளர்களுக்கோ வரதட்சிணைக் கொடுமையும், வளர்ந்த பெண்களைப் பணம் காய்ச்சி மரங்களாகக் கருதுகிற தகப்பன்மார்களும்தான் சமுதாயப் பிரச்னைகளாகப் படுகிறார்கள். இதுபோல் கதைகளில் பிரசார நோக்கம் மேலிடும்போது கலையழகு குன்றிப் போகிறது.

வெறும் கலையழகையே பிரதானமாகக் கொண்டு எழுதப்படும் கதைகளிலும் நாவல்களிலும் கூட சமுதாயப் பொறுப்பு இருக்கிறதென்றே தான் நான் கருதுகிறேன். ஒரு கதை அல்லது நாவலை லட்சக் கணக்கான மக்கள் ஆர்வத்தோடுபடித்து, படிக்கும்போது மெய்மறந்து, தங்கள் இன்னல்களையும் துன்பங்களையும் மறந்து இன்புறுவார்களேயானால் அது கதாசிரியன் அவர்களுக்குச் செய்த சேவை என்று ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

இலக்கியம் படைப்பவர்கள் இலக்கியத்தைப் படைத்துக் கொண்டே இருப்பார்கள். அதைப் பற்றிப் பேச மாட்டார்கள். எப்பொழுது இலக்கியம் படைக்கும் திறமை குன்றி விடுகிறதோ அப்போது இலக்கியத்தைப் பற்றிய பேச்சு அதிகமாகி விடுகிறது. இலக்கியம் செத்து விடுகிறது. என் அருமை நண்பரும் பிரபல மலையாள எழுத்தாளருமான திரு பி. கேசவ தேவ் பலமுறை இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்: ''எனக்கு

எழுத வேண்டும் என்று தோன்றியதைத் தோன்றியபடி எழுதினேன். அது இலக்கியமா, மண்ணாங்கட்டியா என்பது பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. என்னுடைய எழுத்தைப் படித்த பலர், 'ஆகா நீ எழுதுவது இலக்கியம்' என்றார்கள். 'அப்படியா? சரி போனால் போகட்டும்!' என்றேன்.'' கேசவ தேவ் வேடிக்கையாக இப்படிக் குறிப்பிட்டாலும் எவ்வளவு பெரிய உண்மை அது! அப்படித்தான் தி. ஜானகிராமன் எழுதுகிறார். உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து, விரல்களில் பாய்ந்து, இயக்குகின்ற ஜீவன் நிறைந்த எழுத்து.

இவ்வளவும் கூறிய பிறகும் ஒன்றைச் சொல்ல வேண்டும்: தி. ஜா.வின் கதைகளில் சமுதாயப் பிரச்னையே இல்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. எல்லாக் கதைகளிலும் அது இருக்க வேண்டும் என்பது இல்லை. ராஜம் கிருஷ்ணன் அவர்கள் ''சக்தி வைத்தியம்'' தொகுப்பிலிருந்து தமக்குச் சாதகமாக இருந்த இரண்டு கதைகளை மட்டும் எடுத்துக் காட்டிவிட்டு மற்றக் கதைகளைப் பற்றி ஒன்றும் கூறாமல் விட்டுவிட்டார்.

அந்தத் தொகுதியிலேயே ''முள் முடி'' என்ற ஒரு சிறு கதை ஒரு காவியமாக இருக்கிறது. பலமுறை படித்துக் கண்ணீர் சிந்தினேன். ஒரு ஆசிரியர் மாணவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை எவ்வளவு அழகாக, நயமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்! (கல்கி இதழ் 20—1—80) மாணவர்கள் ஆசிரியரிடம் காட்டும் "அன்பைத் தான் எப்படிச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்! இன்றைய ஆசிரிய — மாணவ உறவு இருக்கும் நிலையில் இந்தக் கதை சமுதாயப் பொறுப்போடு எழுதப்படவில்லை என்று திருமதி ராஜம் கிருஷ்ணன் சொல்ல முடியுமா?

கடைசியாக ஒரு சொந்த விஷயத்தைக் கூறி முடிக்கிறேன். திருமதி ராஜம் கிருஷ்ணன் என் பெயரைக் குறிப்பிடும்போது மறந்து போயும்கூட ஓர் இடத்திலாவது என்னை ஹேமா ஆனந்த தீர்த்தன் என்று குறிப்பிடவில்லை. ஆனந்த தீர்த்தன் என்றே குறிப்பிடுகிறார். இது அவர் தவறு அல்லது பேட்டி கண்டவர் குற்றமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஆண் எழுத்தாளர்கள் பெண்களின் பெயரை வைத்துக்கொண்டு எழுதுவதைப் பலர் கேலி செய்து வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். முதலில் நான் ஆனந்த தீர்த்தன் என்கிற பெயரில் தான் எழுதிக் கொண்டிருந்தேன். ஒரு நாள், பிரிட்டனில் இந்தியா மந்திரியாக இருந்த லார்ட் பெதிக் லாரன்ஸ் தம் மனைவியின் மீது கொண்டிருந்த பெருமதிப்பு, அன்பு காரணமாகத்தான் பெதிக் என்ற அவள் பெயரைத் தம் பெயரோடு சேர்த்துக்கொண்டார் என்று படித்தேன். அன்றிலிருந்து தான் என் பெயரை ஹேமா ஆனந்ததீர்த்தன் என்று மாற்றிக் கொண்டேன். என் பெயருடன் என் மனைவியின் பெயரைச் சேர்த்துக்கொள்வதில் நான் பெருமையே அடைந்திருக்கிறேன்.

# தோள் கண்டார் தோளே கண்டார்



எஸ்.வி.எஸ்

கடவுள் தத்துவமும் கடவுளின் சக்தியும் எங்கும் எல்லாவிடங்களிலும் எல்லா பொருட்களிலும், அணுவிலிருந்து பேரண்டம் வரை பரந்துள்ளது. நீக்கமற நிறைந்துள்ளான் ஈசன் என்பது புத்தி பூர்வமாக, தர்க்க ரீதியாக எல்லாருமே ஒத்துக்கொள்ளும் உண்மை. அந்தக் கடவுள் தத்துவத்தையே பக்தர்கள் சிவலிங்க வடிவிலும் மகாவிஷ்ணு வடிவிலும் விநாயகர் உருவிலும் முருகப் பெருமான் உருவிலும் கண்டு மெய்யுருகிப் போகிறார்கள்.

எனவே, பக்தர்களுக்கு, கடவுளின் உண்மைச் சொரூபம் தெரியாது என்று நினைக்கக் கூடாது. ஈசனின் சர்வ வியாபகம் உணர்ந்தே அம்முழு வியாபகத்தை அந்தக் கோவிலில் கர்ப்பக்கிருகத்தில் உள்ள சிறு லிங்க வடிவில் பார்க்கிறார்கள். வைணவர்கள் பெருமாளின் திருவுருவில் காண்கிறார்கள். சக்தி உபாசகர்கள் அம்பாளின் உருவில் காண்கிறார்கள். முருகபக்தர்கள் முருக உருவில் காண்கிறார்கள். காணும் உண்மை என்னவோ ஒன்றுதான்.

ராமன், மிதிலை நகரில் சீதையைத் திருமணம் புரியத் தேர் ஏறி வீதியில் செல்கிறான். அவனைப் பார்த்த மிதிலை நகரப் பெண்கள் நிலை என்னவாயிற்று என்பதைக் கம்பர் இப்படிச் சொல்கிறார்.

> தோள் கண்டார் தோளேகண் டார்
> தொடுகழல் கமலம்அன் ன
> தாள் கண்டார் தாளேகண் டார்
> தடக்கை கண்டாரும்அஃ தே
> வாள்கண்ட கண்ணார்யா ரே
> வடிவினை முடியக்கண் டார்
> ஊழ்கண்ட சமயத்தன் னான்
> உருவுகண் டாரையொத் தார்.


ராமனின் முழு அழகு வடிவத்தைக் கண்டு சொக்கிப் போனவர்கள் ஒவ்வொரு அங்கமாகப் பார்த்து, அதனிலேயே அவனுடைய முழு அழகையும் பார்த்துப் பார்த்து, ஆசை தணியாமல் தவிக்கிறார்களாம். தோளின் அழகில் ஈடுபட்டவர்கள் கண்களை வேறு திசையில் திருப்ப முடியாமல் அதிலேயே சொக்கி நின்றார்களாம். பாதமலர்களைக் கண்டவர்கள் தோளின் அழகுக்கு வரமுடியாமல் தாள்களின் அழகை மாந்துவதிலேயே மயங்கி நின்று விட்டார்கள். இறைவனைக் கண்ணனாக வரித்தவர்கள், முருகன் பக்தியில் ஈடுபட முடியா மற் போவது போலே என்று கம்பர் ஈற்றடியில் விளக்கம் தருகிறார்.

> ஊழ்கண்ட சமயத்தன் னான்
> உருவுகண் டாரையொத் தார்.

இதற்கு நேர்மாறாகச் சிலர், தோளைப் பார்த்தவர்கள் தோளையே பார்த்துக் கொண்டிருந்து விட்டார்கள், ராமனின் முழு அழகைப் பார்க்கவில்லை என்று பொருள் கூறுகிறார்கள். இப்படிப் பார்ப்பது மருத்துவக் கல்லூரி அனாடமி (உடற்கூறு) பிரிவில்தான் சாத்தியம். அழகுணர்ச்சி, இறைப் பற்று, சமயங்கள் என்றால் என்ன என்று உணர்ந்தவர்கள் இப்படி அர்த்தம் கூறுவதை ஏற்க மாட்டார்கள். முழு அழகை அனுபவித்தவர்களால்தான் அங்கங்களின் அழகில் லயிக்க முடியும்.

கடவுள் தத்துவத்தை முழுமையாக உணர்ந்தவர்களால்தான் இறைவனுடைய ஒரு வடிவத்தில் லயித்துப் பக்தி செலுத்த முடியும்.




அமைதிப் பணிக்குத்தான் அனுப்பினேன்!
அந்தக் கதையைத் திறக்க இப்ப அவசரம் இல்லே! தேர்தல் முடியட்டும்!
பட்ஜெட்
இடைக்கால பட்ஜெட்
பல்கலைக் கழகத் தேர்வுகளைப் புறக்கணித்து மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கிவிடாதீர்கள்!



# செய்திகள், வாசிப்பது 'செம்பியன்'

## மண்டையைக் கிழித்த கண்டன ஊர்வலம்

"நெருக்கடி நிலைப் பிரகடன காலத்தை மறந்துவிடுங்கள்" என்கிறார் ஸ்டீஃபன். "முடியாது ஸ்டீஃபன் ஸார், முடியாது!" என்கிறேன். அது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஓர் உதாரணம் சொல்கிறேன், கேளுங்கள்:

இளைஞனான எனது உற்ற நண்பன் ஞாயிற்றுக் கிழமையன்று அவசரமாக அயல்நாடு போக வேண்டிய ஒரு தபாலுடன் மவுண்ட் ரோடு தபால் நிலையத்துக்குப் போனான். அந்தச் சமயம் அ. தி. மு. க. நடத்திய கண்டனப் பேரணி அந்தப் பக்கம் வர, சில விஷமிகள் வன்முறையில் இறங்க, போலீஸ் தடியடி நடக்க, ஒரு பாவமும் அறியாத என் நண்பனின் மண்டையைப் போலீஸ் தடி தாக்கிக் கிழித்தது!

"அடிக்கத்தான் அடிக்கிறார்களே, காலில் அடிக்கக்கூடாதா? தலையிலா தாக்க வேண்டும்?" என்று என் நண்பன் கேட்டு வருந்தினான். "கூட்டத்தைக் கலைப்பதுதான் நோக்கமென்றால் ஓடிப் போக வழியின்றிச் சுற்றி வளைத்துக் கொண்டா தாக்குவது?" என்று விசனித்தான். பின்னால் இவன் உடன் பிறப்போ அல்லது ரத்தத்தின் ரத்தமோ அல்ல என்பதை உணர்ந்த போலீஸார் இவனுக்கு அன்புடன் உதவியதையும் கூறினான்.

ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எப்படியோ மாலை 5–30 மணிக்குப் போய்ச் சேர்ந்தவனுக்கு மறுநாள் காலை பத்து மணி அளவில் தான் தலையில் தையல் போட்டார்களாம். அதுவும் டாக்டர் அல்ல, ஒரு ஸ்டாஃப் நர்ஸ். "ஸார்! பேரணி ஒன்று நடக்கிறதே, வன்முறை, அடிதடி ஏதும் சம்பவிக்கலாமே என்று முன்னெச்சரிக்கையாக அரசின் பொது மருத்துவ மனையில் ஒரு எமர்ஜன்ஸி வார்டு தயாராய் வைத்திருக்கக் கூடாதா? சில டாக்டர்களை டியூட்டியில் போட்டிருக்கக் கூடாதா?" என்று அலுத்துக் கொண்டான் நண்பன். "இப்படி முன்யோசனையுடன் காரியம் பண்ணுவதுதானே சிறந்த அரசுக்கு அடையாளம்?" என்று கேட்டான். பத்தரை மணிக்கு மேல் டியூட்டிக்கு வந்த டாக்டர்களும் டீனும் தன்னிடம் அன்பாக நடந்து கொண்டு கவனித்ததையும் விவரித்தான். அதே வார்டில் ரகளையில் அடிபட்ட ஒரு போலீஸ்காரர் ஆபத்தான நிலையில் படுத்துக் கிடந்ததையும், அவருக்காகத் தான் பிரார்த்தித்ததையும் தெரிவித்தான்,

என் நண்பன் பொய் சொல்லியிருக்க முடியாது. ஏனெனில் திருப்பதிக்குப் போய் வந்தது போல் அவன் தலை மொட்டையாகியிருந்தது. குல்லாவை நீக்கியதும் ஒன்றரை அங்குல நீளத்துக்குத் தையல் தெரிந்தது.

"அப்பனே! உன்னைப் பேட்டி கண்டு எழுதுகிறேன். அரசுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், போலீசுக்கும், ஆஸ்பத்திரி நிர்வாகிகளுக்கும் ஒருவேளை அந்தப் பேட்டிக் கட்டுரை விழிப்புணர்வையும் கடமை உணர்வையும் ஊட்டலாம். நல்லது கெட்டது இரண்டையும் கூறுவோம்" என்றேன்.

"ஐயய்யோ வேண்டாம் ஸார்!" என்று அலறினான் இளைஞன். "இந்திரா காந்தி மறுபடியும் பிரதமராகியிருப்பது உங்களுக்குத் தெரியாதா? எமர்ஜென்ஸி காலத்தில் அக்கிரமங்களுக்குத் துணை நின்ற மந்திரிகள் இன்று அமைச்சரவையில் இடம் பெறவில்லையே தவிர, அன்று அட்டகாசம் பண்ணின அதிகாரிகள் பலருக்கு இன்று பதவிகள் திரும்பவும் தரப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியாதா? சந்தேகமிருந்தால் நியூஸ் வீக் பத்திரிகையைப் பாருங்கள். பேட்டி வேண்டாம் ஸார்! வேண்டவே வேண்டாம்."

இப்போது சொல்லுங்கள் ஸ்டீஃபன் ஸார்! இத்தனை அச்சத்தை மக்களிடையே வளர்த்து வைத்திருக்கும் இந்திராவையும் அவருடைய எமர்ஜன்ஸி காலத்தையும் யாரால் எப்படி மறக்க முடியும்?

## மண்ணின் மைந்தர்கள்

கர்னாடக முதல்வர், Sons of the Soil என்ற கொள்கையைப் பின்பற்றி வருகிறார். அதாவது கர்நாடக மாநிலப் பிரஜைகளுக்கே கல்வி வசதி, வேலை வாய்ப்பு, உத்தியோக உயர்வு போன்ற சகலத்திலும் முதலிடம். இந்தக் கொள்கை தீவிரமாக அமல்படுத்தப்பட்டால் மற்ற மாநிலங்களிலிருந்து கர்நாடகாவுக்கு வந்தவர்கள் நாளடைவில் அகதிகள் போல் திரும்ப நேரலாம்.

ஒரு பக்கம் தேசிய ஒருமைப்பாடு பற்றித் தலைவர்கள் பேசுகிறார்கள். இன்னொரு பக்கம் குறுகிய மாநிலப் பித்துப் பிடித்துப் பிதற்றுகிறார்கள். இந்த முரண்பாட்டுக்குள்ளேயே இன்னொரு முரண்பாட்டையும் காண்கிறார் கல்கி நேயர் திரு. என். மணி.

"'மண்ணின் மைந்தர்கள்' என்ற கொள்கையைப் பின்பற்றும் குண்டுராவ், எதற்காக அயல் மாநிலத்தைச் சேர்ந்த ஸ்டீஃபன் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக குல்பர்காவில் உபதேர்தலுக்கு நிற்கச் சம்மதித்தார்? கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரைத்தான் இங்கு வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று இந்திரா காந்தியிடம் கூறியிருப்பது தானே?"

கல்கி நேயர் சரியான கேள்வியைத்தானே கேட்டிருக்கிறார்! பதில் சொல்வாரா குண்டுராவ்?

## கிரிக்கெட் முதல் சடுகுடு வரை

கோவா கவர்னருக்கும் கோவா பத்திரிகை யாளருக்கும் இடையில் ஒரு வாக்கு

வாதம். பத்திரிகையாளர் தங்களுக்குத் தகவல்களை அறிந்துகொள்ள உரிமை உண்டு என்றும் அதனால் அரசு அதிகாரிகளைப் பேட்டி காண்போம் என்றும் கூறினர். கோவா கவர்னரோ, ''இது கூடாது, அரசின் பிரதம காரியதரிசியை மட்டும் நீங்கள் தகவல்களுக்கு அணுகலாம்'' என்றார்.

இந்தக் கருத்து வேற்றுமைக்கு எப்படித் தீர்வு காண்பது? ''கிரிக்கெட் மாட்ச் ஆடுவோம்'' என்றார் கவர்னர். ஆளுனர் கட்சிக்கும் பத்திரிகையாளர் கட்சிக்கும் இடையே நடந்த கிரிக்கெட் மாட்சில் கவர்னர் கட்சியே வென்றது. எனவே பத்திரிகையாளர் ஆளுனரின் கருத்துப்படி நடப்பது - என முடிவாயிற்று!

பிரச்னைகளுக்கு முடிவு காண ரொம்பச் சுலபமான வழியாய்த் தோன்றுகிறதல்லவா? தேர்தல் எதற்கு? பேசாமல் இந்திரா காங்கிரஸ் அணிக்கும் ஜனதா அணிக்கும் இடையில் கிரிக்கெட் மாட்ச் நடத்திப் பார்த்து விடலாம். லோக்தள், காங்கிரஸ்(யு) முதலியன உள்ளனவே என்றால், குவார்ட்டர் ஃபைனல், செமி ஃபைனல், ஃபைனல் என்று பல மாட்சுகளை நடத்தினால் ஆயிற்று! பிரதம தேர்தல் அதிகாரி அம்பயராக இருக்கலாம். பார்க்கப் போனால் சிறுபான்மை வோட்டுக்களைப் பெற்று நாடாளு மன்றத்தில் மிகப் பெரும்பான்மை பெற்றுப்பெரும்பான்மை மக்களைச் சிறுபான்மையினர் ஆள்வதைவிடக் கிரிக்கெட் மாட்சில் வென்று ஆட்சியைப் பிடிப்பது எவ்வளவோ மேல்!

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நாடாளு மன்றத் தேர்தலுக்குக் கிரிக்கெட் மேட்ச் என்றால் மாநிலத் தேர்தலுக்கு ஹாக்கி, நகரசபைத் தேர்தலுக்குக் கால் பந்து, பஞ்சாயத்துத் தேர்தலுக்கு கில்லி தாண்டு.

கட்சிக்குள் உட்பூசலைத் தவிர்க்க இருக்கவே இருக்கிறது சடுகுடு!

## கதம்பத்துக்கு இருபது!

இலங்கை பத்திரிகையான கதம்பம் இருபது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது.

இவ்விழாவுக்குக் கிராமியக் தொழில் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு தொண்டமான், இந்து கலாச்சார அமைச்சர் மாண்புமிகு செல்லையா ராசதுரை ஆகியோர் வந்திருந்து சிறப்பித்தனர்.

கதம்பம் ஆசிரியர் கே. வி. எஸ். மோகன் அளித்த மோகன இரவு என்ற பல் சுவை கலை நிகழ்ச்சியில் மக்கள் கலைஞர் ஜெய்சங்கர், நாகேஷ், அசோகன், ஜெயசந்திரன் முதலியோர் கலந்து கொண்டார்கள்.

இவ்விழாவில் கதம்பம் சார்பாகத் தென்னக கலைஞர்களுக்கு வெள்ளித்தட்டுகளை அமைச்சர்கள் பரிசளித்தார்கள்.

''இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஏற்பட்டு வரும் கலாச்சார உறவை மேலும் வளர்க்க வேண்டும்'' என்று திரு. தொண்டமான் வலியுறுத்தினார்.

இலங்கை நாடகக்கலைஞர்களைத் தமிழகத்துக்கு அனுப்பி நாடகங்கள் நடத்தி, இலங்கை கலைஞர்களைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்து வைக்கப் போவதாக திரு. இராசதுரை குறிப்பிட்டார்.

கதம்பம் தொடர்ந்து நறுமணம் பரப்ப நாம் வாழ்த்துகிறோம். படத்தில் அமைச்சர் தொண்டமானைக் கதம்பம் ஆசிரியர் மோகன் வரவேற்க அமைச்சர் ராசதுரை அசோகனுக்குப் பரிசளிக்கிறார்.





## ரொம்பத் திரில்; ரொம்பத் திகில்!

டெஹ்ரானில் அமெரிக்கத் தூதரகத்தில் சிறைப்பட்டுள்ளவர்கள் விடுதலை பெறலாம் என்ற நம்பிக்கை பொய்த்து மறுபடியும் பாவம், இழுபறி நிலையே நீடிக்கிறது.

இதே டெஹ்ரானில் ஜேம்ஸ்பாண்ட் கதையைக் கூடத் தூக்கியடிக்கும் ஒரு சாகசச் செயலும் நடந்திருக்கிறது. அமெரிக்க தூதரகத்தைப் புரட்சி மாணவர்கள் சூழ்ந்து கொண்டபோது அங்கே பணியாற்றிய ஆறு பேர் வெளியே சென்றிருந்தனர். அவர்கள் தூதராலயம் திரும்பு முன் அது கைப்பற்றப்பட்டது அறிந்து அப்படியே தலைமறைவானார்கள். அவர்களைத் தப்பிக்க வைத்துத் தாய்நாட்டுக்கு அழைத்துப் போக அவர்களை அமெரிக்காவின் ஸி. ஐ. ஏ. ரகசியமாகத் தேடியது. ஈரானியப் போலீஸும் அவர்களைக் கைப்பற்றத் தேடியது. ஈரானியப் போலீஸுக்குத் தெரியாமல் ஸி. ஐ. ஏ. அவர்களைக் கண்டு பிடித்து ரகசியத் தொடர்பு கொண்டது. அதே நேரத்தில் கனடா அரசுடனும் ஸி. ஐ. ஏ. தொடர்பு கொண்டு அந்த அரசின் உதவியுடன் ஆறு பேருக்கும் கனடா தேசப் பாஸ்போர்ட்டுகளைத் தயாரித்தளித்தது. ஈரானுக்குள் ஆறு பேரும் வந்ததற்கான போலி விசாக்களையும் ஸி. ஐ. ஏ. தயாரித்தது. இந்த பாஸ்போர்ட்டுகளுடன் அந்த அமெரிக்கர்கள், கனடா தேசப் பிரஜைகள் போல் நடித்து, டெஹ்ரான் விமான நிலையத்துக்கு வந்து மேற்கு ஜெர்மனிக்குச் செல்லும் ஒரு விமானத்தில் ஏறினார்கள். அங்கிருந்து சுதந்திரப் பறவைகளாக அமெரிக்காவுக்குப் பறந்து விட்டார்கள்.

அமெரிக்காவில் ஒரே குதூகலம்! திரும்பிய பக்கமெல்லாம் ''கனடாவுக்கு நன்றி'' என்று சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள்!

சுஜாதா கவனிக்க: இது ரொம்பத் திரில், ரொம்பத் திகில் இல்லையோ? நிஜ வாழ்வு சாகசங்கள் பலமுறை கற்பனைக் கதைகளையும் தூக்கி அடிப்பதாக அமைந்துவிடுகின்றன.

## SPIDERMAN




பரிசோதனைச் சாலையில், கதிரியக்கம் உள்ள பொருள்களைச் சோதித்துக்கொண்டிருக்கும் விஞ்ஞான மாணவன் பீட்டர். கண்ணாடி திரையிருந்தும் கூட அதன் பின்னால் ஒரு சிலந்தி எப்படியோ நுழைந்து விடுகிறது. கதிரியக்கத்தால் பாதிக்கப்படுகிறது. பின்னர் அந்த இடத்திலிருந்து தப்பி வரும் அது பீட்டரின் கையைக் கடித்து விட்டுச் செத்து விடுகிறது. இந்தச் சிறு நிகழ்ச்சி அவனது வாழ்க்கையையே மாற்றி விடுகிறது. சிலந்தி போலவே சுவரின் மேல் விடுவிடுவென்று தன்னால் ஏறமுடிகிறது என்று காண்கிறான். இந்தச் சக்தியைப் பெற்றதும் தீயவர்களுடன் போராடச் சிலந்தி மனிதன் புறப்பட்டு விடுகிறான். தன் உண்மை உருவத்தை மறைத்துக்கொள்ள பீட்டர் சிலந்தி உடை அணிந்து கொள்கிறான். சிலந்தி போலவே நூலிழைகளை வெளிப்படுத்தவும் வலை பின்னவும் ஆற்றல் பெறுகிறான். ஆனால் இந்த நூலிழைகள் உறுதியாக இருந்து எதிரிகளிடமிருந்து தப்பவும் எதிரிகளை சிக்க வைக்கவும் பயனாகின்றன. அற்புத சாகசங்களைப் புரிகிறான். திடீரென சுவரில் தொற்றி ஏறும்போதும் வானளாவிய ஒரு கட்டிடத்திலிருந்து இன்னொன்றுக்கு நூலைப் பற்றிக்கொண்டு டார்ஜான் போலத் தாவும் போதும் தீயசக்திகளைச் சாமர்த்தியமாக மடக்கும்போதும் வியப்பூட்டுகிறான்.

நவீன விஞ்ஞான சாதனங்களைக் கொண்டு பல பேரை மூளைச் சலவை செய்து கொலை, கொள்ளை போன்ற தனது கொடியதிட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிற ஒரு கயவன் சிலந்தி மனிதனின் ஆற்றலால் பிடிபடுகிறான். சிலந்தி மனிதன் அவனுக்கே மூளைச் சலவை செய்து குற்றங்களை ஒப்புக்கொள்ளப் போலீஸாரிடம் அனுப்பி வைக்கிறான். சிலந்தி மனிதன் யார், எங்கிருந்து தோன்றுகிறான் எவ்வாறு அந்த ஆற்றலைப் பெற்றான் என்ற மர்மங்கள் நிரூபிக்கப்படாமலே இருக்கின்றன.

அப்படியிருந்தால்தானே அடுத்து அவனை வைத்து இன்னொரு கதை புனைந்து படமெடுக்கவும் முடியும்?

—டி. எம். ஆர்.

---

## அப்பாவி முதலமைச்சர்

ரொம்ப நாளைக்கு முன்னால் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் என்று ஒரு முதல்வர் தமிழகத்தில் இருந்தார். அவரை அப்பாவி முதலமைச்சர் என்று இன்றைய நோக்கில் கருதலாம்: ஏனென்றால் மனுஷனுக்குப் பொய் சொல்லத் தெரியாது, லஞ்சம் வாங்கத் தெரியாது, ஆளுக்குத் தகுந்தபடி பேசிக் காரியத்தை நடத்திக் கொண்டு போகவோ ஆதரவாளரைத் தேடிப் பதவியில் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளவோ தெரியாது, கட்சி மாறத் தெரியாது. கொள்கைகளைக் காற்றில் பறக்க விடத் தெரியாது. 'பட்டம் தருகிறேன்' என்று ஒரு பல்கலைக் கழகம் வருந்தி அழைத்தபோது ''வேண்டாம், உரை நிகழ்த்தப் போய் இவனே பட்டம் வாங்கிக் கொண்டு வந்தான் என்று ஊரிலே சிரிப்பார்கள்'' என்று கூறி மறுத்துவிட்டார். பரம பக்தர். ஒருமுறை வாரியார் ''ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?'' என்று இவரைக் கேட்டபோது, ஓமந்தூரார், ''இன்று பூஜையின்போது ஏனோ கண்ணீர் பெருகவில்லை'' என்று கவலையோடு சொன்னார்!

''சட்ட சபை உறுப்பினர் சிபாரிசு செய்கிறார் என்பதற்காக நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பான எந்த ஆணையையும் பிறப்பிக்கக் கூடாது'' என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும், இதர அரசுத் துறை தலைவர்களுக்கும் இந்த முதலமைச்சர் சுற்றறிக்கை அனுப்பினார். இப்படிப்பட்டவர் எத்தனை காலம் ஆட்சியில் நீடிக்க முடியும்? சட்ட சபை உறுப்பினர்களே அவர் பதவியில் நீடிப்பதை விரும்பவில்லை. ஓ. பி. ஆர். உடனே பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

இத்தகைய அப்பாவி பற்றி இத்தனை சுவையாக ஒரு நூல் எழுத முடியும் என்று யாரும் கனவிலும் கருத முடியாது. சோமலே அந்தச் செயற்கரிய சாதனை புரிந்திருக்கிறார். அசுவாரஸ்யத்துடன் படிக்க ஆரம்பித்தேன். பசி உறக்கம் மறந்து ஒரே இரவில் படித்து முடித்தேன்.

புத்தகத்தில் இடம் பெற்றுள்ள அதி சுவாரஸ்யமான சம்பவங்களைக் கல்கி நேயர்களுக்கு எடுத்துச் சொல்லலாம் என்று பக்க எண்களைக் குறித்துக் கொண்டு வந்தேன். மொத்தம் 35 பக்கங்களைக் குறித்துக் கொள்ள வேண்டியிருந்தது. சரி, புத்தகத்தையே சிபாரிசு செய்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தேன். இந்த அரிய நூல் உருவாக உதவிய வள்ளல் — வேறு யார், பொள்ளாச்சி நா. மகாலிங்கம்தான்!

450 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த நூலில் ஒரே ஒரு இடம் நெருடுகிறது. ''சுதந்திரா கட்சியின் கொள்கை என்ன?'' என்றாராம் ஓ. பி. ஆர். ''ஹிந்தி எதிர்ப்பு'' என்றாராம் ராஜாஜி. ''1937ல் ஹிந்தியை நுழைத்து நாட்டைக் கெடுத்தீர்கள்; இன்று ஹிந்தியை எதிர்த்து நாட்டைக் கெடுக்கிறீர்கள்'' என்று பதில் சொன்னாராம் ஓ. பி. ஆர்.!

சுதந்திரக் கட்சியின் கொள்கை ஹிந்தி எதிர்ப்பா? அப்படி ராஜாஜியே சொன்னாரா? ஓமந்தூரார் மீது ஆணை! ராஜாஜி அப்படி ஒரு நாளும் பிதற்றியிருக்க மாட்டார்!

''விவசாய முதலமைச்சர்'', ஆசிரியர்: 'சோமலெ'; வெளியிடுவோர்: கஸ்தூரி பா காந்தி கன்யா குருகுலம், வேதாரண்யம்: விலை ரூ. 20.


அழகுராணி! சுகந்த ராணி!!
மெடிமிக்ஸ் உங்கள்
மேனியை பாதுகாப்பதோடு,
அழகாகவும் வைக்கிறது.
மெடிமிக்ஸ் உங்களை
அழகுராணியாக மாற்றுகிறது.
மெடிமிக்ஸ் உங்களுக்கு
வெள்ளை ரோஜாவின்
பரவசமூட்டும் மணத்தைக்
கொடுக்கும் சுகந்தராணி.
MEDIMIX
மெடிமிக்ஸ்
ஆயுர்வேத டாய்லட்சோப்பு
• முகப்பரு • வேர்க்குரு
• தேமல் • வண்ணான் படை
• கரும்புள்ளி • சிரங்கு
• சொறி • சரப்பான்
CHOLAYIL PHARMACEUTICALS

MOD 11 CP-S


CHOOSE FROM A
FANTASY RANGE OF
BOMBAY DYEING
Sarees, Suitings, Shirtings &
Dress Materials, etc.
Kripa
173, Luz Church Road,
Mylapore-Madras-4,
Phone: 71898.
BOMBAY
DYEING

ஸ்டார் போர்ட் பக்கமாக ஜூலி உருள, கப்பலுக்குள் தண்ணீர் குபுகுபு என்று ஏறியது.

கப்பல் சாயத் தொடங்கியது.

## 12

The wings of man's life are plumed with the feathers of death. —Sir Humphrey Gilbert

*16 ஆம் நூற்றுண்டின் கப்பல் தளபதி*

மேலே அந்தப் பொருளை வைத்ததும், வொய்ட்டும் டார்வினும் ரகளையோடு தாவினார்கள். அவர்கள் அதிசயத்துக்கு இலக்காக இருந்த விநோதப் பொருள் — ஒரு புத்தர் சிலை.

பத்மாசனம்.

யோக நித்திரை.

வரி வரி யோக வேஷ்டி.

பிரமிட் ஜடை.

நல்லவகை பாடினு மூடியிருந்ததால் நூற்றுண்டுகளுக்கும் அவர் அதிகம் கரையவில்லை.

தங்கமாக இருக்கும் என்று அபிப்பிராயம். சொன்னவர் வொய்ட்.

—ஜூலியைத் தேடி வந்திருக்கிறோம்; புத்தரை அல்ல, என்றார் டார்வின்.

அதைத் தொடர்ந்து ஒரு விவாதம்!

—நீங்க ரெண்டு பேரும் எப்பப் பார்த்தாலும் வாதாடறீங்களே! வாங்க இப்படி! என்று லாரென்ஸ் என்பவர் குறுக்கிட்டு அவர்களை காபின் மூன்றுக்கு அழைத்துப் போனார்.

வொய்ட்டின் கூட்டாளிகளில் லாரென்ஸ் ஒருவர். அவருக்குத் தெரியும் வொய்ட்டும் டார்வினும் ஏன் சண்டை போடுகிறார்கள் என்று.

காரணம் இப்போது ஏற்பட்டதல்ல.






ஒன்பது மாதங்களுக்கு முன்னால் தொடங்கியது.

அப்போது மூவரும் மற்றொரு பங்குதாரரும் சேர்ந்து பழைய கார்களை வாங்கி விற்றுக் கொண்டிருந்தார்கள். சந்தேகத்துக்கு இடமான சில காரியங்களையும் செய்தார்கள். கலப்பப் பணம் கிடைத்துக் கொண்டிருந்தது.

கலபப் பணம் பல ரகசிய வழிகளில் அவர்களை ஈடுபடுத்த. இப்போது பெரிய அளவு சாகஸம் செய்ய வந்திருப்பது ஜூலி காலண்டைத் தேடி! பொன் வேட்டை ஆசையில்! வொய்ட்டுக்கு ஜூலியைப் பற்றி எப்படித் தெரிந்தது? அது ஒரு கதை!

பல மாதங்களுக்கு முன் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஒரு கடிதம் வெளியாகியது.

இந்தியாவிலிருந்து எஸ். எஸ். சாமி என்று ஒருவர் எழுதியிருந்தார். விலாசம் குறிப்பிடவில்லை.

ஐயா,

எனது ஹாபி பழைய பொருள்களைச் சேகரிப்பது. சமீபத்தில் ஒரு பர்கண்டி பாட்டில் கிடைக்கப் பெற்றேன். உள்ளே ஒரு பழங்காலச் சார்ட் இருந்தது. என் அனுமானப்படி அது 150 வருட காலத்திய காகிதமாக இருக்க வேண்டும். அதில் ஒரு கப்பலின் இருப்பிடத்தைக் காட்டும் குறியீடுகள் இருந்தன. என்னுடைய ஊகத்தின்படி அது ஒரு பழைய பிரிட்டிஷ் கப்பல் மூழ்கிய இடமாக இருக்கவேண்டும். ஏனெனில், அதில்,

ஹியர் லைஸ் ஹர் மெஜஸ்டிஸ்... என்ற வார்த்தைகள் இருந்தன. கப்பலின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் வெறும் பொத்தல் இருந்தது. கீழே எட்வர்ட் ஆர். பால்மர்ஸன், காப்டன் என்று கையெழுத்துப் போட்டிருந்தது. யாருக்காவது இந்தக் கப்பலின் விவரங்கள் தெரிந்தால் அதைத் தங்கள் பத்திரிகைக் காலம் மூலம் விளக்கம் தருமாறு வேண்டுகிறேன். அவசியம் ஏற்பட்ட பின் நான் சார்ட்டைத் தந்து உதவ விரும்புகிறேன்.

எஸ். எஸ். சாமி

இந்தக் கடிதம் வொய்ட்டிடம் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கியது. பால்மர்ஸன் குடும்பம் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் பெரும் பதவிகளை வகித்தது என்று படித்திருக்கிறார்.

ஒரு குருட்டு யோசனை! பால்மர்ஸன் ஏதாவது வியாபாரக் கப்பலில் ஏறிப் போயிருந்தால், நிச்சயம் இந்தச் சார்ட் பெரிய உதவியாக இருக்கும்.

எந்தக் கப்பலில் போனார்? அந்தக் கப்பலில் என்னென்ன இருந்தன?

இங்கிலாந்தில் உள்ள ரிகார்டுகளை அலசிவிட்டார். விவரம் கிடைக்கவில்லை. இந்தியாவுக்கு ஒரு நடை போய் வர விரும்பினார். சென்னை 'ஆர்கைவ்' ஸில் கிழக்கிந்தியக் கம்பெனி தஸ்தாவேஜு நிறைய பாதுகாக்கப்படுகின்றன என்பது தெரியும். நண்பர்களின் உதவி பெற்று இந்தியா வந்தார். ஆராய்ச்சியில் இறங்க, அந்தக் கப்பலில் ஏராளத் தங்கமும் வெள்ளியும் லண்டனிலிருந்து பிரயாணமானது தெரிய வந்தது.

வாழ்க்கையில் இது இமேர் அதிர்ஷ்டம் என்று கருதினார். மற்ற நண்பர்களை தாஜா செய்து இந்த ப்ராஜக்டில் ஈடுபடும்படி செய்துவிட்டார்.

வொய்ட்டுக்கும் டார்வினுக்கும் இந்தியா வந்த பிறகு தகராறு.

கப்பல் மூழ்கியிருக்கும் இடத்தை அறிந்த பிறகுதான் மீட்பு வேலையில் இறங்க வேண்டும் என்று டார்வின் கூறியிருந்தார்.

—இல்லை, போய்ப் பார்த்தால் விவரம் தெரிகிறது! என்று டார்வினை இங்கிலாந்திலிருந்து இழுத்து வந்து விட்டார் வொய்ட்.

இங்கே இந்தியக் கடலில் ஒரு வாரம் தேடிய பிறகு கிடைத்த ஒரே பொக்கிஷம் புத்தர் சிலை.

—இன்னும் ஐந்து நாள் கெடு! எதுவும் கிடைக்கா விட்டால் திரும்பிவிட வேண்டியதுதான் என்று கூப்பாடு போட்டுக் கத்தினார் டார்வின்.

லாரென்ஸ் அவரைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்.

**சா**ர்ட் எங்கே?

அதுதான் மல்லிக்கின் பிரச்னை.

சார்ட் இருந்தால் போதும். ஜூலி எங்கே ஒளிந்திருக்கிறாள் என்று கண்டுபிடித்து விடலாம்!

ஒரு நீர்க்க ரேகையும் ஒரு அட்ச ரேகையும் வெட்டுமிடத்தின் ஆழத்தில் தூங்கிக் கொண்டிருப்பாள் அவள்.

அது எந்த நீர்க்க ரேகை?

எந்த அட்ச ரேகை?

கடவுளே, சார்ட் சீக்கிரம் கிடைத்துவிடக் கூடாதா?


கடலில் ஒரு மிதக்கும் படகைத் தேடுவது கூடக் கஷ்டமான காரியம். மூழ்கிப் போயிருப்பதைக் கண்டுபிடிப்பது என்றால்...

சரி, சார்ட் யாரிடம் கிடைக்கும்?

சார்ட் வைத்திருக்கிறேன் என்று வெளிப்படுத்தும் கடிதம் அந்த டிகேண்டர் பாட்டிலில் இருந்தது. அப்படியானால் சார்ட்டும் அதே பாட்டிலில் இருக்க வேண்டும். இந்தச் சம்பந்தசாமி அதை வைத்துக் கொண்டு....

அல்லது அந்த எலும்புக் கூடு கிடைத்த இடத்தில் இன்னும் ஒரு புதை பொருளாகவே அது இருந்து கொண்டு....

மனைவி: "கொஞ்சம் நில்லுங்க, நீங்க இழுத்துக்கிட்டுப் போறது நம்ம பையன்! இங்கே இருக்கு உங்க ஜிம்மி!"



## சிவப்புக் கன்னி

சிவந்த உடை உணர்த்தும்
சிலை வடிவத் தோற்றம்;

சிவந்த இதழ்களைச் சுட்டும்
சிவப்புரோஜா;

'சிக்'கான காதணி அசைய
செம்மைச் சிரிப்பு;

சிங்காரப் பார்வையிடை
சித்திரப் பொட்டு;



சிவப்பு நிறம் ரொம்பப் பிடிக்கும் போலிருக்கிறது **குமாரி ரஞ்சனி விசுவநாதனுக்கு**. அத்துடன் எளிமையும் பிடிக்கும் என்பதை சோழிச் சங்கிலி உணர்த்துகிறதல்லவா?

வண்ணப்படம் எடுத்தவர்: எம். கே. ராமமூர்த்தி

ஒரு விடையைக் கிட்டத்தட்ட நெருங்கியபோது, அது அவனை விட்டுப் பறந்திருப்பது போல் தெரிந்தது.

இரண்டு நாள் உளம்பிய பிறகு, சம்பகாவின் நினைவு திடீரென்று வந்தது.

அவளைப் பல நாள் பாராதது தவறு என்று நினைத்தான்.

இந்தக் கிராமம் வந்ததிலிருந்து அவளது நினைவு ஒரு ஊறுகாய்—சுகமாக அவனுக்கு இருந்து வந்திருக்கிறது. மற்ற விவகாரங்கள் கிட்டும்போதெல்லாம் அவள் நினைவை அவன் தொட்டுக் கொண்டிருக்கிறான்.

சமயங்களில், அவளைப் பற்றிய ஓர் உற்சாகமான நினைவை மனத்தில் விளையாட விட்டு வேடிக்கை பார்த்திருக்கிறான்.

அவளைச் சிநேகிப்பது போலவும், அவளுடன் ஒரு சமீபத்திய சினிமாப் பாட்டை டூயட் பாடுவது போலவும் நினைத்துக்கொண்டிருக்கிறான்.

ஜூலி வேட்டையின் தீவிரத்தில் அவளது நினைவைச் சிலசமயம் விலக்கி வைத்தாலும், சீக்கிரமே அது ஒரு பழக்கப்பட்ட வீட்டு மிருகம் போல் குழைந்து கொண்டு ஓடிவருவதைக் கண்டிருக்கிறான்.

நான் ஏன் அவளை நினைக்க வேண்டும்? நான் ஒரு பட்டணத்து ஆசாமி. எத்தனையோ ஜில்கள் பட்டணம் பூராவும் உலாவ, போயும் போயும் இவளிடமா....

**க**னிநாகவாபுரத்தை அடைந்ததும் கால்கள் அவனை இழுத்து அவள் வீட்டு முன்னால் நிறுத்தின.

—சம்பகா! என்றான்.

பதில் இல்லாமல் போக, மெள்ள அடி எடுத்து உள்ளே போனான்.

அங்கே அந்த ரேழியின் பற்றுநிலை மினுமினுப்பில் சம்பகா சுவர் ஓரமுடன் ஒட்டி மெல்லிய துவஷிப் துவஷிப் என்ற மூக்கு உறிஞ்சல்களுடன் படுத்திருந்தாள்.

சுற்றும் பார்க்க, அந்த ஊஞ்சல் பலகை துப்புரவான வெறுமையுடன் இருந்தது. அதன் பித்தளைப் பூண்கள் சோகமாக அவனைப் பார்த்தன.

ஒரு திடீர் நினைப்பில் அவன் அங்குமிங்கும் பார்க்க, எங்கே அந்த அர்ச்சகர்? எங்கே?

சம்பகா, சம்பகா!

மெள்ள முனுப்புடன் நிமிர்ந்தாள். முகம் ஜலம் தோய்ந்து பருமனாகி இருந்தது. கண்கள் திடீரென்று சூப்பு அடைந்திருந்தது.

அவனைப் பார்த்ததும் கண்கள் உடைந்து விட்டன.

—அப்பா போயிட்டார், என்றாள்.

சுருக்கென்று முள் பாய்ந்தது.

—உங்களைப் பார்த்தேன். காணலை. சுகத்தையும் துக்கத்தையும் யாராவது பங்கு போட்டால்தான் இதமாக இருக்கும். உங்களை ஏன் எதிர்பார்த்தேன் தெரியாது. எதிர்பார்த்தேன்.

அந்தக் கணத்தில் மல்லிக்கின் மீதிருந்த நாகரிகப் போர்வை கழன்று விட்டது. ஜூலியைக் கூட மறந்து. அந்தக் கிராமத்து நாடோடி ஆகிவிட வேண்டும் என்ற நினைவு வெகு ஆசையுடன் வந்தது. கிராமியமாக மாறி ஒரு கிராமப் பாங்கில் அவளுக்கு ஆறுதல் கொடுக்கவேண்டும்என்று நினைத்தான்.

—சம்பகா, எழுந்திரு சம்பகா! எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. விஷயம் தெரிந்திருந்தா ஓடி வந்திருப்பேன். தெரியாது. நான் எங்கேயோ இருந்துட்டேன். அப்பா எப்போ போனார்? நீ எப்படி காரியமெல்லாம்..... அழாதே சம்பகா! பெரியவர் நல்ல பதவிக்குப் போயிட்டார். நீ இனிமே நல்லா இருக்கணும். உனக்குக் கடவுள் ஒரு பலமா இருப்பார். அழாதே!

வெகு நேர ஆறுதலுக்குப் பிறகு, சம்பகா ஒருவித இதம் அடைந்து கண்ணீர் வழித்து, மூக்கைத் துடைத்து, எழுந்து ஒரு தாற்காலிக சுபாவமாகி, —அப்புறம் உங்க முயற்சி என்ன ஆச்சு, என்று பளிச்சென்று கேட்டாள்.

—நடந்துட்டுருக்கு சம்பகா! இப்போ அதுக்குத்தான் உன் உதவி கேட்டு வந்திருக்கேன்....

மெள்ள அவன் இழுக்க, —என்ன உதவி, சொல்லுங்கோ! என்றாள்.

அவன் சார்ட்டைப் பற்றிய விவரம் சொல்லி, அது இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும், என்று கூறினான். —கிருஷ்ணன் உதவி செய்வாரான்னு பார்க்கணும், சம்பகா, உன்னாலே கேட்க முடியுமா?

—முடியும்! என்றாள்

அந்தக் கோவில் பூசாரி பெண்ணை ஒரு நாள் அனுபவிக்கணும்.

அந்த வார்த்தைகள் அசரீரியாக அவன் காதில் விழுந்தன. (தொடரும்)

# பச்சைக் கல் பிரேஸ்லெட்

## துளசி ஜெயராமன்

ரமா—உள்ளத்தை நெகிழ்விக்கச் செய்பவள்! ஆம், அவள் அந்தப் பெயருக்குப் பொருத்தமானவள்தான். காலையில் இரண்டு கோப்பை 'சாய்' போட வேண்டும். நான்கு 'பரோட்டா' ஒரு கடோரி 'ஸப்ஜி'! சிறு அலுமினிய வண்ண டிபன் பாக்சில் அதைப் போட்டுக் கணவனிடம் கொடுத்துவிட வேண்டும். எட்டு மணி சுமாருக்கு இரண்டு ரொட்டி கட்டுச் சுடச் சுட 'ஆலு' கிழங்கை மசாலாவில் கலந்து கணவனுக்குப் பரிமாற வேண்டும். அவ்வளவுதான். மாலை ஆறு மணிவரை ரமாவுக்கு வேறு வேலை இடையாது. இரண்டு ரொட்டியை மென்றுவிட்டு வீட்டில் வளைய வந்துகொண்டிருப்பாள். மாலையில் மறுபடியும் நான்கு ரொட்டி, ஒரு ஸ்வீட் துண்டு, ஒரு 'ஸப்ஜி' — சாய் — தீர்ந்தது வேலை.

சீதாவின் கதை இப்படியல்ல. அது சமையலறையா, பிரளய பூமியா? சாதம், பருப்பு, சாம்பார், ரசம், கறி, அப்பளம், தயிர், நெய், ஊறுகாய், தயிர் மிளகாய்,—இத்தனையும் தயார் செய்வதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். இத்துடன் சீதா நிறுத்திக் கொள்வாளா? வீட்டில் சும்மா இருக்க முடிந்தால்தானே! படித்த பெண்ணாயிற்றே! அண்டை வீட்டு ராஜியிடம் கொஞ்ச நேரம் குலாவல், எதிர் வீட்டு 'நீருபேன்' வீட்டுக்குச் சென்று 'டோக்லா'வைச் சுவை பார்க்கும் சாக்கில் அவளுடன் வம்பு, மூன்றும் தெருவின் கடைசி இல்லத்தில் இருக்கும் மீனு நார்வேகரைப் படை பதைக்கும் வெய்யிலில் போய்க் காணாவிட்டால் தலை வெடித்துவிடும். அவள் தினசரி தயார் செய்யும் 'ஸ்ரீகண்ட்' இனிப்பை முதலில் ருசிபார்ப்பவள் சீதாதான்! அமைதியே உருவெடுத்த ரமாவுடன் படபடப்பே வடிவெடுத்த சீதா தன்னைத் தானே ஒப்பு நோக்கிப் பார்த்துக் கொள்வது வழக்கம்.

பம்பாய் போன்ற பெரிய நகரில் ரமா தன் கணவன் சோஹன் சர்மாவுடன் மன நிறைவுடன் வாழ்பவள். அவளுக்கு இந்தப் பெரிய நகரத்து நாகரிகப் பொருட்களில் எதுவும் தேவை இடையாது. 'ஸ்லீவ்லெஸ் சோளி, மாக்ஸி, பெல் பாட்டம் — இம்மாதிரி உடைகளில் நாட்டம் இடையாது. சீதா அப்படியல்ல. தன் கணவன் சம்பாதிக்கும் இரண்டாயிரம் ரூபாய் முழுவதையும் அப்படியே தனக்குச் செலவு செய்துகொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம் அவளுக்கு. பம்பாயில் எத்தனை ரூபாய் எடுத்துக் கொண்டு வெளியே சென்றாலும் சரி, ஒரு காசுகூட மீதமின்றித் திரும்பிவிடலாம். போலிக் கவர்ச்சிப் பொருட்கள் நிறைந்த இந்நக ரத்துப் பெண்கள் தங்களைப் பகட்டுள்ள பதுமைகளென ஜோடித்துக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.

சீதாவின் கணவன் பாலு ஒரு பாங்கியில் பெரிய பதவி வகிப்பவன். பாலுவும் சர்மாவும் பால்ய நண்பர்கள். ஆதலால் சீதாவுக்கு அடிக்கடி ரமாவைச் சந்திக்க வாய்ப்புண்டு. பரந்த உலகத்துப் போகப் பொருட்களில் திளைக்கும் சீதாவுக்கு மன நிறைவு என்பதே இடையாது. எது வாங்கிக் கொடுத்தாலும் இன்னும் வாங்க வேண்டும் எனும் பேராசை புத்தி, பாலுவுக்குச் சில சமயங்களில் சினத்தையூட்டும். 'இந்த அழகுப் பொருள் எதற்கு? எதை நீ அணிந்து கொண்டாலும் எனக்கு நீ ஒரே மாதிரியாகத் தான் தோன்றுகிறாய். உள்ளம் அழகாக இருக்க வேண்டும். அது தான் பெரிய அணி!' என்பான் பாலு.

சர்மா அப்படியல்ல. தன் மனைவி ரமா



பம்பாய்ப் பெண்களைப் போல் 'டக் டக்' கென்று பூட்ஸ் அணிந்து கொண்டு நடக்க வில்லையே என்ற குறை அவனுக்கு. 'வெளிப் பகட்டு எதற்கு? 'சிறி-சாறி' என்று எளிய முறையில் இருந்தால்தான் அழகாக இருக்கும்' என்பாள் ரமா.



**அ**ன்று ரமா சர்மாவுக்குப் பூச்சூட்டல். ரமா தாயாகப் போகும் செய்தி சர்மாவை மட்டற்ற மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தது. இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளப் பாலுவும் சீதாவும் அழைக்கப்பட்டிருந்தனர். கடையிலிருந்து வாங்கும் தின்பண்டங்கள் ரமாவுக்குப் பிடிக்காது. ஆதலால் முதல் தினத்திலிருந்தே பர்பி, பேடா, ஜாங்கிரி என்று பல வகை இனிப்புப் பண்டங்களைத் தன் கைப்படவே ரமா தயாரித்திருந்தாள். பாலுவும் சீதாவும் விருந்தை ரசித்துச் சாப்பிட்டார்கள். பாலு தன் நண்பன்

# தெய்வீகராகங்கள்

பிரபு பெயரில் மட்டுமல்லாமல், உண்மையிலேயே பணக்காரன்; அவனது கலைத் திறமையிலும், செல்வச் செழிப்பிலும், இளமைத் துடிப்பிலும் மயங்கிய பருவப்பெண்கள் பலர். அவர்களில் மூவர் தங்களை அவனிடம் இழந்து தற்கொலை செய்து கொண்டு விடுகின்றனர்.

'இடைவேளை' வரையில் பிரபுவின் களியாட்ட சரசங்கள்; பிற்பகுதியில் தற்கொலை செய்து கொண்ட பருவப் பெண்களின் ஆவிகள் விளையாடத் தொடங்குகின்றன.

ஆவிகளின் இடைவிடாத் துன்புறுத்தல்களிலும், அதன் காரணமாக ஏற்பட்ட பயத்திலும், ஸ்ரீகாந்த் படத்தின் பிற்பகுதியில் நிறம்பட நடித்திருக்கிறார். அவர் பார்வை, கை, கால்களின் உதறல் எல்லாமே இயல்பாயிருக்கின்றன.

மனோதத்துவ டாக்டராக வரும் வி. கோபால கிருஷ்ணனும், டாக்டராக வரும் வீரராகவனும் நகைச்சுவைக்கு உறு துணையாக இருக்கின்றனர். இருவருடைய நடிப்பும் பாராட்டும்படியாயிருக்கின்றன.

பிரபுவின் இளமை வெறிக்குப் பலியான பெண்களில் வடிவுக்கரசி, நடிப்பில் எடுப்பாயிருக்கிறார். ஆவி வடிவில் பிரபுவை அவர் ஏளனம் செய்து பழி வாங்குவது சபாஷ் பெறுகிறது.

புதுமுகம் பிரியவதனாவும் எடுத்த எடுப்பிலேயே நிறைவைத் தருகிறார்.

படம் முழுவதும், தற்கொலை, ஆவி என்று ஒரே பயங்கரமாய்ப் போய் விடாமல் கொஞ்சம் உற்சாகமாயிருக்க, கருணிராஜன், ஐ.எஸ்.ஆர்., குமாரி சச்சு ஆகியவர்கள் வரும் கட்டங்கள் நன்கு கைகொடுக்கின்றன.

கவர்ச்சியான வண்ணப் படத்தின் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய மூன்று பொறுப்புக்களையும் திறமையாக வகித்திருப்பவர் ஏ. வீரப்பன்.

பகுத்தறிவுப் பாசறையின் பண்போடு படத்தைப் பார்த்தால், இறந்தவர்கள் ஆவியாக வந்து பழிவாங்குவது நம்ப முடியாத கற்பனைதான்! ஆனால், ஆவிகளின் நடமாட்டத்தை வைத்துக் கொண்டு ஒரு நியவலைத் தீர்த்துக் கட்டியிருக்கிறாரே, கதாசிரியர்! அதற்காக அவரைப் பாராட்டிவிட வேண்டியதுதான்!

**- காந்தன்**



சர்மாவின் மனைவிக்குப் பரிசாக அளிக்க ஓர் அழகிய 'புரூச்' (தலைப் பின்) வாங்கி வந்திருந்தான். சர்மா அதைப் பார்த்துச் சிரித்தான். ''ஏன் சர்மாஜி! புரூச் நன்றாக இல்லையா?'' எனக் கேட்டான் பாலு.

''இல்லை, சரியான ஆளைப் பார்த்து வாங்கி வந்தாயே! அவளுக்கு வீட்டைத் தேய்க்கும் 'பிரஷ்' வாங்கிக் கொடுத்தால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வாள். போயும் போயும் தலையில் அணியும் 'பின்' வாங்கி வரத் தோன்றிற்றே! உன் அறிவை என்ன சொல்ல?' — என்று கூறிச் சிரித்தான் சர்மா.

''பரவாயில்லையப்பா. சல்தா ஹை! — இதை உன் மருமகளுக்கு அணியக் கொடு. என் நினைவு அதுவரையில் இருக்கவேண்டும்.. அதனால்தான் 'பின்' வாங்கி வந்தேன். பாபிஜிக்கு (அண்ணி) இம்மாதிரிப் பொருட்களின் பேரில் நாட்டம் கிடையாது என்பது எனக்குத் தெரியாதா என்ன?'' — என்று பாலு பதிலளித்தான்.

அன்றைக்குச் சிரிப்பொலி பலக்கத் தொடங்கியது. சீதாவும் ரமாவும் தத்தம் 'பர்சனல்' விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். திடீரென்று சீதாவின் கையில் ஒரு 'முத்து பிரேஸ்லட்' மினுமினுத்தது ரமாவின் கவனத்தைக் கவர்ந்தது.

''அரே! இந்தப் பிரேஸ்லட் எப்போது வாங்கினாய் சீதா? உனக்கு ரொம்ப அழகாக இருக்கிறது'' என்று தொட்டுத் தொட்டுப் பிரேஸ்லட்டைப் பார்த்த வண்ணம் ரமா கேட்டாள்.

''அங்கேதான் 'ஜோக்' இருக்கிறது. உன் 'பையா' பாலுஜி எனக்கு பிரேஸ்லட் வாங்கித் தந்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார் போ! நேற்று மகாலக்ஷ்மி கோவிலுக்குப் போயிருந்தேன். ஒரே கூட்டம். ஒரு பெண்ணின் கையில் இது இருந்தது. குழந்தையும் கையுமாக அவள் கூட்டத்தில் நின்று திணறிக் கொண்டிருந்தாள். சமயம் பார்த்து நைசாகக் கழற்றி என் ஹாண்ட் பாக்கில் போட்டுக் கொண்டு வந்து விட்டேன். அதுதான் இது. எப்படி?'' என்று படபடவென்று பொரிந்தாள் சீதா.

ரமாவுக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்தாற்போலிருந்தது. அவளுடைய மலர்ந்த முகம் வாட்டமடைந்தது. இப்படியும் ஒரு ஆசையா? இப்படி ஒரு ஜோடனை தேவைதானா? பல கேள்விகள் ரமாவை அம்புகளைப் போல் தாக்கின.

சீதாவும் பாலுவும் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினர். மாலை நேரம். சர்மா அன்புடன் ரமாவைப் பார்த்தபடி நின்றான். ''சீ ஷரம் நஹி ஆதி! வெட்கமாக இல்லையா? ஏன் இப்படி முறைத்துப் பார்க்கிறீர்கள்?'' என்று பெருமையுடன் சர்மாவைக் கடிந்து கொண்டாள் ரமா.

''ரமா, கஹோ நா' — கேள். நாளை மாலை சுமார் ஏழு மணிக்கு நாமிருவரும் பாலுவின் வீட்டுக்குச் செல்வோம்... இல்லை, இல்லை. உன் தோழி சீதாவின் வீட்டுக்கு! என்ன, 'ஹாங் போலோ!' — சரி என்று சொல்.'' சர்மா ரமாவின் தோள்களை உலுக்கியபடி கேட்டான்,



''எப்படிடா கையில் காசில்லாத போதும் பயமில்லாம அந்த ஓட்டலில் உன்னால் டிபன் சாப்பிட முடிஞ்சது...!''

''அந்த ஓட்டல்லே கல்லுரல் கிடையாது-கிரைண்டர் வாங்கியிருக்காங்கன்னு எனக்குத் தெரியும்.''

—கிணத்துக்கடவு ரவி

ரமாவின் முகம் வாட்டம் அடைந்தது. சர்மா திடுக்கிட்டான். ஏன் இப்படி முகத்தில் வருத்தம்? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''ரமா! என்ன விஷயம்? முகத்தில் ஏன் வாட்டம்? காரணம் என்ன? உடல்நிலை சரியாக இல்லையா? அல்லது சீதாவுடன் ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டதா?'' சர்மா கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றான்.

ரமாவினால் அதிகம் பேச முடியவில்லை. ''என்னை மன்னித்துவிடுங்கள். நாம் சீதாவின் வீட்டுக்குப் போக வேண்டாம். இனிமேல் அவர்களையும் நம் வீட்டுக்கு அழைக்காதீர்கள். காரணம் இப்போது கேட்க வேண்டாம். எனக்கே தோன்றும்போது உங்களிடம் நிச்சயம் கூறுவேன்'' என்றாள்.

சர்மா கற்சிலை போல் நின்றுவிட்டான்.

''இதென்ன வியப்பாக இருக்கிறதே! என் டிரஸ்ஸிங் டேபிள் டிராயரில் முத்துப் பிரேஸ்லெட் வைத்திருந்தேன். அதைக் காணோம். அதற்குப் பதில் பச்சைக் கல் பிரேஸ்லெட் இருக்கிறதே! அதெப்படி?'' சீதா பரபரப்புடன் பாலுவைக் கேட்டாள்.

காப்பியை ரசித்துக் கொண்டிருந்த பாலு டம்ளரைக் கீழே வைத்துவிட்டுச் செய்தித்தாளின் பக்கத்தைப் புரட்டி மடித்தபடியே புன்முறுவலுடன் சீதாவைப் பார்த்தான்.

''அங்கேதான் 'ஜோக்' இருக்கிறது!''— பாலு புதிர் போட்டபடி வாக்கியத்தை நிறுத்தினான்.

''எப்படி இது வந்தது! சொல்லுங்களேன், ப்ளீஸ்!'' — சீதா மன்றாடினாள்.

''நேற்றுக் காலையில் செய்தித் தாளில் ஓர் அறிவிப்பு வெளிவந்திருந்தது. மகாலக்ஷ்மி கோவில் சென்று திரும்பிய ஒரு பெண்மணியின் பிரேஸ்லெட் காணவில்லையாம். அடையாளங்கள் முழுவதும் தெரிவித்து, தயவு செய்து கண்டவர் கீழ்க்கண்ட விலாசத்துக்குக் கொண்டு சேர்க்கவும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. காலையில் முகப்பவுடரை எடுக்க உன் டிரஸ்ஸிங் டேபிள் டிராயரைத் திறந்தேன். அதே முத்துப் பிரேஸ்லெட்டைக் கண்டதும் எடுத்து ஓடோடிச் சென்று அதற்கு உரியவரிடம் சேர்த்து விட்டேன். திரும்பி வரும்போது உனக்காகப் பச்சை பிரேஸ்லெட் வாங்கி வந்துவிட்டேன்.

''இந்தப் பச்சைக் கற்களைப் போன்ற பசுமையான எண்ணங்கள்தான் உள்ளத்தில் உதிக்க வேண்டும். பழுப்பான எண்ணங்களுக்கு உள்ளத்தில் இடம் இருக்கக்கூடாது. சரிதானே?'' — என்று பாலு கேட்டபடியே சீதாவின் அருகில் வந்தான்.

சீதாவின் கண்களிலிருந்து முத்துக்களைப் போன்ற துளிகள் பொல பொலவென்று உதிர்ந்தன.

● ● ●

''பாலு!''

''யாரது? வாசற் கதவைத் திற சீதா.''

''அடே, சர்மா! இதென்ன திடீர் விஜயம்!''

''அதை ஏன் கேட்கிறாய் போ! இந்தக் கணம் நான் சீதாவைப் பார்த்தாக வேண்டும் என்று ரமா என்னைப் படாத பாடு படுத்தி விட்டாள். அவளுடைய ஆசையைப் பூர்த்தி செய்தாக வேண்டுமே என்று அழைத்துக்கொண்டு ஓடோடியும் வந்தேன்! பஸ்! அவ்வளவுதான். இன்று உங்கள் வீட்டில்தான் சாப்பாடு!'' சர்மா வேகமாகப் பேசி நிறுத்தினான்.

''தாராளமாக!'' என்று சிரித்தபடியே சீதா கூறினாள். அவளுடைய கையில் பச்சைக் கல் பிரேஸ்லெட் பளபளத்தது.

## தெரியுமா?

அழைத்து அரைமணிக்குப்பின்
வந்தாள் என் மனைவி
''வள்ளுவர்—வாசுகி கதை
உனக்குத் தெரியுமா?''- என்று கேட்டேன்...
''தெரியும் அன்பரே..
அவர் போல் ஒரு குறள்
எழுதிக் காட்டுங்கள்
அழைத்த அரை நொடியில் ஓடி
வருகிறேன்...'' என்றாள்.
ஐயோ, நான் என்ன செய்வேன்...

—புன்னகை மன்னன்



# ஒற்றன் 4X-1 சித்திரக்கதை: புஞ்ஜாய் 11




சர். ஏ. ராமசாமி முதலியார் இளைஞராக இருக்கும் பொழுது சலூன் ஒன்றில் நுழைந்தார். முகக்ஷவரம் செய்யும்படி நாவிதரைக் கேட்டுக் கொண்டார். நாவிதர் "தம்பி! முகக்ஷவரம் செய்யும் அளவுக்கு உனக்கு வயதாகி விட்டதா?" என்று கேட்டார். முதலியார் மிடுக்காக "இரண்டு மணிக்கொரு தடவை நான் 'ஷேவ்' செய்து கொள்வேன்" என்றார். "அடுத்த இரண்டு மணிநேரத்துக்குள் உனக்குத் தாடி வளர்ந்தால் நான் உனக்கு இனாமாக ஷேவ் செய்கிறேன்" என்று சலூன்காரர் முதலியாருக்கு ஷேவ் செய்து முடித்தார். பின்னர் இரண்டு மணி நேரம் கழித்து நல்ல தாடியுடன் வந்த இளைஞரைப்பார்த்த சலூன்காரர் அசந்து விட்டார். சோதித்து உண்மைத் தாடியென அறிந்து கொடுத்த வாக்குப்படி இனாமாக ஷேவ் செய்தார். இப் பொழுது வந்த இளைஞர், சகோதரர் ஏ. லட்சுமணசாமி முதலியார் என்பது பாவம், அவருக்குத் தெரியவில்லை!

—கே. சம்பத்குமார்

X

தாய்லாந்தில் உள்ள ஒரு அதிசயமான ரயில் 1380 அடி உயரத்தில்




(தொடரும்)

இருந்து செங்குத்தாகக் கீழே இறங்கிச் செல்லுகிறது. மலை உச்சியில் இருந்து ஒரு பெரிய பாறையைக் கயிற்றைக் கட்டிக் கீழே இறக்கினால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இந்த ரயில் (டிராம்) இறங்குகிறது. ரயில் பெட்டியை இரும்புச்சங்கிலியில் கோத்துச் சங்கிலியைக் கீழே இறக்குகின்றனர்.

இதற்காக 5000 அடி நீளமுள்ள கனமான இரும்புக்கம்பியைப் பயன்படுத்துகின்றனர். கயிற்றின் ஒரு நுனி மலை அடிவாரத்தில் இருக்கிறது. மறு நுனி உச்சியில் இருக்கிறது. கீழ் நுனியுடன் ஒரு பெட்டி இணைக்கப் பட்டுள்ளது. மேல் நுனியுடன் ஒரு பெட்டி இணைக்கப் பட்டுள்ளது. மேல் நுனியைக் கீழே இறக்கினவுடன் கீழ் நுனி மேலே ஏற்றப் படுகின்றது. அதாவது மலைஉச்சியிலும், அடிவாரத்திலும் ஒரே நேரத்தில் ரயில் புறப்படுகிறது.

வழியில் உள்ள நிலையங்களில் ரயில் நின்றவுடன் கீழேயிறங்கி வரும் பெட்டி நிற்கும் அதே நேரத்தில் மேலே போய்க் கொண்டிருக்கும் பெட்டியும் நின்றுவிடும். பிரேக்கைப் பிடித்துக் கொள்வதுதான் டிரைவரின் வேலை.

—பி. நாராயணன்



நாரதரே தோள் பட்டையில் என்ன பிளாஸ்க்?
அய்யங்கார்ஸ் காபி. நாஜை திரிலோக சஞ்சாரி போன இடத்திலெல்லாம் கிடைக்கிறதா
சாமு
அய்யங்கார்ஸ் காபி கோ
சென்னை—600 002
சிந்தாதிரிப்பேட்டை போன்: 846100 மயிலாப்பூர் 76773 தி.நகர் 444338

# எதிர்பாராத அதிர்ஷ்டங்கள்!

**சி. சத்யா**

ரம்யா சமையலை முடித்து எல்லா வற்றையும் எடுத்து மூடிவைத்து விட்டுச் சமையலறையைச் சுத்தம் செய்து நிமிர்ந்தபோது மணி பன்னிரண்டு அடித்தது. கையைப் பார்த்தாள். ஒரே கரி. சோப்புப் போட்டு இரண்டு முறை கழுவியும் அது விடாமல் அவள் கையில் ஆசையாய் ஒட்டிக் கொண்டிருந்தது. சிறிது தேங்காய் எண்ணெயைப் போட்டுத் துணியால் துடைத்தாள். ம்ஹூம்... பிரயோசனமில்லை. ரம்யா ஒரு காலத்தில் தன் கையைப் பூப்போலத் தான் வைத்துக் கொண்டிருந்தாள். அம்மா இருந்தவரை ஒரு வேலை செய்ய மாட்டாள். பாவம் அவள் கையும் இப்படித்தான் இருக்கும்.

ம்...தான் ஒரு நாள் இப்படிச் சமையலறையில் நுழைந்து சமைப்போம் என்று கனவுகூடக் காணவில்லை. அவள் தாத்தா அமிர்தலிங்கம் காலத்தில் வீட்டில் இரண்டு சமையல்காரர்கள் இருந்தார்கள். அப்போதெல்லாம் பள்ளி செல்ல ரம்யாவுக்குத் தனிக் கார். அப்பாவுக்கு ஊர் சுற்ற தனிக்கார். செல்வமாகக் கொழித்த காலம். ஊரில் யாரும் அமிர்தலிங்கத்தைப் பெயர் சொல்லிக் கூப்பிட மாட்டார்கள், 'ஐயா' என்று மரியாதையோடுதான் அழைப்பார்கள். அமிர்தலிங்கம் பேச்சுக்குப் பேச்சு ரம்யாவை 'அமிர்தலிங்கத்தின் பேத்தி' என்று தனிப் பெருமையோடு கூறுவார், போயிற்று... எல்லாம் போயிற்று. ரம்யாவின் தாத்தா வாத நோய் வந்து படுத்த படுக்கையானதும் வியாபாரங்கள் எல்லாம் மெல்லப் படுக்கலாயின. அவர் மறைவுக்குப் பின் அவள் தந்தை சுந்தரலிங்கத்தால் சமாளிக்கவே இயலவில்லை. எல்லாம் போய் விட்டது. இப்போது இருப்பதெல்லாம் அந்தக் கால வளமான வாழ்க்கையின் விளைவால் 'மொழு மொழு'வென மெழுகுப் பொம்மையைப் போல இருக்கும் கடைசிப் பெண் ரம்யாவும் வறுமையும்தான். எப்படியோ இருந்தவற்றை யெல்லாம் விற்று முதல் மூன்று பெண்களையும் டாக்டர் என்றும் என்ஜினியர் என்றும் பிடித்துக் கொடுத்து விட்டார். ரம்யாவின் முறை வரும்போது சாதாரண ஒரு கிளார்க் வேலை பார்ப்பவனைக் கூட அவரால் பார்க்க இயலவில்லை.





ரம்யாவின் திருமணம் தடைப்பட்டு வருவதற்கு வறுமையைத் தவிர வேறு காரணமும் இருந்தது. தாத்தா அமிர்தலிங்கம் நிறையச் சொத்து வைத்துவிட்டுச் சென்றாரோ என்னவோ, நாம் பெரிய மனிதர் வீட்டுப் பெண் என்ற மமதையை நிறையவே வைத்து விட்டுச் சென்றிருந்தார். அது அவள் திருமணத்துக்குப் பெரும் தடைக் கல்லாக இருந்தது.

''டண்....''

மணி ஒன்று. அப்பாவுக்கு இலைபோட வேண்டும். சடக்கென்று எழுந்து கொண்டாள் ரம்யா.

''ஏம்மா, அவாளைப் பெண் பார்க்க வரச் சொல்லி லெட்டர் போட்டுடுவோமா, வரேன் வரேன்னு சும்மா எழுதறானே?''

''யாருப்பா?''

''அதாம்மா, அந்த அரிசிப்பாளையம் பையன். எத்தனை தரம் எழுதிட்டா இதோட.''

''என்னப்பா பண்றார்?''

''அவா என்னம்மா பண்ணணும்? அவாளுக்கு இருக்கிற சொத்து நாலு தலை முறைக்குக் காணும். அவ்வளவு பணக்கார இடம்.''

''ஓ! வேலை இல்லாத பையன்னு சொல்லு!'' கிண்டல் தொனித்தது குரலில்.

''......''

''சரி, என்ன படிச்சிருக்கான்?''

''அவாளுக்கு எதுக்கும்மா படிப்பு? ஏதோ ஏழாவதோ எட்டாவதோ படிச்சிருக்கான்.''

''படிப்பும் இல்லையா?.... ஏம்பா படிப்பு, வேலை ஒண்ணும் இல்லாத வீட்டிலே ஒக்காந்து சாப்பிட்டுண்டிருக்கிற சாப்பாட்டு ராமனை என் தலேலே கட்டப் பார்க்கிறீங்களா.... அவ்வளவுக்கு நான் என்ன குறைஞ்சு போயிட்டேன்? எனக்கென்ன அழகில்லையா? படிப்பில்லையா? அமிர்தலிங்கத்தோட பேத்தி அவ்வளவு மட்டமா?''

பொரிந்து தள்ளினாள் ரம்யா. அப்பா அசந்து போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்னடீது, உள்ள அப்பாவும் பொண்ணும் என்ன பண்றீங்க? தபால்காரர் கத்து கத்துன்னு கத்திட்டு விட்டெறிஞ்சுட்டுப் போயிட்டார்.... இந்தா''

''அட! அத்தே எப்ப வந்தே, கதவு தொறந்தா இருக்கு?''

''தொறந்தே கெடக்கு. யார் நுழைஞ்சாலும் தெரியாது. தனியா இருக்கும்போது இப்படி யெல்லாம் கதவைத் தொறந்து போட்டுட்டு இருக்காதேடி ரம்யா...உன்னை ஒருத்தன்கிட்ட ஒப்படைக்கிறவரை வயத்துல நெருப்பைக் கட்டிண்டு இருக்க வேண்டி இருக்கு.''

''ஆயிரம் தரம் சொல்லு உன் மருமககிட்ட. அதுக்குத்தான் நான்...''

''ஓ! அப்பா, அரிசிப்பாளையம் பணக்கார வீட்டில் பெண் கேட்ட கதையை ஆரம்பித்துவிட்டார். இனி அரை மணி நேரம் பேசுவார்''. என்று எரிச்சலுடன் உள்ளே சென்றாள் ரம்யா.

''ரம்யா.... அடி ரம்யா....''

''என்ன அத்தை?''

''ஏண்டி உனக்கு இந்தக் கோபம் வரது? மூஞ்சியைத் தூக்கி வச்சிண்டு....''

''பின்னே என்ன அத்தை பிடிக்காத காட்டானைப் போய்....''

''அவன் கெடக்கான் விடு. நான் கொண்டு வந்திருக்கேன் உனக்கு 'ஏ' கிளாஸ் மாப்பிள்ளை. அதுக்குத்தானே நான் போட்டது போட்டபடி ஓடிவந்தேன்...''

''படிச்ச பையனா தாமு?'' அப்பா பரபரத்தார்.

''எம். எஸ்ஸி. படிச்சிருக்கான். இப்பத்தான் வேலையிலேயும் சேர்ந்தான்.''

''என்ன வேலை?''

''இந்த ஓரமெல்லாம் தயார் பண்றானே அந்த ஆபீஸ்லே இருக்கான். ஐந்நூறு ரூபா சம்பளம்.''

''ஒரே பையனா?''

''அஞ்சு பொண்ணு ஒரு பையன். மூணு பேருக்குக் கல்யாணம் ஆச்சு. இன்னும் ரெண்டு பேர் இருக்கா. அம்மா, அப்பா எல்லாம் ரொம்ப நல்லவா.''

''சொத்துப் பத்து ஏதாவது இருக்கா அத்தை?''

''ம்ஹூம். அதெல்லாம் கிடையாது. பையன் படிச்சிருக்கான். உத்தியோகம் பாக்கறான். அவ்வளவுதான்.''

''......''

''என்னடீ பதிலைக் காணோம், இந்த இடத்துக்கு என்னடீ கொறைச்சல்?''


''சொத்துப் பத்துக் கிடையாது. ஐந்நூறு ரூபாய் சம்பளம். இதுல கல்யாணத்துக்கு வேறே ரெண்டு பொண்ணு! லட்சணந்தான். தினப்படி இத்தனை பேர் சாப்பாட்டுக்கே

டாக்டர்: ''கையைக் கொஞ்சம் லூசா விடுங்க ஸார்''!



# கல்கி - சாரதா'ஸ்

## பட்டுப்புடவைகள் பரிசுத்திட்டம்



இந்த வாரத்திய கேள்வியும் விடைகளும்:

**கேள்வி :**

**பெண் காரியாலயம் போகும் போது மறக்கக் கூடாதது எது?**

**விடைகள் :**

**கைப்பை - குடை - பேனா**

கஷ்டம். இதுல இவனுக்குக் கல்யாணம் வேறயா?''

''என்னமது! பணக்காரப் பையனைப் பார்த்தா படிச்ச பையனுக் கேக்கறே.... படிச்ச பையனைப் பார்த்தா பணக்காரப் பையங்கறே... கூத்தடிக்கிறே ரம்யா...''

''ஆமா அத்தை. கல்யாணம்னு எல்லாத்தையும்தானே பார்க்கணும்? படிச்சும் இருக்கணும். மலண்டா வேலையும் இருக்கணும். ஓரளவு சொத்துப் பத்தும் இருக்கணும்.''

''விடிஞ்சாப்லதான். இப்படி எல்லாம் ஒண்ணுக் கூடி வருமாடி?''

''வரபோது வரட்டும். இதெல்லாம் இல்லாம நிச்சயமா நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்!''

**''எ**ன்னடா பாஸ்கர், நான்பாட்டுக்குக் கேட்டுண்டே இருக்கேன். நீ இப்படியே பதில் சொல்லாம நழுவினா எப்படி.....ம்...?''

''என்னம்மா?''

''கம்மா என்னம்மா என்னம்மான்னு என்ன அர்த்தம்? டாக்டருக்குப் படிக்கணும்னே படிச்சே. அமெரிக்கா போயிட்டு வந்துடறேன்னே போயிட்டு வந்தாச்சு. உங்கப்பா சம்பாதிச்சிருக்கிற சொத்தே நாலு தலைமுறைக்குக் காணும். பொழுதன்னிக்கும் டிஸ்பன்ஸரிலே ஒக்காந்து யாருக்குச் சம்பாதிக்கிறே இன்னும்? ஒருத்தி வந்தாத்தான் நீ திருந்துவே... ஒரு கல்யாணத்தைப் பண்ணிண்டு என்னை வேணும் பண்ணு.''

''என்னம்மா அவசரம்?''

''அவசரம் என்னடா அவசரம்? ஒரே பையன். உனக்குக் கல்யாணம்பண்ணணும்னு எனக்கு ஆசை இருக்காதா? என்ஜினியர் பெண் நந்தினி ஜிலியாட்டம் இருக்கா!''

''.....''

''பேசேண்டா பாஸ்கர்.''

''அம்மா....''

''அம்மா, அம்மான்னு நழுவாதே. இன்னிக்கு நீ ஒரு பதிலைச் சொல்லிட்டுத்தான் போகணும். ஏண்டா நான் தெரியாமத்தான் கேக்கறேன். யாரையாவது மனசுல வச்சுண்டு சொல்லாம இப்படி நழுவறயா?''

''.....''

''என்ன சத்தத்தைக் காணும்? நான் அப்பவே நெனைச்சேன். யாருடா அது? கம்மா சொல்லு. யாரா இருந்தாலும் உனக்குப் பிடிச்சா சரி.''

''எனக்கே தெரியாதும்மா. ஒரு தரம் லைப்ரரிலே பார்த்தேன். ஒரு தரம் அஷ்டலட்சுமி கோயில்லே பார்த்தேன். அழகுன்னா அழகு அப்படி ஒரு அழகும்மா. பளிங்குச் சிலை மாதிரி இருக்கா. எப்படியாவும் வீட்டைக் கண்டு பிடிக்கணும். பார்த்தா பணக்கார வீட்டுப் பெண் மாதிரி இருக்கா.''

''பணக்காரியோ, ஏழையோ யாரா இருந்தாலும் சரி. வர்றவ ஒண்ணும் இங்கே கொண்டு வந்து கொட்ட வேண்டாம். உன் மனசுக்குப் புடிச்சாச் சரி. ஆனா ஊர் பேர் தெரியாத பெண்ணை இந்த மெட்ராஸிலே எப்படித் தேடறது? இதென்னடா பாஸ்கர் கூத்தா இருக்கு. நடக்கிற வேலையாடா?''

''நீ கவலைப்படாதேம்மா. எப்படியாவும் இன்னும் ரெண்டு நாளிலே நான் அவ வீட்டைத் தெரிஞ்சுண்டு வந்துடறேன் பாரு.''

''எனக்குத் தெரியாது. வர்ற ஞாயிற்றுக் கிழமை நந்தினி வீட்ல எல்லோரும் பாம்பே போறா. அதுக்குள்ள நீ உன் முடிவைச் சொல்லணும். ஆமா.''

''சரியம்மா.''

**சீ**தாவிடம் விடைபெற்றுக் கொண்டு ரம்யா கிளம்பியபோது மணி ஐந்து. சுகமான காற்று மேனியைத் தழுவ மெல்ல நடந்தாள். அந்தத் தெரு தாண்டியதும் திருப்பத்தில் அவளைப் பார்த்து விட்டபாஸ் கருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. 'ஆகா! கடவுளுக்குத்தான் எத்தனை கருணை! இவளை எங்கே தேடுவது, அம்மாவை இனி சமாளிக்க இயலாதெனக் கவலைப்பட்டேனே!' தன் ஸ்கூட்டரில் அவளைத் தூரத்திலேயே தொடர்ந்தான். அவனுக்கு என்னவோ போல் இருந்தது. அவன் பெண்கள் பின் சுற்றும் சபல புத்தி உடையவன் அல்ல. என்ன செய்வது, எப்படியேனும் தூரத்திலிருந்தே அவள் வீட்டைமட்டும் தெரிந்து கொண்டு போய்விட்டால் மற்ற விஷயங்களை அம்மா பார்த்துக் கொள்வாள்.

'நிச்சயமாக இவன் நம்மைத்தான் தொடர்ந்து வருகிறான்.! மூன்றாவது முறை

யாகத் திரும்பிப் பார்த்தாள் ரம்யா. இவன் ஏன் தன்னைத் தொடர்ந்து வருகிறான்? பார்த்தால் டீஸண்டாக, படித்தவனாகத் தெரிகிறான். இவனை முன்பே எங்கோ பார்த்திருக்கிறோமே எங்கே....ம்... பணக்காரப் பையன் போலும். அவள் மனத்தில் தன் அழகை நினைத்து ஒரு கர்வம் குபீரெனப் பொங்கியது.

ஆயிற்று. இந்தத் தெருவைத் தாண்டி அடுத்த சந்தில் திரும்பினால் வீடு. ஆனால்... திடீரென்று ஒரு தயக்கம் அவள் மனத்தில் படர்ந்தது. இவன் காண நாம் நம் ஓட்டை வீட்டுக்குள் நுழைவதா?... நம்மைப் பற்றி மிக உயர்வாக நினைத்திருப்பானே... நாம் அந்த வீட்டுக்குள் நுழைவதைக் கண்டால் 'பாவம்' எனப் பரிதாபப்படுவானோ? அந்த நினைவே கசந்தது. ம்... என்ன செய்யலாம்? சரேலெனப் பக்கத்தில் இருந்த பெரிய வீட்டில் சுவாதீனமாகத் தன் வீடு போல் நுழைந்து கேட்டைச் சாத்தினாள். தோட்



டக்காரன் 'என்னம்மா' என்றபடி அவசரமாக வந்தான்.

''ஒண்ணுமில்லே, தண்ணி....''

''அதோ குழாயிலே குடிச்சுட்டுப் போங்க''

மெல்ல எட்டிப் பார்த்தாள். தூரத்திலிருந்தே இவள் வீட்டினுள் நுழைவதைக் கண்டவன் ஸ்கூட்டரைத் திருப்பிக்கொண்டு எப்போதோ போய்விட்டிருந்தான். ரம்யா திருப்தியுடன் வீடு நோக்கி நடந்தாள்.

**ம**றுநாள் கூடை கூடையாய்ப் பூ பழங்களுடன் அம்மாவுடன் வந்திறங்கிய பாஸ்கரை வாயிலில் தொங்கிய பூட்டு வரவேற்றது.

''ஏம்பா வீட்டுக்காரங்க வெளியிலே போயிருக்காங்களா?''

''வீட்டுக்காரங்களா? அவங்க இந்த ஊரிலேயே இல்லையே. இது வைரவன் செட்டியார் வீடு. அவர் ரெண்டு வருஷமா சிங்கப்பூர்லதான் இருக்காரு. வீடு பூட்டியே இருக்கு. நான்தான் தோட்டத்தைப் பார்த்துக்கறேன்.''

''என்ன ஒரு வருஷமா பூட்டி இருக்கா?''

''ஆமா. உங்களுக்கு வாடகைக்குப் பாக்க வந்திங்களா ஸார்?''

''ம்... இங்கே ஏதேனும் அவுட் ஹவுஸ் இருக்கா?''

''இல்லையே. அதோ அந்தக் குடிசைல தான் நான் இருக்கேன் வேற... இங்க வீடு ஒண்ணும் தோதா இல்லே. அதோ அந்த மூணு வீட்டிலேயும் காலேஜ்ல படிக்கிற பசங்க, வேலே பார்க்கறவங்க... இப்படி ஆம்பளைங்களாத்தான் இருக்காங்க. நீங்க சின்ன வீடா பார்க்கிறீங்களா?''

''வேற குடும்பமா இருக்கிற வீடே இல்லையா?''

''இந்தத் தெருவிலே இல்லீங்க...ஏங்க?''

''ஏம்பா உனக்கு எத்தனை பசங்க?''

''நமக்கு ஒரே பையன்தான்.''

''சரி வாடா பாஸ்கர்.''

அம்மாவுக்கு இதற்கு மேல் பொறுமை இல்லை. மௌனமாகத் திரும்பினான் அவன்.

''என்னடா இது?இதுலேதான் போனாளா? வீடு ஒரு வருஷமா பூட்டி இருக்காம். இங்கெல்லாம் குடும்பமே இல்லையாம். ஆம்பளையாத்தான் இருக்காங்களாம். இங்கேயா வந்தா? டேய் பாஸ்கர் நீ சொல்றது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலே. ஊர் பேர் தெரியாத பெண்ணைப் போய்...''

''என்னம்மா நீ, ஒரேயடியா...''

''பின்னே என்னடா நான் சொல்றதில் ஏதாவும் தப்பிருக்கா?''

'ம்...இவள் கூறுவதும் நியாயம்தானே. அழகிருந்தால் போதுமா? நல்ல பெண்ணாக இருக்க வேண்டாமா? இங்கு ஏன் வந்தாள்?.. சே! நமக்கெதற்கு வம்பு?'

''அம்மா, நீ சொன்ன என்ஜினியர் பெண்ணையே பண்ணிக்கிறேன்.''


''அப்படிச் சொல்லு. பொண்ணெடுக்கிறதெல்லாம் பார்த்து எடுக்கணும்டா. இன்னைக்கு நல்ல நெறைஞ்ச நாளுதான். இங்க கௌம்பினதுக்கு அங்கேயே போவோமே... இன்னிக்கு வீட்டிலேதான் இருப்பார். என்ன சொல்றே?''

''சரியம்மா.''

''வீடு தெரியுமில்ல? அங்கேயே ஓட்டு.''

**பா**யைத் தட்டிப் போட்டாள் ரம்யா. நடுவில் கிழிந்திருந்தது. ம்... வேற பாய் வாங்கக்கூட முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தவளின் கற்பனையில் ஸ்கூட்டரில் கண்ட வாலிபன் புன்னகைத்தான்.

சே! அர்த்தமில்லாமல் இதென்ன நினைப்பு. தான் அவனை ஏமாற்றியதை நினைத்தாள். அவளுக்கே சிரிப்பு வந்தது. பகலில் வேலை செய்த களைப்பால் சிறிது நேரத்தில் தன்னையறியாது தூங்கிப் போனாள். படிப்பிருந்தால் சொத்தென்றும், சொத்திருந்தால் படிப்பென்றும் ஆசைப்பட்டவளுக்கு இரண்டும் உள்ள பையன் தன்னைத் தேடி வந்துவிட்டுப் போனது தெரியாது. அவளைத் தேடி ஸ்கூட்டரில் வந்த அதிருஷ்டம் அவளுடைய வீண் ஜம்பத்தால், வேகமாகக் காரில் போய்விட்டது தெரிந்திருந்தால் அவள் அவ்வளவு நிம்மதியாகத் தூங்கியிருக்க மாட்டாள்!


ஹேமா ஆனந்ததீர்த்தன்
எழுதும்
இரக்கமற்ற இரவுகள்
கல்கி ஏப்ரல் 13
சித்திரைச் சிறப்பிதழில் ஆரம்பம்
எது முக்கியம்?
காதலா அல்லது பாசத்தின்
விளைவான தியாகமா?
விசித்திரமான ஒரு சூழலில்
சிக்கித் தவிக்கும்
ஒரு குடும்பத்தின்
உருக்கமான
சித்திரம்

உரையாடலில் பங்கு பெறுகிறவர்கள்:

திருமதி வனிதா சுப்ரமணியம்
—காரியாலயம் செல்லும் இல்லத்தரசி
திருமதி சிதா ப்ரீதம் மெஹ்ற பூபாணி
—பாகஸ்தர், பாலாஜீ மந்திர் டெக்ஸ்டைல் ஷாப்.
ஆர். லக்ஷ்மி
மத்திய அரசாங்கக் காரியாலயத்தில் பணிபுரிபவர்.
திருமதி வனிதா கிருஷ்ணகுமார்
—டாக்டரின் மனைவி, இல்லத்தரசி.
திருமதி தங்கம் சந்திரமோகன் —இல்லத்தரசி
திருமதி ஜோதி அச்சுத் —இல்லத்தரசி

●

தங்கம்: வாங்கோ ஜோதி வாங்கோ வாங்கோ!

லக்ஷ்மி: என்ன ஜோதி இவ்வளவு லேட்? வா, வா.

வனிதா: வாங்க வாங்க ஜோதி.

ஜோதி: அடேயப்பா, எத்தனை அமர்க்களமான வரவேற்பு எனக்கு? எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. போன வாரம் எங்க வீட்டுத் திருமணத்துக்கு வந்திருந்த வெளி நாட்டினர் ஒருவர் ''எத்தனை நீள ரிசப்ஷன் நீங்க தந்தீங்க!'' என்று வியந்து சொன்னார். ''நீள ரிசப்ஷனா?'' என்று நான் திரும்பக் கேட்ட போதுதான் நாம்ப வாங்கோன்னு கூப்பிடறது, சந்தனம் குங்குமம் தருவது, மலர் தருவது, பன்னீர் தெளிப்பது, கற்கண்டு தருவது இவைகளைக் குறிப்பிடுகிறார் என்று புரிந்தது. ''எங்கள் பண்பாட்டில் இத்தகைய முறை இல்லையே!'' என வருத்தப்பட்டார்.

லக்ஷ்மி: வனிதா! கல்யாணத்தின்போது மட்டும் நீள வரவேற்புக் கொடுத்துவிட்டால் ஆச்சா? நம் நாட்டில் சிலபெண்மணிகள் இருக்கிறார்கள். நவராத்திரிக்குக் கூப்பிடுவார்கள். போனால் வாய் நிறைய வா என்று சொல்லத் தெரியாது. வேண்டா வெறுப்புடன் தலையை ஒரு அசைப்பு. நாம் என்ன வேலை வெட்டி இல்லாதவர்களா?

வனிதா: கல்யாணம், கார்த்திகைன்னதும் நினைவு வருகிறது. இந்தத் தங்கம் எப்படி விலை ஏறுகிறது பார்த்தீங்களா? இந்த மாதிரி போனால் தாலி செய்யக் கூடத் தங்கம் வாங்க முடியாது போலே இருக்கே!

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

## ஸ்கூட்டர் பின்னால் அமர்ந்து செல்ல

1. மிகவும் வழுவழுப்பான, நழுவும் உடைகள் நல்லதல்ல.
2. புடவையின் முன் கொசுவங்களைச் சேர்த்து நிலோக ஒருபின் போட்டாலோ, பின் குத்தி வைத்தாலோ புடவை காற்றில் விரிந்து மறைக்காது. அதனால் வண்டியின் சக்கரத்தில் புடவை சிக்காது.
3. கைப்பையை மடியில் வைத்துக் கொண்டு விட்டால் மிகவும் வசதி.
4. புடவைத் தலைப்பை இறுக்கமாகச் சொருகிக் கொண்டு விடுவது நல்லது.
5. தலையில் ஒரு ஸ்கார்ஃப் கட்டிக் கொண்டால் காற்றினால் கேசம் பறந்து கலையாமல் இருக்கும்.



ஜோதி: தாலி யெல்லாம் அப்புறம் வந்த பழக்கம்தானே! திருமணச் சடங்கில் முக்கியம் பாணிக்கிரஹணம்தான்.

லக்ஷ்மி: கலியாணங்களிலே அனாவசிய ஆடம்பரங்களைக் குறைத்தாலே போதும். தாலிக்கு வேணா தங்கம் வாங்கக் காக இருக்கும். என்னைக் கேட்டா மதச் சடங்குகளை நெருங்கின உறவுக்காரங்களோடு செய்யட்டும். ஒரு ஹாலிடேயில் எல்லோரையும் கூப்பிட்டு ரிசப்ஷன் தரட்டும். போதுமே!

ஜோதி: முன்பெல்லாம் பெண்ணுக்குச் சொத்துரிமை எனச் சட்டத்தில் இடையாது. அதற்குப் பதில் மறைமுகமாகக் கல்யாணத்தின்போது கொடுத்து வந்தார்கள். பொருள்களாகவும் நகைகளாகவும் விரும்பிச் செய்து விடுவார்கள். அது இப்போது கட்டாயமாக ஒரு நிபந்தனையாக மாறிவிட்டது.

வனிதா: வரதட்சிணை என்று கொடுக்கிற பணம் அந்தப் பெண்ணுக்கோ பையனுக்கோ சிறிதும் பயன்படுவதில்லை. கொடுக்கும் வெள்ளிப் பாத்திரங்களும் நகைகளும் பாங்க் லாக்கரில் இருக்கிறது. சுத்த வேஸ்ட். செல்வம் மேலும் செல்வத்தை உற்பத்தி செய்யுமாறு பயன்படுத்தப்பட வேண்டுமே. ஆகிய உபயோகமே இல்லாமல் முடக்கிக் கிடந்தால் தேசத்துக்கே நஷ்டம்.

சீதா: ரொம்பக் கரெக்ட் வனிதா. இந்தப் பணத்தை மணமக்கள் பேரில் டெபாசிட் செய்தால் அது பயனுள்ள தொழில் ஒன்றுக்குப் பயனாகும். மணமக்களுக்கும் வட்டித் தொகை வந்து கொண்டிருக்கும்.

ஜோதி: இப்போதெல்லாம் கணவன் மனைவி இரண்டு பேரும் வேலைக்குப் போறாங்க. குழந்தை பாடு ரொம்பக் கஷ்டமாயிடுகிறது. இது ஒரு பெரிய பிரச்சினை இல்லையா?

# மனம் விட்டு பேசலாம்!

சீதா: அதற்குத்தான் 'க்ரெச்' இருக்கிறதே! அங்கே விட்டுச் செல்வதுதானே முறை?

லக்ஷ்மி: க்ரெச் என்ன எல்லா இடங்களிலும் இருக்கிறதா?

வனிதா: இது ரொம்பப் பெரிய பிரச்னை. நான் நிறைய அவஸ்தைப் பட்டிருக்கேன். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுமாறு வேலைக்காரர்களை எவ்வளவு தாஜாசெய்ய வேண்டியிருக்கிறது?

வனிதா: எத்தனை பெண்கள் எட்டாம் வகுப்பு, ஒன்பதாம் வகுப்போடு மேலே படிக்க வழியில்லாமல் நிறுத்தி விடுகிறார்கள்! அவர்களை பேபி சிட்டிங்குக்குப் பழக்கினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். நமக்கும் நம்பிக்கையான நாகரிகம் தெரிந்தவர்களிடம் விட்டு வந்தால் நிம்மதி. குழந்தையின் பழக்க வழக்கங்களும் சீராக இருக்கும்.

தங்கம்: அது சரி, ஊர் பூராவும் கொலையும், கொள்ளையுமா யிருக்கே. வீட்டுக்குள்ளே இருக்கக் கூடப் பயமாகத்தான் இருக்கு.

சீதா: இருவரும் வேலைக்குப் போவதாயின் வீட்டைப் பூட்டிவிட்டுப் போவது சற்று பயமாகத்தான் இருக்கிறது. தினசரி பூட்டுவதைப் பார்த்தால் திருடு ஒரு நாள் நடந்து விடும்.

வனிதா: இன்னொரு பயமும் இருக்கிறது. எம். ஈ. எஸ்., டெலிபோன் எனச்சொல்லிக்கொண்டு நுழைபவர்களை உள்ளே விடவும் முடியவில்லை. விடாமல் இருக்கவும் முடியவில்லை.

ஜோதி: நானும்தான் கேட்கிறேன். இவர்கள் ஏன் ஆண்கள் இல்லாத சமயமா வரணும்? பத்து மணிக்கு முன்பு வந்து விடலாம் இல்லையா?

லக்ஷ்மி: நீ சொல்றது என்ன நியாயம்? அவர்கள் காரியாலயமும் பத்து மணிக்குத்தானே துவங்குகிறது?

தங்கம்: மக்கள் வசதிக்கு ஏற்ப அவர்கள் நேரத்தை மாத்திக்கத்தான் செய்யணும். இல்லையென்றால் மாதத்தில் குறிப்பிட்ட தேதியில் வருவதாகச் சொல்லட்டுமே! நமக்கும் நிம்மதியாய் இருக்கும். அவர்கள் பேரைச் சொல்லிக் கொண்டு மற்றவர்கள் நுழைய முடியாதே!

லக்ஷ்மி: இதுவும் நல்ல யோசனைதான் இன்னொரு பெரிய கஷ்டம், இந்த ரேஷன் கார்டு. அவர்கள் நாம் காரியாலயம் போன பிறகுதான் வருகிறார்கள். நாம் இல்லையென்றால் ஓர் இடத்தைக் குறித்து அங்கு வந்து வாங்கிக்கொள் என்கிறார்கள். அங்கு போனால் காக்க நேர்கிறது. இதற்காக ஒரு நாளோ பல நாட்களோ விடுமுறை எடுக்கும்படி ஆகி

✕ திருமதி லலிதா சுப்பிரமணியம், திருமதி சீதா மே பூமாணி, ஆர். லக்ஷ்மி, திருமதி வனிதா கிருஷ்ண குமார், திருமதி தங்கம் சந்திர மோகன், திருமதி ஜோதி அச்சுத்.



**நதி:** எத்தனை கஷ்டங்கள்! இதனாலேயே பல குடும்பங்கள் ரேஷன் கார்டு இல்லாமல் இருக்கின்றன.

**கீதா:** இந்தக் காரியாலயங்கள் மக்கள் வசதிக்காக ஞாயிறு அன்று வேலை செய்தால் நன்றாக இருக்கும்.

**வனிதா:** ஒய்வு பெற்ற ராணுவ வீரர்கள் இருக்கிறார்களே அவர்கள் பகல் வேளையில் நம் வீட்டின் பந்தோபஸ்துக்கு உதவலாமே? அரசாங்கம் ஒரு தெருவுக்கு ஒருவர் என்றோ, பேட்டைக்கு ஒரு பத்துப் பேர் என்றோ வைத்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்? நாமும் வேண்டுமானால் மாதா மாதம் ஏதாவது ஒரு நியாயமான தொகையைப் பாதுகாப்பு நிமித்தம் செலுத்தலாமே!

**வனிதா:** தங்கம், உங்க புகைப்படம் அன்று எடுத்தது பார்த்தேன். நீங்க ரொம்ப அழகாக இருக்கீங்க. இயற்கையாக இருக்கிறது.

**தங்கம்:** அதுலே ஒரு ரகசியம் இருக்கிறது. வனிதா, புகைப்படத்துக்கு நிற்கும் போது இரண்டு கால்களையும் சேர்த்து அட்டென்ஷன் போஸில் நிற்கக் கூடாது. வலது காலைச் சற்று முன்னால் வைத்து நின்றால் தோற்றம் எடுப்பாக இருக்கும்.

**ஜோதி:** காலையிலே உங்க வீட்டுக்கு ஃபோன் செய்தாலே தனி உற்சாகம் வருகிறது. வனிதா, சின்னக் குழந்தை ஃபோனை எடுத்தால் கூட அழகாக 'வணக்கம்' என்றோ, 'குட்மார்னிங்' என்றோ சொல்கிறது. நன்றாகப் பழக்கியிருக்கிறாய். ஹல்லோ என்று துவங்கினால் போதும். 'யாரது?' என அதட்டுகிறாற் போலும் சிலர் கேட்கிறார்கள். இது பேசுபவர்களின் உற்சாகத்தையே குறைத்து விடுகிறது.

**வனிதா:** நாழியாகிறது. பால் வந்துவிடும். நான் புறப்படுகிறேன்.

**ஜோதி:** பாக்கெட் பால் கூட வரவரத் தண்ணியா இருக்கு. இன்ஜெக்ஷன் ஊசியால் பாலை எடுத்துக் கொண்டு தண்ணீரைக் கலந்து விடுவதாகச் சொல்கிறார்கள். எது நிஜமோ தெரியவில்லை.

**தங்கம்:** இதைவிட மேலும் சில சமயங்களில் பாலை வாங்கி அடுப்பில் வைத்ததும் திரிந்து விடுகிறது. இதற்குப் பணத்தைத் திருப்பித் தரமாட்டேன் என்கிறார்கள். வேறு பாலும் தரமாட்டேன் என்கிறார்கள். என்ன செய்வது? இந்த மாதிரிப் பணம் வீணாகும்போது மனத்துக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது!

**லக்ஷ்மி:** மொத்தத்தில் எதை யாரிடம் சொல்லி நியாயம் கேட்பது என்றே தெரியவில்லை. ஏதோ நம் குறைகளையும் எண்ணங்களையும் மனம் விட்டுப் பேசிக் கொள்ளவாவது கல்கி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததே! சரி, நான் வரட்டுமா?

(ஒருவருக்கொருவர் விடைபெற்றுப் புறப்படுகிறார்கள்.)

உரையாடல் ஏற்பாடு: குமிலி ராஜேஸ்வரி
புகைப்படங்கள்: உத்ரா

---

# பள்ளிவிட்டான் பரவசமடைந்




ராமநாதபுர மாவட்டம் கமுதி அருகே அபிராமம்-பள்ளபச்சேரி என்ற ஊரைச் சேர்ந்தவர் பள்ளிவிட்டான். இவரது பசுமாடு ஒன்று சமீபத்தில் மூன்று கன்றுக் குட்டிகளை ஒரே சமயத்தில் பிரசவித்தது. ஒன்று காளங் கன்றும் இரண்டு பெட்டைக் கன்றுகளும். மூன்று கன்றுகளும் தாயினிடம் பரவசமாகப் பால் அருந்தும் காட்சியைப் படத்தில் காணலாம்.

-கமுதி திராவிடமணி


அழகும் தரமும் இணைந்த அரிய படைப்பு!
புதிய பிலிப்ஸ் வாலியண்ட்
4-பாண்டு டிரான்ஸிஸ்டர்களில் சிறந்தது
ஒலித் தரமும் உயர்ந்தது!
அரிய அமசங்கள்:
ஒலி, மற்றும் ஓசை நயத்திற்கென அழகிய கண்ட்ரோல்.
வசதியான பாண்ட் தேர்வுக்கென. டீலக்ஸ் க்ரோம் புஷ் பட்டன்கள்.
உருண்டையான குமிழ்.
பாட்டரியிலிருந்து மெயின்ஸுக்கு மாற்றும் வசதி
ரூ.595/-*
பிலிப்ஸ்
இந்தியாவில் 50 ஆண்டுகள்
*சில்லறை விற்பனை உச்ச விலை, எக்ஸைஸ் வரி உள்ளிட்டது. மாநில விற்பனை வரி மேலும் இதர நல வரிகள் தனி.
PHILIPS
CASPR-717-172-TM





**பு**துக்கோட்டை ராஜா அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி. இக்கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருந்த சமயம். 'கல்கி' தனது 'க்விஸ்' நிகழ்ச்சியை இக்கல்லூரியில் நடத்த முன்வந்ததை அறிந்து கல்லூரி முதல் வரிலிருந்து, ஆசிரியர்கள், மாணவர்கள், பணி புரியும் கடைநிலை ஊழியர் வரை எல்லோரிடத்திலும் வார்த்தைகளில் விவரிக்க இயலாத மகிழ்ச்சி வெள்ளம். கல்லூரி முதல்வர் திரு ரெங்கராஜனும் ஆங்கிலப் பேராசிரியர் திரு T. D. சுப்பிரமணியன் அவர்களும் வெகு சிறப்பாக நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். 'கல்கி'யின் கேள்விகளைக் கொண்டு உதவிப் பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியன் அவர்கள் க்விஸ் மாஸ்டராகப் பொறுப் பேற்று நிகழ்ச்சிகளை நடத்தித் தந்தார். கீழ்க்கண்ட ஆறு மாணவர்கள் க்விஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

1. ஆர். சுரேஷ்
2. எஸ். சட்டநாதன்
3. வி. ரவிச்சந்திரன்
4. பி. ஸ்ரீனிவாசன்
5. ஜெ. செம்பரநாதன்
6. ஆர். ராஜகோபாலன்

**கேள்விகள்:**

1. சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தது யார்?
(சரியான பதிலை அளித்தவர் திரு சுரேஷ்)
2. திருமதி ருக்மிணி தேவி நடத்தும் நாட்டியப் பள்ளியின் பெயர் என்ன?
(இக்கேள்விக்கும் சுரேஷ்தான் சரியான பதிலை அளித்தார்.)
3. உலக அரங்கில் மிகப் பெரிய ரயில்வே நிலையம் எங்குள்ளது?
(திரு ரவிச்சந்திரன் சரியான விடையைக் கூறினார்)

✖ போப் பால்

✖ ருக்மிணி தேவி


✖ எஸ். வி. சுப்பையா

✖ இரு மாணவர்களின் இன்னிசை

✖ கல்லூரி முதல்வர் கே. ரங்கராஜன் சட்டநாதனுக்குப் பரிசு வழங்குகிறார்.

✖ பங்கேற்ற மாணவர்களும் விழா நிர்வாகிகளும். இடது பக்கத்திலிருந்து மூன்றாவதாக உட்கார்ந்திருப்பவர் க்விஸ் மாஸ்டர் எஸ். பாலசுப்பிரமணியம்.

4. கடக்வாஸலா (Kadakvasala) வின் முக்கியத்வம் என்ன?
(பார்வையாளரில் ஏ.ஆர். சுப்பிரமணியம் என்ற மாணவர் சரியான விடையைக் கூறினார்)
5. 'Chemotherapy' என்றால் என்ன?
(சரியான விடையைக் கூறியவர் சட்டநாதன்)
6. மான்டி கார்லோ (Monte carlo) வின் முக்யத்துவம் என்ன?
(இக்கேள்விக்கான சரியான விடையை எவரும் கூறவில்லை)
7. பார்வையற்றோருக்காக எழுத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
(சுரேஷ் சரியான விடையைக் கூறினார்)
8. இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அடையாளச் சின்னம் எது?
(சட்டநாதன் சரியான விடையைக் கூறினார்)




# எஸ்.வி.சுப்பையா பாரதியாராக முழு நீள பாத்திரம் ஏற்று நடித்த திரைப்படம் எது?

9. பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் லெப்டினென்ட் கவர்னர் யார்?
(ரவிச்சந்திரன் சரியான விடையைக் கூறினார்)

10. உலகத்திலேயே மிக உயரத்திலுள்ள விமானத் தளம் எங்குள்ளது?
(சிதம்பரநாதன் சரியாக விடையளித்தார்)

11. U.F.O என்பதன் விரிவு என்ன?
(சரியான விடையைக் கூறியவர் சட்டநாதன்)

12. இந்தியாவின் முதல் கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி எது?
(சரியான விடையை எவரும் கூறவில்லை)

13. சமீபத்தில் காலமான குணசித்திர தமிழ் நடிகர் எஸ். வி. சுப்பையா மகாகவி பாரதியாக முழு நீள பாத்திரத்தில் நடித்த படம் எது?
(சட்டநாதன் சரியாக விடையளித்தார்)

14. கிம்பர்லியில் உலகில் மிகப் பெரிய வைர வியாபாரஸ்தலம் உள்ளது. கிம்பர்லி எங்குள்ளது என்று சரியாகக் கூற இயலுமா?
(இக்கேள்விக்கான பதிலை சட்டநாதனும் சீனிவாசனும் பாதிப்பாதி கூறி மதிப்பெண்ணைப் பகிர்ந்து கொண்டனர்)

15. ஜனாதிபதிப் பதவியை ராஜினாமா செய்த முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
(சிதம்பரநாதன் சரியாக விடையளித்தார்)

16. சௌந்தர்ய லஹரியை இயற்றியது யார்?
(சரியான விடையைக் கூறியவர் ராஜகோபாலன்)

17. பொய்கையாழ்வாரின் பிறப்பிடம் எது?
(சரியான விடையை எவரும் கூறவில்லை)

18. விம்பிள்டன் ஒற்றையர் ஆட்ட கோப்பையை வென்ற முதல் கறுப்பர் யார்?
(பார்வையாளரில் குருப் பிரசாத் என்ற மாணவர் சரியான விடையைக் கூறினார்)

19. உலகத்தின் மிகப்பெரிய மியூஸியம் எது?
(சட்டநாதன் இதற்காக சரியான விடையைப் பனிச்சென்று கூறினார்)

20. இங்கிலீஷ் கால்வாயை முதன் முதலாக நீந்திக் கடந்த இந்தியர் யார்?
(ரவிச்சந்திரன் சரியாக விடையளித்தார்)

21. இடி முழக்கத்தை நாம் கேட்பதற்கு முன்பாக மின்னலைக் காண முடிகிறதே. காரணம் என்ன?
(சரியான விடையை சீனிவாசன் கூறினார்)

22. 'Tachometer'ன் உபயோகம் என்ன?
(எவரும் சரியான விடையைக் கூறவில்லை)

23. RADAR என்பதன் விரிவு என்ன?
(ரவிச்சந்திரன் சரியான விடையைக் கூறினார்)

24. கிரிக்கெட் ஆட்டத்தில் ஸ்டம்புக்கும் பாட்டிங் கிரீஸுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவாக இருக்க வேண்டும்?
(ரவிச்சந்திரன் சரியான விடையைக் கூறினார்)

25. 'Philology'யில் படிக்கப்படும் பாடம் எது?
(எவரும் சரியான விடையைக் கூறவில்லை)

26. 'Dermartology' என்ற வார்த்தை எத்துறையைச் சேர்ந்தது?
(சரியான விடையை சட்டநாதன் கூறினார்)

27. ரோம் நகரத்தில் போப் ஆண்டவரின் (Official) இல்லத்தின் பெயர் என்ன?
(சீனிவாசன் சரியாக விடையளித்தார்)

28. கீத கோவிந்தத்தின் ஆசிரியர் யார்?
(சரியாக சட்டநாதன் விடையளித்தார்)

29. F.R.C.S. என்பதன் விரிவு என்ன?
இக்கேள்விக்கான விடையைக் கூறியவர் சிதம்பரநாதன்)

30. Death duty யின் இன்னொரு பெயர் என்ன?
(பார்வையாளரில் டி. ஜோசப் என்ற மாணவர் இதற்கான விடையைக் கூறினார்)

[அதிகமான மதிப்பெண்களைப் பெற்று திரு சட்டநாதன் கல்வியின் பரிசான ரூ. 50- பெற்றார். கல்லூரி முதல்வர் அவருக்குப் பரிசை வழங்கினார். திரு ரவிச்சந்திரன் சில கடினமான கேள்விகளுக்கு விடையளித்தது குறிப்பிடத் தக்கது.

க்விஸ் நிகழ்ச்சிக்குப் பிறகு திரு ராஜேந்திரன் திரு பஞ்சநாதன் ஆகிய இரு மாணவர்களும், 'பாடனி' உதவிப் பேராசிரியர் திரு ஆர். சதாசிவம் அவர்களும் நிகழ்த்திய கலா நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக அமைந்தன. மாணவர்களும், நிர்வாகிகளும் வெளிப்படுத்திய உற்சாகமும், அளித்த ஒத்துழைப்பும் என்றுமே மறக்க முடியாதவை.]

**விடைகள்**

(1) குருநானக். (2) கலாக்ஷேத்திரா. (3) நியூயார்க்கில் உள்ள கிராண்ட் சென்ட்ரல் டெர்மினஸ் ரயில்வே நிலையம். (4) கடக் வாஸலாவில் ராணுவப் பயிற்சி அளிக்கும் National Defence Academy உள்ளது. (5) Control of infection by Chemicals (6) மொனாக்கோவில் உள்ள மான்டி கார்லோ உலகப் பிரசித்தி பெற்ற சூதாட்ட ஸ்தலமாகும். (7) லூயி பிரெய்லி (8) கெப்பு மூக்கோணம். (9) பி. டி. குல்கர்னி. (10) லடாக். (11) Unidentified Flying Object (12) 1952ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக சேப்பாக்கம் மைதானத்தில் பெற்ற வெற்றி. (13) கப்பலோட்டிய தமிழன். (14) தென் ஆப்பிரிக்காவில் கிழக்கு கலஹாரி பாலைவனத்தில். (15) ரிச்சர்ட் நிக்ஸன் (16) ஆதிசங்கரர். (17) காஞ்சிபுரம். (18) அமெரிக்காவைச் சார்ந்த ஆர்தர் ஆஷ். (Arthur Ashe) (19) லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூஸியம் (20) மிஹிர் சென். (21) ஒளி ஒலியை விட வேகமாகப் பிரயாணம் செய்வதால். (22) விமானம், மோட்டார் படகுகளில் வேகத்தைக் கணிக்க உதவும் கருவி. (23) Radio, Angle Direction and Range (24) 4 அடி அல்லது 1.22 மீட்டர். (25) மொழிகளின் அமைப்பு, வளர்ச்சி பற்றிய விஞ்ஞானம். (26) மருத்துவத்துறையில், தோல் வியாதிகளைப் பற்றிப் படிப்பது. (27) வாடிகன் (Vatican) 28. ஜெயதேவர். (29) Fellow of the Royal College of Surgeons (30) Estate Duty

தொகுப்பு : **நாயகன்**

புகைப்படம் : **வீரப்பா போட்டோ ஸ்டுடியோ, புதுக்கோட்டை**


---

துன்பத்தில் இன்பம்

## அடியும் உளறலும்!

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த அச்சம்பவத்தை இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

அப்பொழுது சிறுவனாக இருந்த நான் செய்யாறு (வ. ஆ. மாவட்டம்) அருகில் இருக்கும் ஒரு கிராமத்தில் என் தாத்தாவுடன் சென்று ஒரு விசேஷத்தில் கலந்து கொண்டேன். அன்று இரவு, பக்கத்தில் இருந்த ஒரு வீட்டின் திண்ணையில் படுக்கச் சென்றோம். நானும் என் உறவுக்காரப் பையன் ஒருவனும், தாத்தா சற்று கண்ணயர்ந்தவுடன், அருகிலுள்ள சினிமா கொட்டகைக்குக் கடைசி காட்சிக்குச் சென்று விட்டு ஓசைப் படாமல் திரும்பி வந்து படுத்துக் கொண்டு விட வேண்டுமென்று திட்டமிட்டோம். அவன் தாத்தாவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அவர் தூங்குவதற்காக, அவர் காலைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான். காட்சி தொடங்க இன்னும் பத்தே நிமிடங்கள்; தாத்தா உச்சஸ்தாயியில் குறட்டை விட ஆரம்பித்தார். நண்பன் தலையணைகளைப் பரப்பி, அதன்மேல் போர்த்திவிட்டு,



என்னை இழுத்துக் கொண்டு சினிமாவுக்கு ஓடினான். எங்கள் திட்டம் வெற்றி பெற்றதை எண்ணி, இருவரும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினோம்.

இரவு மூன்று மணியாயிற்று. காட்சி முடிந்து திரும்பினோம். நண்பன், தாத்தாவின் பக்கத்தில் தலையணைகளை மெதுவாக எடுத்து விட்டு, படுத்துக்கொண்டு போர்வையை மெல்ல எடுத்துப் போர்த்திக் கொண்டான். அடுத்த கணம், தாத்தாவின் கைத்தடி கோலால் 'மடேர்' என்று அடி அவன் முதுகில் விழுந்தது. கூடவே தாத்தாவின் குரல், 'மறுபடியும் இப்படி வந்து படுப்பாயா? உன் காலை உடைத்து விடுகிறேன் பார்'! என்று ஒலித்தது. நண்பன் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து, "தப்புத் தான் தாத்தா! இனிமே சினிமாவுக்குத் திருட்டுத்தனமாகப் போக மாட்டேன்! அடிக்காதீங்கள்!" என்று அழ ஆரம்பித்து விட்டான். தாத்தா உடனே, "என்ன! நீ சினிமாவுக்குப் போனாயா? எனக்குத் தெரியாதே! நீ பக்கத்துத் திண்ணையில் சங்கரன் பக்கத்தில் படுத்திருக்கிறாய் என்றல்லவா நினைத்தேன்! ராத்திரி முழுவதும் என்னைத் தூங்க விடாமல், ஒரு நாய், நான் சற்று கண்ணயர்ந்தால் பக்கத்தில் படுக்கையில் படுத்துக் கொள்வதும், நான் விழித்துக் கொண்டு விரட்டினால் ஓடி விடுவதுமாக இருந்தது! நீ வந்து படுத்துக் கொண்டதும், தூக்கம் கலைந்த நான், நாய்தான் மறுபடியும் வந்து படுத்துக்கொண்டு விட்டது என்று நினைத்து, ஆத்திரத்தில் ஒரு போடு போட்டேன்!" என்று விளக்கினார். "அடி பலமாகப் பட்டு விட்டதா?" என்று விசாரித்தார். அடிபட்ட வலி தாங்காமல் அழுது கொண்டே, "தெரியாமல் சினிமாவுக்குப் போய்விட்டு வந்ததை உளறி விட்டோமே" என்று அவன் வருத்தப்பட்டுக் கொண்டதை இன்று நினைத்தாலும் எனக்குச் சிரிப்பு வரும். —ஆ. சங்கரன்

# ராஜாஜி வாழ்க்கை வரலாறு

## —ராஜ்மோகன் காந்தி—

ஜவாஹர்லால் அவர்களைக் குறித்து காந்தியிடம் புகார் செய்தபோது மகாத்மா பதிலளித்தார்:

''நிலைமையை அமைதியாக யோசித்துப் பார். அவர்கள் பொறுமை இழக்கிறார்கள் என்பது குற்றமானால் அதில் உனக்கும் நிரம்பப் பங்கு உண்டு. பரஸ்பரம் நீங்கள் ஒருவரிடம் ஒருவர் பொறுமை இழப்பதால் நாடு துன்பமடையும்படி விடக் கூடாது.''

''மகாத்மாவை நாங்கள் அபூர்வமாகவே கலந்தாலோசிக்கிறோம் என்றாலும் அவரது ஆத்ம சக்தி எங்களது பணிகளில் எங்களுக்கு வழி காட்டுகிறது'' என்றார் ஸி. ஆர். ''காந்தி உடல் சக்தியைத் திரும்பப் பெற்றதும் அவரைக் காரியக் கமிட்டி அங்கத்தினராக்கச் சற்றும் தாமதிக்க மாட்டோம்.''

ஸி. ஆரின் இந்த நம்பிக்கை நிறைவேறக் கூடியது அல்ல. மகாத்மா காரியக் கமிட்டி முயற்சிகளில் உதவ ஆர்வமுடையவராக இருந்தார். ஆனால் அதில் சேர அவர் தயாராக இல்லை. தேசிய வில்லில் பிணைக்கப்பட வேண்டிய சுதந்திர நாணாகத் தம்மை அவர் கருதினார். இந்த நாணைத் தாக்குதலில் பயன்படுத்த வேண்டிய தருணம் இன்னும் பல வருஷங்களுக்குப் பிறகுதான் தோன்றும் என்றாலும் அவர் அதற்காகத் தம்மைப் பிரத்தியேகப்படுத்திக் கொண்டிருந்தார்.

● ● ●

இதற்கிடையில் காங்கிரஸ் சார்புள்ள முஸ்லிம்களின் முதுபெரும் தலைவர் டாக்டர் அன்ஸாரி காலமாகியிருந்தார். ஸி. ஆருக்கு அவர் போர்க்களச் சகா மட்டுமல்ல; அந்நியந்த நண்பரும் கூட. ஆட்சியின் விருப்பத்துக்கு விரோதமாக இந்தியாவுக்குத் திரும்பியதற்காக சுபாஷ் போஸ் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் ரொம்பவும் அனுதாபம் ஏற்பட்டிருந்தது. பட்டேல் தலைமையில் இயங்கிய நாடாளு மன்றக் குழுவில் சுபாஷ் போஸ் சார்பாக இன்னொருவர் செயல்பட அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மகாத்மாவின் மூத்த மகன் ஹரிலால் காந்தி தாம் இஸ்லாமைத் தழுவுவதாக அறிவித்தார். தம் மகனை இதற்குத் தூண்டியது, பிரபலமடையலாம் என்ற எண்ணமேயன்றி மனச்சாட்சியல்ல என்று கருதிய கஸ்தூரிபா வேதனையில் ஆழ்ந்தார். அதற்கேற்றாற் போல் இந்த மத மாற்றம் தாற்காலிகமான ஒன்றாகவே விளங்கியது. மகன் எங்கிருக்கிறான் என்பது சரியாகத் தெரியாததால் பகிரங்கக் கடிதம் எழுதினார் அன்னை. கடிதத்தின் வாசகம் ஸி. ஆரை உருக்கியது. தென் ஆப்பிரிக்காவில் கணவர் அருகே இருந்து கஸ்தூரிபா போராடிய நாளிலேயே ஸி. ஆருக்கு அவரிடம் ஏற்பட்டிருந்த மதிப்பு நாளடைவில் பழக்கம் அதிகரிக்க அதிகரிக்க வளர்ந்திருந்தது.

✖ கஸ்தூரிபா



''இது அன்னையின் உள்ளத்திலிருந்து எழும் எரிமலைக் குழம்பு'' என்று கஸ்தூரிபா கடிதம் குறித்து மகாதேவ தேசாய்க்கு அவர் எழுதினார். ''தாயுள்ளம் அடையும் வேதனை என்ற எரிமலையிலிருந்து பொங்கிப் பிரவகிக்கும் இதிகாச சோகம்'' என வர்ணித்தார்.

திருவிதாங்கூரிலிருந்து உற்சாகமூட்டும் செய்தி கிடைத்தது. அங்கே மன்னர், இது வரை கிறிஸ்துவர்களும் முஸ்லிம்களும் அணுக அனுமதிக்கப்பட்டிருந்த, ஆனால் ஹரிஜனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த சாலைகள், பள்ளிகள், கிணறுகள் ஆகியவற்றை இப்போது ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டிருந்தார்.

● ● ●

மத்தியிலே கூட்டாட்சி அமைக்கலாம் என்ற திட்டம் செயலுருப் பெறவில்லை. சமஸ்தானங்களின் மன்னர்கள் அதில் சேரத் தாங்கள் விரும்பவில்லை என்று தெரிவித்து விட்டார்கள். சுதந்திரமற்ற அந்தக் கூட்டாட்சித் திட்டம் குறைப் பிரசவமாகிப் போனதில் ஸி. ஆர். வருத்தப்படவில்லை. ஆனால் அந்நாளைய இந்திய தேசப் படத்தில் மஞ்சள் திட்டுக்களாகக் காணப்பட்ட சுதேச சமஸ்தானங்களின் மன்னர்களுடைய அரசியல் நோக்கும் போக்கும் அவருக்கு வெறுப்பைத் தந்தது. ''பிரச்னை தீர ஒரே வழி இந்த மஞ்சள் திட்டுக்களை அழித்து விடுவதுதான்'' என்று அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் பங்குபெறவிருந்த ராஜதானித் தேர்தல்கள் அந்த ஆண்டின் இறுதியிலோ அல்லது 1937 தொடக்கத்திலோ நடக்க இருந்தன. காங்கிரஸ் பதவி ஏற்கும் எனத் திட்டவட்டமாக அறிவிக்குமாறு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியை ஸி. ஆரின் அங்கீகாரம் பெற்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வற்புறுத்தியது.

ஸி. ஆர். இப்போது அமைதிக் கடலில் வாழ்க்கைப் படகைச் செலுத்த ஆரம்பித்து விட்டாரோ என்று நினைக்கும் நேரத்தில், திருச்சியில் நடந்த ஒரு சம்பவம் அவரை மறுபடியும் தீவிர மார்க்கத்துக்குத் திசை திருப்பிவிடக் காரணமாயிற்று.

திருச்சியில் புதிய நகரசபை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. நகரசபைத் தலைவர் பதவிக்கு ரத்னவேலு தேவர் காங்கிரஸினால் நியமிக்கப்பட்டார். ஏற்கெனவே ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினராக இருந்த அவருக்கு நகரத்தில் பலருடைய ஆதரவு இருந்தபோதிலும் துரதிர்ஷ்ட வசமாக மத்திய சட்டசபை உறுப்பினர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனின் ஆதரவு இல்லை. ராஜன் தேவரின் நியமனத்தை எதிர்த்தார். நகரசபை காங்கிரஸ் கமிட்டியும் மாகாண காங்கிரஸ் கமிட்டியும் அவர் நியமனத்தை ஆதரித்தன. ஸி. ஆர். தமது நெடு நாள் நண்பரும் இரு ஆண்டுகளுக்கு முன், ''எனக்கு ஸி. ராஜகோபாலாச்சாரிதான் குரு'' என்று கூறியவருமான ராஜனைக் கட்சியின் தீர்ப்பை ஏற்குமாறு கேட்டுக்கொண்டார்.

ராஜன் இதற்கு இணங்கவில்லை. அதற்குப் பதில் பொன்னையா பிள்ளை என்பவரை அக்கிராசனர் பதவிக்குப் பிரேரேபித்தார். தேவரைப் பிள்ளை 15–18 என்ற வோட்டு எண்ணிக்கையில் தோற்கடித்தார்.

இந்தக் கட்டுப்பாடின்மையின் எதிரொலியாக, ஸி. ஆர். தேசிய காரியக் கமிட்டி, நாடாளு மன்றக் குழு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆகிய அனைத்திலிருந்தும் ராஜினாமா செய்தார். காங்கிரஸின் அடிப்படை அங்கத்தினர் என்ற ஹோதாவிலிருந்தும் ராஜினாமா செய்துவிடவே விரும்பினார். ஆனால் பாக்கி இருக்கும் அந்த ஒரு தொடர்பையும் கத்தரித்துக் கொண்டு விட வேண்டாம் என்று பட்டேல் வற்புறுத்தினார்.

## 51. அதிர்ச்சி வைத்தியம்

திருச்சி சம்பவத்துக்கு இரு தினங்களுக்குப் பிறகு தமது முடிவை அறிவித்த ஸி. ஆர். கூறினார்:

''காங்கிரஸ் நீடு வாழ வேண்டும் என்ற நோக்கில் கட்டுப்பாடு உணர்வும் விசுவாசத்துடன் கூடிய ஒத்துழைப்பும் மீண்டும் உருவாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நம்பி, பிரார்த்திக்கவும் செய்கிறேன்.''

ஸி. ஆர். நடந்துகொண்ட விதம் அவர் குண இயல்புக்கு ஏற்றதுதான். ஆயினும் அது யாரும் எதிர்பாராத ஒன்றாக இருந்தது. அவரது இச்செயல் மற்றவர்களிடம் எழுப்பிய எதிரொலியோ முற்றிலும் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகவே இருந்தது. ''இதை அனுமதிக்கவே முடியாது'' என்றார் சத்தியமூர்த்தி. ஸி. ஆர். புனராலோசனை செய்ய வேண்டும் என வற்புறுத்துமாறு மகாத்மாவையும் பட்டேலையும் வருந்திக் கேட்டுக் கொண்டார். ''தேசம் முழுவதற்குமே பலத்த அடி'' என்றார் பட்டேல்.

''ஸி ஆரின் செயல் அந்நிலையின் தேவைக்கு அதிகமானது'' என்றார் கிருபளானி. ''பொது மக்களை மட்டுமின்றி அவரது செயல் அவருடைய சகாக்களையும் பிரமிப்பில் ஆழ்த்தியுள்ளது. அகில இந்தியத் தலைவர்கள், வட்டாரப் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ள வட்டாரத் தலைவர்கள் போல நடந்து கொள்ள முடியாது. அவர்களுக்குத் தங்கள் ராஜதானிகளுக்கு அப்பாலும் பொறுப்புக்கள் உண்டு.'' பஞ்சாபிலிருந்து ஒரே ஒரு தனிக் குரலாக லாலா துனி சந்த் ஸி. ஆரின் செயலை வரவேற்றார். அதனை ''அதிர்ச்சி வைத்தியம்'' என வர்ணித்தார்.

''காங்கிரஸ்காரர்களிடையே அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தினால் ஏகமனதாக அவர்களுக்கு ஸி. ஆரிடம் பூரண நம்பிக்கை இருக்கிறது, எதிர்ப்புக் குரல் ஒன்றுகூட இல்லை என்பது தெரியவரும்'' என்று ஒருவர் ஹிந்துவுக்கு எழுதினார். ''ஒரு தளபதி, தன் படையில் சிலர் கட்சி மாறிவிட்டார்கள் என்பதற்காகத் தமது பொறுப்பிலிருந்து ஓடிப் போவது சரியல்ல'' என்றும் அவர் சேர்த்துக் கொண்டார். எழுத்தாளர் திரு வி. க., ''ஸி. ஆர். நீண்ட காலமாகவே பிறர் குற்றங்களைத் தம்முடையதாக ஏற்று வருகிறார்'' என்று விமரிசித்தார். சுதேசமித்திரன் ஆசிரியர் ஸி. ஆர். சீனிவாசன், ''தமக்கு ஏற்பட்ட தனிப்பட்ட ஏமாற்றம் பொது வாழ்வில் தமது கடமை உணர்வைப் பாதிக்க ஸி. ஆர். அனுமதித்து விட்டார்'' என்றார்.

தென்னகத்தைப் பொறுத்த மட்டில் வேறு சிலர், டாக்டர் ராஜன் தவறு இழைத்திருக்கலாம் என்று கருதியபோதிலும் அதே நேரத்தில், அனைவரையும் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்கிற அளவில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குச் செல்வாக்குப் போதாது என எண்ணினர். தலைமை மாற வேண்டும் என்று கோரினர். 1926ல் காங்கிரஸில் சுயராஜ்யக் கட்சி சார்புள்ள அக்ராசனராக விளங்கி தற்போது ஒதுங்கி இருந்த எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அரசியலுக்குத் திரும்பி வரவேண்டும் என்று சிலர் யோசனை கூறினர். பெரும்பாலோர், ராஜதானியில் காங்கிரஸின் முழுப் பொறுப்பையும் ஸி. ஆரே ஏற்றுக் கொள்ள வேண்டும் — அது அவரிடம் தரப்பட வேண்டும் — என்று விரும்பினர். ஸி. ஆர். அக்கறை காட்டவில்லை.

(தொடரும்)

தமிழாக்கம்: கெ. ராஜேந்திரன்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

எம். பி.: ''எங்க கட்சியில் என்னைக் கறிவேப்பிலை எம். பி.ங்கறாங்க...!''
மனைவி: ''ஏங்க...?''
எம். பி.: ''ஒன்னோ ஒன்னு கண்ணே கண்ணுனு கருவேப்பிலை கொத்தாட்டாம் எங்க கட்சியின் சார்பா இந்த மாநிலத்தில் நான் ஒருத்தன் தானே ஜெயிச்சேன்...!'' உ. ராஜாஜி





# சாண்டில்யன்

## அத்தியாயம் 34

## காமுகர் மூவர்

**ப**தினாறு வயது பாலப் பருவத்திலேயே யாரும் எட்டுதற்கரிய பேஷ்வா பதவியை அடைந்து மகாராஷ்டிரத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவரும், பாதி வாழ்நாட்களைப் படைகளின் முகாம்களிலேயே கழித்து விட்டவரும், சிறு பொறியாயினும் வைக்கோல் போரை அழிப்பது போல் சிறு வயதாயினும் பெரிய மொகலாய சாம்ராஜ்யத்தைப் பெரிதும் அழித்து விட்டவரும், போர்க்களத்தில் மட்டுமின்றி காமக்களத்திலும் வீரனென்று பெயர் பெற்று ஸ்திரீலோலனென்று அழைக்கப்பட்டவருமான பாஜிராவ், சாருபாயின் குடிசை அளித்த சிறு விளக்கின் மங்கலான ஒளியிலும் மிகக் கம்பீரமாக நின்றார். அவரது நீண்ட கூர்மையான நாசியும், அரும்பாகக் கத்தரிக்கப்பட்டிருந்த மீசையும், ஒல்லியான உயர்ந்த சரீரமும், கருடனுடைய கண்களைப் போல் சலனமற்ற கூரிய பார்வையுடைய கண்களும், அவர் உலகத்தையே ஆளப் பிறந்தவரென்பதை நிரூபித்தன. உதட்டிலிருந்த ஒரு தனிப்பட்ட உரமும் லேசான புன்முறுவலுங்கூட அவர் திட மனத்தையும் உறுதியையும் எடுத்துக் காட்டின. அவர் மெல்லிய கால்களும், அவர் அணிந்திருந்த மொகலாயச் செருப்பும் பாதங்களை ஊன்றியிருந்த திடமும் பார்ப்பவர் யாருக்கும் அச்சத்தை விளைவிப்பதாக அமைந்திருந்தன. அவர் இடைக் கச்சையில் கட்டப்பட்டிருந்த வளைந்த மகாராஷ்டிர வாளின் பிடியில் எந்தவித வேலைப்பாடும் இல்லாமலிருந்தாலும், அது பெரிய வீரனுடைய வாளென்பதற்கு அதன் பிடி அன்றாடம் துடைக்கப்பட்டதால் பளிச்சென்றிருந்ததே அத்தாட்சியாயிற்று. பாஜிராவ் தமது வாளையும், பிற ஆயுதங்களையும் பிரதி தினம்தாமே துடைத்துச் சரி பார்ப்பார் என்பதும், அவரது மாட்ச்லாக் துப்பாக்கியின் குதிரைகூட அன்றாடம் அவராலேயே பரிசோதிக்கப்பட்டு எந்த அவசரத்துக்கும் தயாராக வைக்கப்பட்டிருந்ததென்பதும் மகாராஷ்டிரத்தில் சாதாரணமாகத் தெரிந்த விஷயம். சில வேளைகளில் பாஜிராவ் இரண்டே இரண்டு வீரர்களுடன் பூனாவின் வீதிகளில் வருவார். அப்பொழுதெல்லாம் அவர் புரவியில் செங்குத்தாக உட்கார்ந்த முறையும், கையில் பிடித்த கடிவாளத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல் அதை தளரவிட்டே பவனி வரும் அழகும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்தன. பேஷ்வாவாக அவர் பதவி ஏற்ற நாள் முதலே துவங்கிவிட்ட ராணுவ நடவடிக்கைகளும் துரிதமாக அடைந்த வெற்றிகளும் 'இனிமேல் யாராலும் மகாராஷ்டிரத்துக்குப் பயமில்லை' என்ற உறுதியை மக்களிடை ஏற்படுத்தியிருந்தது. மக்கள் பாஜிராவைத் தெய்வமாகப் பாவித்து வந்தார்கள்.

அப்படி மகாராஷ்டிர மக்களின் அன்புக்கும் மொகலாயரின் திகிலுக்கும் பாத்திரமான பேஷ்வா அந்தக் குடிசையில் அந்த இரவில் சாதாரணப் பிரஜை போல் நின்றிருந்தார். ''நான் வருவதற்குச் சிறிதுநேரமாகி விட்டது சாரு'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்ட

> பெண்ணின் அழகுக்கும் கற்புக்கும் இடைவிடாத போர் உண்டு
>
> —ஸ்பெயின் பழமொழி



பாஜிராவ் ''சாரு! தாகமாயிருக்கிறது. அருந்துவதற்கு ஏதாவது வைத்திருக்கிறாயா?'' என்றும் கேட்டார்.

''தங்களுக்காகத் தனியாக வாங்கி வைத்த மதுக்குப்பி இருக்கிறது'' என்று கூறிய சாரு ''பேஷ்வா! வரவர நீங்கள் அளவுக்கு மீறிக் குடிக்கிறீர்கள். இது நல்லதல்ல'' என்றும் சொன்னான் வருத்தம் கலந்த குரலில்.

''சாரு...'' அன்புடனும் குழைந்த குரலினும் அழைத்தார் பாஜிராவ்.

''என்ன?'' என்று சற்றுக் கடுமையுடன் கேட்டான் சாரு.

''இந்த ஒருமுறை மட்டும் சிறிதளவு...'' என்று கெஞ்சினார் பேஷ்வா.

''இப்படித்தான் ஒவ்வொரு முறையும் சொல்கிறீர்கள்...'' என்று கடிந்துகொண்ட சாரு ''பேஷ்வா! நீங்கள் தனி மனிதனல்ல'' என்றும் கூறினான்.

பேஷ்வா தமது கண்களாலேயே அவனைப் பார்த்து நகைத்தார். ''சாரு! தனியாகத் தானே வந்திருக்கிறேன்'' என்று சொல்லவும் செய்தார்.

''எப்படி வந்தாலும் நீங்கள் உங்கள் சொத்தல்ல....''

''வேறு யார் சொத்து?''

''மகாராஷ்டிர மக்களின் சொத்து. லட்சக்கணக்கான மக்களின் பாதுகாப்பு, மானம் எல்லாம் உங்கள் கையில் இருக்கிறது...''

''இல்லை சாரு! மனிதர்கள் எல்லோரும் தாங்கள்தான் சாதனை புரிவதாக நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. சர்வ வல்லமையுள்ள மகாசக்தி காப்பாற்றுகிறாள். பவானி மாதாவின் கருணையால் மகாராஷ்டிரம் காப்பாற்றப்படுகிறது'' என்ற பேஷ்வா ''சாரு! இங்கே இந்தக் குடிசைக்குள் பேசுவானேன். குப்பியையும் அந்த மரக்குவளையையும் எடுத்துக் கொண்டு வெளியில் வா. இயற்கையின் சூழ்நிலையில், ஸஹ்யாத்ரி மலைத் தொடரின் உச்சியும் கடலும் அளிக்கும் குளிர்ந்த காற்றில் பேசுவோம்'' என்று கூறிவிட்டு, கீழே விரிக்கப்பட்டிருந்த பாயைக் கவனித்தார் பேஷ்வா. ''ஒரு வேளை நான் அசந்தர்ப்பமாக வந்து விட்டேனோ?'' என்று கேட்டார் மௌனமாகவே நின்று கொண்டிருந்த இந்திரஜித் அனந்தை நோக்கி.

அனந்தின் இதழ்களில் துன்பப் புன்முறுவல் ஒன்று உதயமாயிற்று. ''இல்லை பேஷ்வா!



எந்த அசந்தர்ப்பத்துக்கும் இங்கு இடமில்லை'' என்று வெடுக்கென்று கூறிவிட்டுக் குடிசைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான் அனந்த்.

பேஷ்வாவும் அவனைப் பின் தொடர்ந்தார். இருவரும் குடிசை வாயிலில் உட்கார்ந்ததும் பேஷ்வா தமது கண்களைச் சுற்றுமுற்றும் ஓடவிட்டார். ''என்ன அழகான இடம்! ஸஹ்யாத்ரி மலைத் தொடரின் கவர்ச்சி மிக்க உச்சி, சுற்றிலும் காடு, அதோ கீழே விஜயதுர்க்கம். அனந்த்! நமது சாரு மிகவும் அதிர்ஷ்டசாலி'' என்று கூறினார்.

அப்பொழுது கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன் நன்றாகப் பிரகாசிக்கத் தொடங்கி விட்டதால் எங்கும் மோகனகரமான சூழ்நிலை நிலவலாயிற்று. பாதாளத்தில் தெரிந்த விஜய துர்க்கத்தின் கோட்டைச் சுவர்களும், அவற்றை மோதிய கடலலைகளுங்கூட சந்திர வெளிச்சத்தில் பளிச்சிட்டன. பேஷ்வா ரசித்துக் கொண்டிருந்த சமயத்தில் சாரு உள்ளிருந்து மதுக்குப்பியுடனும் மரக்குவளையுடனும் வெளியே வந்தாள். அவள் உட்கார மத்தியில் இடம் விட்டு இருவரும் சிறிது நகர்ந்து கொள்ளவே அவர்களுக்கு நடுவில் உட்கார்ந்து கொண்ட சாருபாய் மரக்குவளையில் சிறிது மதுவை ஊற்றி பாஜீராவுக்குக் கொடுத்து விட்டு அனந்தை நோக்கினாள். வேண்டாம் என்பதற்கு அடையாளமாக அனந்த் தலையசைத்ததால் குப்பியைத் தனக்குப் பின்னாலிருந்த குடிசைக் கதவுக்கருகில் வைத்தாள் சாரு.

பல விநாடிகள் மூவரில் ஒருவரும் பேசவில்லை. மௌனமே சாதித்தார்கள். அந்த மௌனத்தில் காட்டு ஜந்துக்களின் அரவமும் பாஜீராவ் மதுவைக் குப்பியிலிருந்து சிறிது சிறிதாக உறிஞ்சி நாக்கை தொட்டை விட்டு ரசித்த சப்தத்தையும் தவிர| வேறு

எந்த சப்தமும் இல்லை. இப்படி சிறிது சிறிதாக மூன்று முறை மதுவை உறிஞ்சிய பாஜிராவ் ''பேஷ்! சாரு! இதை எங்கிருந்து வாங்கினாய்?'' என்று விசாரித்தார்.

''வாங்கவில்லை'' என்றாள் சாரு.

''யாராவது கொடுத்தார்களா?'' பாஜிராவின் கேள்வியில் சிறிது எச்சரிக்கை இருந்தது.

''ஆம்.''

''யார்?''

''தெரியாது!''

''தெரியாதா?''

''அடியோடு தெரியாது.''

''பின் எப்படி வந்தது இது?''

''நீங்கள் இங்கு வரும் ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் நான் கதவைத் திறக்கும் போது கதவுக்கு முன்னால் ஒரு குப்பியிருக்கும். அன்றிரவு நீங்கள் வருகிறீர்கள்.''



''நான் போகிற இடங்களிலெல்லாம் குடையை மறந்து வைக்காமலிருக்க என் மனைவி வழி கண்டு பிடித்தாள்.''

இதைக் கேட்ட அனந்த் அதிர்ச்சியடைந்தான். ''இதில் ஏதோ ஆபத்து இருக்கிறது'' என்றான்.

''மகாராஷ்டிரத்தில் எனக்கெப்படி ஆபத்திருக்க முடியும்?'' என்று கேட்டார் பாஜிராவ். மீண்டும் குவளையிலிருந்து சிறிது மதுவை உறிஞ்சினார்.

''பேஷ்வாவின் பதவி பெரிது'' என்று சுட்டிக் காட்டினான் அனந்த்.

''ஆம்.''

''அதைப் பெற உங்கள் தாயாதிகள் முயல்வார்கள்.''

''அதை நாம் தடுக்க முடியாது.''

''அதற்காக எதையும் செய்வார்கள்.''

''அதையும் தடுக்க முடியாது.''

பேஷ்வாவின் அலட்சியமான பதில்களைக் கேட்ட அனந்த் சிறிது கோபம் கொண்டான். ''பேஷ்வா! உலகத்தில் தடுக்கக்கூடியது எதுவுமில்லை. ஆனால் எச்சரிக்கையாயிருப்பதால் தவறில்லை. நீங்கள் தனியாக வெளியில் வருவதை நிறுத்துவதுநல்லது'' என்றும் கூறினான்.

சாருவும் அனந்துடன் கலந்து கொண்டாள் பேஷ்வாவை எச்சரிப்பதில். ''பேஷ்வா! அனந்த் சொல்வதில் அர்த்தமிருக்கிறது'' என்று கூறினாள்.

பேஷ்வா சாருவின் முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார் தமது இடது கையால். ''சகோதரி! எந்த வீரனுக்கும் உறுதுணை எது தெரியுமா?'' என்று வினவினார்.

''எது பேஷ்வா?'' என்று கேட்டாள் சாரு.

''அவன் உணர்ச்சிகள். இந்திரியங்கள். அவை எப்பொழுதும் எச்சரிக்கையாயிருக்கும் வரையில் ஆபத்தில்லை. சிறிது ஏமாந்தாலோ, உணர்ச்சிகள் உறங்கினாலோ, மன மயக்கம் கொண்டாலோ ஆபத்து நம்மை ஆட்கொள்ளும்'' என்ற பேஷ்வா, ''சாரு! இந்தத் தூங்குமூஞ்சி ஏன் இன்னும் உயிருடன் இருக்கிறான் தெரியுமா?'' என்று வினவினார் அனந்தைச் சுட்டிக் காட்டி.

சாரு பதில் சொல்லவில்லை, அவள் உள்ளத்தில் அனந்தின் இன்னொரு காதல் எழுந்து விளைவித்த சஞ்சலத்தால். அவள் சஞ்சலத்தை பாஜிராவ் உடனடியாகப் புரிந்து கொண்டார். ஆனால் புரியாதது போலவே பேசினார். ''இவன் இன்று உயிருடனிருக்கிறானென்றால் இவன் உறங்கும் போது உணர்ச்சிகள் துடிப்புடன் இருக்கின்றன. இவன் இயங்கும் போது அசுர வேகத்தில் இயங்குகிறான்'' என்றும் விளக்கினார்.

அந்த விளக்கம் சாருவுக்குத் தேவையில்லாதது. அனந்தை அவள் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாள். ஆகையால் 'ஆம்' என்று மட்டும் சொன்னாள்.

''என்ன ஆம்?'' என்று கேட்டார் பேஷ்வா.

''எதிலும் வேகந்தான் இவர். சிந்துதுர்க்கத்திலும் அப்படித்தான்'' என்றாள் சாரு.

பாஜிராவ் மிகுந்த உற்சாகத்துடன் திரும்பினார் அனந்தை நோக்கி. ''அனந்த் நானும் கேள்விப்பட்டேன். யாரவள் கடல் ராணி?'' என்று கேட்கவும் செய்தார்.

''கடற்கொள்ளைக்காரி'' என்றான் அனந்த்.

''இல்லை. மனக் கொள்ளைக்காரி'' என்று சாரு இடையில் புகுந்து பேசினாள்.


''என்ன சாரு?'' என்று பேஷ்வா கேட்டார் உற்சாகத்துடன்.

''இவர் மனத்தையும் கொள்ளை கொண்டிருக்கிறாள்'' என்றாள் சாரு.

அதை ஒரு பெரிய விஷயமாக நினைக்கவில்லை பாஜிராவ். ''அனந்த்! அவள் மிகவும் அழகா?'' என்று விசாரித்தார் ஆர்வத்துடன்.

''துஷ்டை'' என்றான் அனந்த்.

''பிரமாதம்! பிரமாதம்!'' என்று குதூகலித்தார் பாஜிராவ். அதை விளக்கியும் சொன்னார்: ''அழகுடன் துஷ்டத்தனம் கலக்கும்போது பெண்களின் கவர்ச்சி ஆயிரம் மடங்கு அதிகமாகிறது'' என்ற பேஷ்வா ''அனந்த்! நீ அவளை வளைத்துப் போட்



COOL HOME
Ceiling Fans
• Sleek, elegant styling
• Aluminium die-cast body
• Self-lubricated sintered bearings
AUE



# கரடி

தலைப்பு புதுமையானது என்ற முறையில் வரலாறு படைக்கிறது! படத்தின் கதாநாயகனே கரடிதான். கரடிக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக மனிதக் கதாநாயகனைக் கூட 'இடைவேளை'க்கு முன்னாலேயே குரூரமாகக் கொன்று விடுகிறார்கள் — அதுவும் முதலிரவு தினத்தன்று! ஐயோ பாவம்!

கதாநாயகன் எம். ஜி. சி. சுகுமார். அநாயாசமாக 'டிஷ்யூம் டிஷ்யூம்' என்று எதிரிகளைத் தாக்குகிறார். பக்கத்து வீட்டுப் பெண் சுதாவைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்கிறார். வசீகரமான தோற்றம் அவருக்கு நன்கு கைகொடுக்கிறது. படத் தயாரிப்பாளர், வெறும் கரடி விடாமல் கொலைகள், சஸ்பென்ஸ், பாடல்கள் என்று பல அம்சங்களைச் சேர்த்துத் தந்திருக்கிறார். படத்தின் டைரக்டர் டி. கே. மோகன்.

கரடி படம் முழுவதும் வியாபித்திருக்கிறது. தன் எஜமானனைக் கொன்று வீழ்த்திய அயோக்கியர்களை அவர்கள் வீடு தேடிச் சென்று ஒவ்வொருவராகத் தீர்த்துக்கட்டும் அதன் சாகசம் பிரமாதம்.

நல்ல துடிப்புள்ள இளம் நடிகை விஜயகீதா; காதல் காட்சிகளில் சக்கைப் போடு போடுகிறார்; கண்ணீரிலும் கரைகிறார். இன்னும் அனுபவம் பெற வேண்டும்.

பாம்பு, மாடு, ஆடு, குரங்கு, மயில் ஆகியவைகளெல்லாம் படங்களில் நடித்து வெற்றிக் கொடி நாட்டி விட்டன. கரடிக்கு இதுதான் கன்னி முயற்சி.

''சிவபூஜையில் கரடி புகுந்த மாதிரி'' என்ற பழமொழி மாதிரி ஆகி விடாமல் படம் ஒழுங்காக முடிவடைந்ததற்குச் சந்தோஷப் பட வேண்டியதுதான்.

-காந்தன்

டாயா இல்லையா?'' என்று விசாரித்தார் ஆர்வத்துடன்.

''நான் வளைக்கவும் இல்லை, ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை'' என்று அனந்த் எரிச்சலுடன் பதில் சொன்னான்.

''அப்படியானால் அவள் உன்னை வளைத்திருக்கவேண்டும்'' என்ற பேஷ்வா ''அனந்த்! இந்தப் பெண்களுக்குத்தான் என்ன சக்தி பார்த்தாயா? நம்மைப் பொம்மை போல் ஆட்டுகிறார்கள்'' என்றார்.

அனந்தின் சீற்றம் அதிகமாயிற்று. ''இந்தப் பைத்தியக்காரப் பேஷ்வா ஏற்கனவே சாருவுக்கு இருக்கும் கோபத்தை எதற்காகக் கிளறுகிறார்'' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். ஆகையால் கடிந்து சொன்னான், ''நம்மிடை சாரு இருக்கிறாள்'' என்று.

''இருந்தால் என்ன? ஆண்மகன் குணம் அவளுக்குப் புரியாதா என்ன? எனக்கென்ன ஒருத்திதான் மனைவியா? இல்லை அதோ விஜயதுர்க்கத்திலிருக்கும் கிழக் கோட்டானுக்குத்தான் ஒரு மனைவியா? ஆண் பிள்ளைகளின் குணத்தைத் தெரிந்துதான் ஹிந்து மதம் பல மனைவிகளை அனுமதித்திருக்கிறது'' என்று ஹிந்து மதத்தின் உயர்வை எடுத்துச் சொன்ன பேஷ்வா பக்கவாட்டில் சாரு மீது கண்களை ஓட்டினார். சாருவின் கோபம் அத்துமீறியதால் அவள் பேசவில்லை.

அனந்துக்கு அவள் நிலை நன்றாகப் புரிந்தது. ஆகவே பேஷ்வாவை அடக்கத் தீர்மானித்து ''பேஷ்வா!'' என்று அழைத்தான் ஆத்திரத்துடன்.

''என்ன அனந்த்?'' என்று கேட்ட பேஷ்வா குவளையிலிருந்த மதுவை ஒரே வாயாகக் குடித்துவிட்டுத் திரும்பினார் அனந்தை நோக்கி.

''நாம் இங்கு வந்திருப்பது ஹிந்து மதத்தைப் பற்றித் தர்க்கிப்பதற்கு அல்ல'' என்றான் அனந்த்.

''அல்ல. அதைக் காப்பாற்ற.''

''அதையும் மகாராஷ்டிரத்தையும் காப்பாற்ற.''

''ஆம்.''

''அதனால் நாம் பேச வேண்டியது...'' வாசகத்தை அனந்த் முடிக்கவில்லை. பேஷ்வா இடைமறித்து ''கடல் ராணியைப் பற்றி'' என்றார்.

''மீண்டும் அவளை இழுப்பானேன்?'' என்று எரிந்து விழுந்தான் அனந்த்.

அந்தச் சமயத்தில் அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி அடவி மூலம் வந்த மனிதர் ''அவளை இழுக்காமல் என்ன செய்வது? சூத்திரக் கயிறு அவளிடம்தானே இருக்கிறது'' என்றார்.

அந்த மனிதரைப் பார்த்த மூவருமே அதிர்ச்சி யடைந்தார்கள். அவரும் நன்றாகக் குடித்திருந்தார். கடல் ராணியைப் பற்றிப் பேசியதும் பயங்கரமாகச் சிரித்தார். ''இன்னும் பத்து வருஷத்துக்கு முந்தியிருந்தால் அவளை நான் தூக்கி வந்திருப்பேன்'' என்று கூறி மறுபடியும் இடியிடியென நகைத்தார். அப்படி நகைத்தவர் திடீரென்று ஸ்மரணை இழந்து தொப்பென்று தரையில் விழுந்தார்.

(தொடரும்)

✠ எஸ். ஆர். நரசிம்மன், சென்னை-11

கே. குழாயடி, பேருந்து, ரயிலடி ஆகியவற்றில் ஏற்படும் சண்டை பற்றிய வேறுபாட்டைத் தரமாகப் பிரியுங்கள்.

ப: குழாயடி பெண்களின் போர்க்களம். பேருந்து ஆண்களின் யுத்த பூமி. ரயிலடியோ பொதுவான குருக்ஷேத்திர மைதானம். எல்லா யுத்த களத்திலும் வசவுகளும் திட்டுக்களும் ரசமாக இருக்கும் என்றாலும் குழாயடி டயலாக்குகள் குழாய்த் தண்ணீரை விட வேகமாக வருமாதலால் அவையே முதல் ரேங்குக்கு உரியன. (ஒரு சிறந்த பதிலை அளிக்க வாய்ப்புக் கொடுத்ததற்கு உங்களுக்கு நன்றி!)

✠ ஆர். ராமன், ஆத்தூர்

கே. தங்கள் மனத்தைக் கவர்ந்த மன வைத்தியர் யார்?

ப: நிறையப் பேர். எல்லாரும் சிறந்த எழுத்தாளர்கள். பலரைப் பார்த்தது கூடக் கிடையாது. ஆனால் அவர்களுடைய புத்தகங்களைப் போல் மனத்துக்குத் தெம்பையும் சுறுசுறுப்பையும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும், ஏன், பல சமயங்களில் ஆறுதலையும் அளித்தவை எவையும் இல்லை. என் மன வைத்தியர்கள் புத்தகாசிரியர்களே.

✠ ஜி. முருகேசன், ராமநாதபுரம்

கே. கடுகு அளவு கேள்வி கேட்டால் பூசணிக்காய் அளவு பதில் தர முடியுமா?

ப: முடியும். யாராவது 'கண்' போட்டு விட்டால் திருஷ்டி பூசணிக்காயாக ஆகி விட்டால்?

✠ எஸ். எஸ். டி. ராஜன், சிறுகுடியூர்

கே. பத்திரிகை எழுத்தாளர், சினிமா எழுத்தாளர் யார் திறமைசாலி?

ப: இரண்டுக்கும் திறமை வேண்டும். யார் உசத்தி என்பது கிடையாது. மிருதங்கம் வாசிப்பவர் தவில் வாசிக்க முடியாது. தவில் வாசிப்பவர் மிருதங்கம் வாசிக்க முடியாது. (இந்த அருமையான கருத்து ஆசிரியர் சாவியுடையது.)

✠ இல. சந்திரசேகரன், சங்கரன் கோவில்

கே. குத்துச்சண்டை வீரர் முகமது அலி உங்களுடன் மோதி இருந்தால் என்னவாகி இருக்கும்?

ப: உங்களுக்குத் தெரியவில்லையே தவிர, முகமது அலிக்குத் தெரிந்திருந்தது. அதனால்தான் அவர் என்னுடன் மோதாமல் போய்விட்டார்.

✠ அ. ராதாகிருஷ்ணன், சிதம்பரம்

கே. அறிவாளி எப்போது முட்டாள் ஆகிறான்? (இம்மாதிரி கேள்வி கேட்கும்போது என்று கூறித் தப்பித்துக் கொள்ளவேண்டாம்)

ப: சேச்சே. அப்படியெல்லாம் கூறுவேனா? என்னிடம் பதில் பெற முயலும்போது அடி முட்டாளும் மேதாவியாகிறான் என்று எனக்குத் தெரியாதா என்ன?

✠ ஏ. எம். ராஜு, செங்கோட்டை

கே. மாதமொரு நாவல் வெளியிட கல்கி ஆசிரியருக்கு யோசனை கூறுவீர்களா?

ப: மாட்டேன். இப்போது வரும் மாத நாவல்களில் பெரும்பாலானவை சர்வ சாதாரணமாக உள்ளன. சில படு மட்டமாகவும் உள்ளன. நாவல் என்று சொல்லி நாறு கிராம் அச்சடித்த தாளை அதிக நாள் வியாபாரம் பண்ண முடியாது. இந்த மாத நாவல் வேகம், சென்னை தமிழ் நாடகங்கள் மாதிரி விரைவில் க்ஷீணமடையும்.


✠ டி. சக்கரவர்த்தி, திருவொற்றியூர்

கே. யாருடைய பாராட்டாவது உங்களுக்குக் கிடைத்திருக்கிறதா?

ப: என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? என் கட்டுரை ஒன்றைப் பார்த்து அமரர் கல்கி அவர்கள் 'பேஷ்' போட்டிருக்கிறார். என் உரை ஒன்றைக் கேட்டு ராஜாஜி 'பேஷ்' கூறியிருக்கிறார். 'பேஷ்' என்று எழுதிக் கையெழுத்தும் போட்டுக் கொடுத்திருக்கிறார். இயானை என்னவென்று நினைத்தீர்கள்!

ரூ. 5 பரிசு பெறுபவர்:

**அ. ராதாகிருஷ்ணன்**
**7-பி, பேரம்பலம் பிள்ளை சந்து,**
**சிதம்பரம்-608001**




அம்மா
சிவசங்கரி

## 6

“ஆமா, நீங்க ஏன் பெரிசா இவன் கிட்ட நம்ப ஊரைப் பற்றிக் குறை சொன்னேன்?''—

''குறையா? என்னது?''

''அதுக்குள்ள மறந்து போச்சா? ஆக்ஸி டெண்ட் ஆகி அநாதையா விரைக்கக் கிடந்தவனைப் பத்தித்தான் பேசறேன்.''—

''ஓ! தட்... அது நிஜம்தானே?''—

''நிஜம் இல்லேன்னு நான் சொன்னேனா? அதை எதுக்காகக் கன காரியமா இவன் கிட்டே சொல்லணும்னு புரியலேனுதானே கேக்கறேன்....''

''சொன்னா என்ன டார்லிங்? வொய் ஆர் யு மேக்கிங் ஸச் எ ஃபஸ்!''

''இதெல்லாம் சொன்னா நம்ப நாட்டைப் பத்தி இவன் மட்டமா நினைச்சுக்க மாட் டானா? அனாவசியமா எதுக்கு இந்தப் பேச்சு?''—

பைஜாமாவை மாட்டிக் கொண்ட ராஜுவுக்குச் சிரிப்பு வந்தது.

''மார்க் என்ன நினைச்சுண்டா என்ன? நம்ப நாட்லே அசமஞ்சத்தனமும் பொறுப் பில்லாத்தனமும் நிறைய இருக்கிறது நிஜம் தானே? அன்னிக்கு எனக்கு ரத் தம் கொதிச்சுப் போச்சு—தெரியுமா? ஐ வாஸ் ஸோ ஹெல்ப்லஸ்.... மார்க்கிட்ட சொல்லாததால் இந்த நிலை மாறிடப் போறதா? இல்லை சொன்னதால் இன்னும் க்ஷீணமா யிடப் போறதா? ம்ஹூம், ஒண்ணும் இல்லே... எல்லா நாட்டிலேயும் நல்லது கெட் டது இருக்கறது மார்க்குக் குத் தெரியாதா என்ன?''



''ஸோ, இந்த நாட்டுலேயும் கெடுதல் இருக்குனு ஒத் துக்கறேள், இல்லையா? இவா இப்படி ஜடமா, பாசம் இல் லாம இருக்கறது இவாளோட மைனஸ் பாயின்ட் தான்னு ஒத்துக்கறேள், ரைட்?''

''யெஸ்—பாசம் இல் லேன்னு நான் உணர்ந் துட்டா, கண்டிப்பா ஒத் துக்கறேன்.... பட் நாட் தென... உன் ஸ்கேலை வைச் சிண்டு' நீ இவாளை அளக் கிறது தப்புனுதான் நான் திரும்பச் சொல்லுவேன்..''

பாத் ரூமுக்குள் போய்ப் பல்லைத் தேய்த்துக் கொள கொள வென்று வாயைக் கொப்பளித் தாள் வித்யா.

''ஆனாலும் உங்களுக்குப் பிடிவாதம் ஜாஸ்திதான். நான் ஊர்லே இருக்கறப்போ ஒரு புஸ்தகத்திலே படிச்ச கேள்வி பதில் இப்போ ஞாபகத்துக்கு வரது. சொல்லட் டுமா?

'''அமெரிக்காவிலே தெருவுக்குத் தெரு ஸைக்கியாட்ரிஸ்ட் இருக்கிறது எதனால்? நம்ப நாட்டில் மட்டும் மனக் கஷ்டம் இல் லையா, கற்பழிப்பு இல்லையா, கொள்ளை, கொலை, திருட்டு, சண்டை இல்லையா அப் புறம் ஏன் இங்கு அத்தனை மனோ தத்துவ நிபுணர்கள் இல்லை'ங்கறது கேள்வி. இதுக்கு 'இந்தியாவின் குடும்பம் ஒன்றில் ஒருத்தருக்கு மனக் கஷ்டம் என்றால் மற்ற நபர்கள் அத் தனை பேரும் பாடுபட்டு அந்தக் கஷ்டத்துக் கான காரணத்தைக் கண்டுபிடித்து எப் படியோ அதைத் தீர்த்து வைக்க முயலு கிறார்கள். ஜாயின்ட் ஃபேமிலியாய் இருப்பதாலும், ஒருவருக்கொருவர் அதீத பாசப் பிணைப்போடு இருப்பதாலும் இது சாத்தியம் ஆகிறது. ஆனால் அமெரிக் கர்கள் நடுவில் அந்த ஸ்வாதீனமும், ஒருவ ரோடு ஒருவர் மனம் விட்டுப் பேசுவதும் குறைந்து விட்டதால் காசு கொடுத்து நிபுண ரிடம் போயாவது அவர்கள் தங்கள் மன வேதனையைத் தணித்துக் கொள்ள முயல் கிறார்கள்'னு ஒரு டாக்டர் பதில் சொல்லி இருக்கார். இதுக்கு என்ன சொல்றேள்? நம்ப நாட்டை விட இங்கு பந்த பாசம் குறைவுதான்னு இப்பவாவது ஒத்துப் பேளா?''

''நோ'' — என்று தலையை ஆட்டினான் ராஜு.

''இப்படி ஜெனரலைஸ் பண்ணிப் பேசறதே தப்புன்னுதான் நான் நினைக்கிறேன். நம்ப நாட்டுலே மட்டும் சண்டை போட்டுக்கறதில்லையா? சாகற அண்ணன் தம்பி இல்லையா? பெத்தகுழந்தையை விக்கிற அம்மா இல்லையா? சொந்த மகளை விபசாரத்திலே ஈடுபடுத்தற அப்பா இல்லையா? நிதானமா யோசிச்சா நம்ப ஊர்லே கல்யாணம் பண்ணிண்டு ஐம்பது வருஷம் வாழற தம்பதி போல இங்கேயும் நிறையப் பேர் இருக்கிறது உனக்கே புரியும். டிவோர்ஸும், வயசு வந் துட்டா தனியாப் போய் வாழறதும் நம்ப நாட்டிலேயும் இப்ப அதிகமாயிண்டு வரதே! உலகம் பூரா மாறிண்டு வரது வித்தி. இந்தியா எகானமிலே நூறு வருஷம் பின் தங்கி இருக்கிறதாலே அமெரிக்காலே இப்ப இருக்கிற நிலைமை இன்னும் நம்ப நாட்டுக்கு வரலே; இந்த ஜெட் யுகம் இன்னும் இந்தி யாவை முழுமையா பாதிக்கலே. வளர்ந் துட்ட சமுதாயத்திலே இவா ஃபீலிங்ஸை வெளியே காட்டிக்கிறது அநாகரிகம்னு நினைக்கிறா. அதுக்காக மனசுலே பாச உணர்வே இல்லேன்னு நீ சாதிக்கிறது அசட்டுத்தனம்தான்—''

''ஆ — அப்ப நடு ரோடிலே கிஸ் பண்ணற தும், கட்டிக்கிறதும் ரொம்ப நாகரிகமா? அது மட்டும் ஃபீலிங்ஸை நாலு பேர் நடு விலே டெமான்ஸ்ட்ரேட் பண்ணறதா ஆக லியா?''—

வாயில் இருந்த ப்ரஷை வெளியில் எடுத்துவிட்டு, பேஸ்டை பேஸினில் ராஜு துப்பினான்.

''நீ சொல்றது இந்த விஷயத்திலே கரெக்ட்தான். மூணும் மனுஷா நடுவிலே அழுது புலம்பித் தங்கள் வேதனையைக் காட்டிக்க மறுக்கிறவா, இப்படி ஒப்பனா ஸெக்ஸ் விஷயத்திலே நடந்துக்கறது வேடிக் கைதான். ஒருவேளை சந்தோஷம்னா வெளிப் படுத்திக்கலாம், துக்கம்னா காட்டிக்கக் கூடா

துனு நினைக்கிருளோ என்னமோ? இது பத்தி புரொபஸர் ஆண்டனி கிட்டக் கேக்க ஞாபகப்படுத்து வித்தி. ஐ மஸ்ட் ஆஸ்க் ஹிம்.''

''அது சரி — பெத்த குழந்தைகள் கிட்ட ஒரு வயசுக்கப்புறம் விட்டேத்தியா நடந்துக்கறது ஏன்? வாட் ஈஸ் யுவர் எக்ஸ்ப்ளனேஷன் ஃபார் தட்?''

''விட்டேத்தின்னு நான் சொல்ல மாட்டேன். தே டோண்ட் இண்டர்ஃபியர், தட்ஸ் ஆல். அது அந்த வயசுக்கும், மனசுக்கும் கொடுக்கிற மரியாதையா நினைக்கலாம் இல்லையா?''—

''முருகா...'' சலிப்புடன் வித்யா தலைகாணியில் சாய்ந்தாள்.

''இது என்ன விதண்டாவாதம்? நீங்க சொல்றதை நான் ஒத்துக்கப் போறதில்லே, என் வ்யூவை நீங்க ஏற்கப் போறதில்லே... தென் வாட் ஈஸ் த யூஸ் ஆஃப் திஸ் கான்வர்சேஷன் அட் ஆல்?''—

செருப்பைக் கழற்றிவிட்டு ராஜுவும் படுக்கையில் உட்கார்ந்தான்.

''நீ சின்னக் குழந்தையாட்டம் பிடிவாதம் பண்ணறதாத்தான் எனக்குத் தோணறது டார்லிங்... அதான் இப்படி விடாம உன்னைக் கன்வின்ஸ் பண்ணப் பார்க்கிறேன். யூ ஷுட் ப்ராடன் யுவர் அவுட்லுக் வித்யா... இந்த நாட்டு ஜனங்களை இவா ஆங்கிள்லேந்து பார்க்க....''

அவன் முடிக்கு முன் வித்யா அவசரமாய்ப் பேசினுள். ''ஆல்ரைட். உங்க டோராவுக்குப் பாசம் அதிகம். இந்த ஊர் பெண்கள்தான் உலகத்திலேயே பெஸ்ட் அம்மாக்கள். ரொம்ப பிராக்டிகல் பீபிள். போதுமா?''—

**தாவுவது, கட்சி மாறுவதற்கு அல்ல!**

ஒரு கையை மேடைமேல் ஊன்றி ஒரு கையால் கோட் தடுக்காமல் பிடித்துக் கொண்டு 'அலேக்'காகத் தாண்டிக் குதிப்பவர், மேற்கு ஜெர்மானிய பிரதமர் ஸ்மித். விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுள்ளவர். பத்திரிகையாளர்களை நிர்ணயித்த நேரத்தில் சந்திக்க வேண்டும் தாமதமாகக் கூடாது என்பதற்காகச் சுற்றி வளைத்துச் செல்லாமல் அவசரமாகத் தாண்டிக் குதிக்கிறார்!

—ஜெர்மன் நியூஸ்



கண்கள் கலங்க லேசாய் உரக்கப் பேசின வித்யா எதிர் புறம் பார்த்துத் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

ராஜுவுக்கு இந்தக் குழந்தைத்தனமும் கண் கலங்கலும் சிரிப்பை உண்டாக்கியது.

அவன் காதுக்கருகில் குனிந்து ''ஹேய்—கோபமா?''— என்றான்.

''......''

''இங்கே பாரேன்... ஐ லவ் திஸ் குழந்தைத்தனம் இன் யூ. யு நோ தட் வித்தி?''—

''......''

''இப்படித் திரும்பும்மா...''

''ஒண்ணும் வேண்டாம்.''

''ஏன் வேண்டாம்?''

''எனக்குத் தூக்கம் வரது...''

''எனக்கு வரலியே....''

குண்டு கட்டாய் வித்யாவைத் திருப்பி 'ஐ லவ் யூ' என்று சொல்லி ராஜு முத்தமிட்டதும், அவள் கோபமும், கண் கலங்கலும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சரியாகத் தொடங்கின.

**ம**று நாள் காலை ஏழு மணிக்கெல்லாம் டோராவுக்குப் போன் பண்ணி ஜென்னி எப்படி இருக்கிருள் என்று வித்யா கேட்டாள்.

''ஆபரேஷன் முடிந்துவிட்டது வித்யா. 'ஜென்னி இன்னும் உயிரோடுதான் இருக்கிருள். இது உண்மையிலேயே ஒரு பெரிய அதிசயம்' என்று நியூரோ ஸர்ஜன் சொன்னுர்.... ராத்திரி மூன்று மணிக்குத்தான் போன் வந்தது. அதுவரைக்கும் தூக்கமே இல்லை. 'உங்கள் ஜென்னி இறந்துவிட்டாள்' என்ற தகவல் எப்போது வேணுமானுலும் வரலாம் என்று நினைத்ததால் தூங்கவே முடியவில்லை''

''ஹாஸ்பிடலுக்குப் போகப் போகிறுயா டோரா? நான் வேணுமானுல் கூட வரட்டுமா?''—

''உனக்கு வீண் தொந்தரவு எதற்கு வித்யா. இன்று மார்க் ஆபீஸுக்குப் போகப் போவதில்லை. நார்மனின் லாயர் வருகிறேன் என்று சொல்லியிருக்கிருர். என்னோடு ஹாஸ்பிடலுக்கு வந்துவிட்டு டாக்டர்களிடம் ஜென்னியின் நிலைமையை மார்க் தெரிந்து கொண்டு வந்தால் வக்கீலுடன் பேச சௌகரியமாய் இருக்கும் இல்லையா?''—

''எனக்கு ஜென்னியைப் பார்க்க வேண்டுமென்றுல் பார்வையாளர் நேரம் எப்போது டோரா?''

''ஜென்னியின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் அவளைப் பார்க்க யாரையும் அனுமதிக்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். எதற்கும் நான் ஹாஸ்பிடலுக்குப் போய்விட்டு வந்ததும் உனக்கு விவரம் தெரிவிக்கிறேன்....''

போனை வைத்துவிட்டுத் திரும்பிய வித்யாவினுள் தேற்றுய எரிச்சல் மறுபடியும் மண்டத் தொடங்கியது.

ராஜுவுக்கு பிரேக் பாஸ்ட் தயாரித்துக் கொடுத்த பின் அவன் சாப்பிடும் நாழிகையில் டோராவைத் திட்டத் தொடங்கினுள்.

''ராத்திரி பூரா தூங்கலியாம். ஏன்னு, ஜென்னி செத்துப்போயிட்டாங்கற போனை எதிர்பார்த்துண்டே இருந்ததால் தூக்கம்



''நளுக்கிக் குலுக்கி நடக்கிறாளே! என்ன வாம்டி அவளுக்கு?''
''ரேஸ்களில் ரூபாய் வரப்போகுதாம்!''

வரலியாம். ஐயோ கடவுளே! இவ வாயிலே நல்ல வார்த்தையே வராதா? பொண்ணுல் பிட்டல்லே இப்பவோ அப்பவோன்னு இடக்கிறப்போ தூக்கம் வரலேனு இவ அவஸ்தைப் படறுளே — இது எத்தனை கேவலமான விஷயம்! இந்த டோரா ஒரு மதர், இவளுக்கு உங்க ஸப்போர்ட் வேறே...''

''......''

''எனக்கு என்ன தோணறதுன்னு ஜென்னி அடாப்டட் டாடர்னுதான் இவளுக்கு இத்தனை அலட்சியம்னு — வாட் டு யு திங்க் ராஜு?''—

''ஐ டோண்ட் திங்க் ஸோ—''

''என்ன, ஐ டோண்ட் திங்க் ஸோ! இல்லேனு இவளோட இந்த பிஹேவியருக்குக் காரணம் தான் என்ன?''—

''எந்த பிஹேவியருக்கு?''—

''ஓ — ராஜு.... யு ஆர் தி லிமிட்.''

''திரும்பத் திரும்பச் சொல்றேன் வித்யா. டோரா கிட்ட எனக்குக் குத்தமா எதுவும் தெரியலே. இந்த நாட்டுப் பழக்கப்படி அவ தன் சங்கடத்தை வெளிக் காட்டிக்காம இருக்கா. அவ்வளவுதான். ஜென்னி நிலைமை ரொம்ப மோசமா இருக்கு. இதை விவேகத்தோட எடுத்துக்கறதை விட்டுட்டு டோரா அழுது புலம்பறதுலே யாருக்கு என்ன லாபம்?'' —

''அதை விடுங்கோ — மார்க் ஆபீசுக்குப் போகப் போறதில்லையாம் — ஏன் தெரியுமா? பொண்ணுக்கு இப்படி இருக்கேங்கற வேதனையிலே இல்லே, பொண் உசிருக்குப் பார்த்தியா வக்கீலோட பண பேரம் பண்ணறதுக்காக — இதுவும் விவேகம்தானு?''

''ஆமாம் — இதுலே என்ன தப்பு? பண்ண பாவத்துக்கு அந்தப் பையன் ப்ராயச்சித்தம் பண்ண வேண்டாமா? ஏன், உங்க உறவுக்கார வீட்டுலே கூட இந்த மாதிரி நடந்ததுனு நீ முன்னே சொல்லி இருக்கியே... ஞாபகம் இருக்கா?''—

வித்யாவுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. அந்த நினைப்பு இருந்ததாலேயேதான் நேற்று இது பற்றி அவள் ராஜுவிடம் எதுவும் பேசவில்லை.

அவள் மாமா பின்னே ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்தபோது ஒரு பஸ் இடித்ததால் ஸ்தலத்திலேயே செத்துப் போனுன். 'என் கணவர் டாக்டராய் இருந்தார். கை நிறையச் சம்பாதிப்பார். இனி அவர் இல்லாமல் நாங்கள் எப்படி வாழ்வது' என்று அவன் மனைவி கோர்ட்டில் கேஸ் போட்டாள். இதற்கு வித்யாவின் அப்பா அம்மா மற்ற உறவினர்கள் எல்லோரும் தீவிர ஸப்போர்ட். ஆறு மாசம் கேஸ் இழுத்தடித்தது. வெற்றி இவர்களுக்குத்தான். முன்னங்கி பத்தையாய் இரண்டு லட்சம் ரூபாயை பஸ் நிர்வாகம் மாமா குடும்பத்துக்குக் கொடுத்ததும் எல்லோருக்கும் வாயெல்லாம் பல்.

''அதுவும் இதுவும் ஒண்ணு? அதுலே குடும்பத்தைக் காப்பாத்தறவன் போயிட்டான். அதனுலே பணம் தேவைப்பட்டது. ஹெள கான் யூ கம்பேர் த டு?''—

ராஜு பாக்டரிக்குக் கிளம்பிவிட்டான்.

''உனக்கு வேண்டியவா பண்ணறு சரி, இல்லாட்டா தப்பு. அப்படித்தானே? விடு. எனக்கு நாழியாறது. நான் புறப்படறேன், பை...'' ராஜு போய்விட்டான். திடீரென்று வித்யாவுக்கு ரொம்ப அலுப்பாய் இருந்தது.

கணவன் தன்னை மடக்கிவிட இடம் கொடுத்து விட்டோமே என்ற எண்ணம் எழுந்து முதலில் கோபப்பட வைத்தாலும் அப்புறம் அவளை வருத்தப்படச் செய்தது.

இந்த ஊர்ப் பெண்களும் அவர்கள் குழந்தைகளும் எக்கேடு கெட்டுப் போனல் எனக்கு என்ன?


ஏன் நேற்றிலிருந்து இது விஷயமாய் இவரோடு விடாமல் வாக்குவாதம் பண்ணுகிறேன்?

நல்ல குணமான புருஷன் என்பதால் சிரிப்பு மாறாமல் பதில் சொல்கிறார். குணம் கெட்டவராய் இருந்தால் இதுவே ஒரு பெரிய சண்டைக்கு அஸ்திவாரமாகி இருக்குமோ? ஏன் நான் இப்படி புத்தி கெட்டு நடந்து கொள்கிறேன்?

இனிமேல் நான் இதுகுறித்து எதுவும் பேசப் போவதில்லை. சமர்த்தாய், சிரித்த முகத்துடன் ராஜுவுக்குப் பிடித்த தினுசில் இருக்கப் போகிறேன்.

புதுசாய்ச் செய்து கொண்ட தீர்மானத்துடன் வித்யா குளிக்கப் போனாள்.

(தொடரும்)



# புகை

ஜோதிர்லதா கிரிஜா



கண்ணப்பன் எரிச்சலுடன் எழுந்தான். சமையற்கட்டிலிருந்து கிளம்பி வந்த புகை கண்ணைக் கரித்ததுதான் அவனது எரிச்சலுக்குக் காரணம். புகையின் விளைவாகக் கண்களில் நீர் சேர்ந்ததால் படிக்க முடியாமற்போன எரிச்சலுடன், ''காந்திமதி, ஏய் காந்திமதி! என்னது இது. வீடு முழுக்கப் புகையை விட்டுக்கிட்டு?'' என்று-கத்திய வண்ணம் சமையற்கட்டுக்குப் போனான். தானும் கண்களைக் கசக்கிக் கொண்டே அங்கிருந்து வெளிவந்த காந்திமதி, ''என்ன செய்யறது? காஸ் இல்லே. கெரஸினுயிலும் இல்லே. விறகு அடுப்பிலே சமைக்கிறேன். விறகு அடுப்பைப் புகைய விடாம எரிக்க விடறது ஒரு கலைதான். அது எனக்குப் பழக்கமில்லையே'' என்று சிரித்தாள்.

'விறகு அடுப்பா இருந்தா என்னவாம்? அதுக்காக இப்படியா ஓமம் வளர்த்தது மாதிரி வீடு முழுக்கப் புகையும்?' என்று கத்த வாயெடுத்த அவன், அவன் தன்னைத் தானே மட்டம் தட்டிக் கொண்டு சிரித்த சிரிப்பில் பொட்டென்று அடங்கிப் போனான்.


முகத்தைக் கழுவிக் கொண்டு அவன் திரும்பவும் கூடத்துக்கு வந்து உட்கார்ந்தான். புகை கொஞ்சம்கூட அடங்கியதாய்த் தெரியவில்லை. அவன் கதவுகளை நன்முகத் திறந்துவைத்துவிட்டு வாசல் பக்கம் போய் நின்றுகொண்டான். ஜன்னல் வழியாகப் பார்த்தபோது சமையலறைப் புகை போக்கியின் வழியாகப் புகை மண்டலம் சுருள் சுருளாக வெளிக் கிளம்பி உயரே சென்றது தெரிந்தது.

சமையலறைப் புகைக் கூண்டிலிருந்து கிளம்பிச் சென்று கொண்டிருந்த புகையை வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருந்த அவன் நெஞ்சில் திடீரென்று என்னமோ உறுத்தியது. புகை... அது அவன் வாயிலிருந்து ஒரு நாள் கிளம்பிய நேரத்தில் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து, அதிர்ந்து போய் அவனை அடி அடி என்று அடித்து நொறுக்கிய அப்பாவின் ஞாபகம் வந்தது. அப்போது அவன் அப்பாவின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியும் ஏமாற்றமும் கண்ணப்பனுக்கு இப்போதும் பசுமையாக நினைவில் நின்றன.

அவனுடைய அப்பா தவசுப்பிள்ளை; ரொம்பவும் துப்புரவானவர். குளிக்காமல் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டார். அதிகாலையில் எழுந்து ஆற்றில் குளித்துவிட்டுத் தேவாரம் திருவாசகம் எல்லாம் மனையில் சாமி படத்துக்கு எதிரே உட்கார்ந்து கண் மூடிச் சொல்லிவிட்டுத்தான் கஞ்சி குடிப்பார்.

அந்த நாள் அவனுக்கு நன்முக நினைவு இருந்தது. அப்பா ஆற்றுக்குக் குளிக்கப் போயிருந்த வேளையில் அவன் அவர் குளித்துவிட்டுத் திரும்பக் குறைந்தது அரை மணியாவது ஆகுமே என்ற நினைக்கத்தில்—அவருக்குத் தெரியாமல் வாங்கி வைத்திருந்த சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துப் புகைக்கலானான்.

''ஏண்டாலே? எம்புட்டுத் திமிரு உனக்கு?'' என்ற இடிகுரல் அவனைத் தூக்கிப்போட அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றான். தன்னையும் அறியாமல் அவன்



பாதி புகைத்த சிகரெட்டைத் தரையில் நழுவ விட்டான்.

''போடா வெளியிலே. நாரப் பயலே. சிகெரெட்டா புடிக்கிறே? ஊருக்குப் போயிருக்கிற உங்கம்மா வரட்டும்டா. அப்படியே பூரிச்சுப் போயிருவா. தேவாரமும் திருவாசகமும் சொல்றவன் வயித்துலே பொறந்துட்டு வாயாலே பொகையா ஊதறே?... உன்னைச் சொல்லிக் குத்தமில்லேடா. ஒன்னைப் படிக்க வக்கிறேனில்லே, அந்த எம்புத்தியைச் செருப்பாலே அடிச்சுக்கிறனும்...'' என்று கூறி அடிக்கத் தொடங்கினார். கண்ணப்பனுக்குத் தாங்க முடியாமல் போயிற்று. ''நிறுத்துங்க!'' என்று கத்தினான். அவன் கத்திய கத்தலில் அவர் சட்டென்று அடிப்பதை நிறுத்தினார்.

''இனிமேற்பட்டு அடிச்சீங்க... மருவாதி கெட்டுப் போயிரும். ஆமா. நான் சிகரட் புடிக்கிறதும் புடிக்காததும் என் இஷ்டம். நீங்க யாரு கேக்குறது?''

''என்னது? நான் யாரா? உங்கப்பன்டா நானு. நான் கேக்காம ஒன்னைய வேறு யார்ரா கேப்பாக? சோறுபோடறதுக்கும், படிக்க வக்கிறதுக்கும்தான் அப்பனும் ஆத்தாளுமா? தப்புச் செஞ்சா தட்டிக் கேட்கக் கூடாதாடா? ஏன்டா, டேய்!''

''இப்ப என்ன தப்புச் செய்து போட்டேன்? சிகரெட் குடிக்கிறது தப்பா? என் க்ளாஸ் பையன்கள் எல்லாம்தான் குடிக்கிறாங்க.''

''இன்னொரு வாட்டி ஒன்னைய சிகரட்டும் கையுமாப் பார்த்தேன்....?''

''என்ன செய்வீங்க?''

''அடிச்சு நொறுக்கி உசிரோட புதைப்பேன்....''

''அதுவரையில் என் கை பூப்பறிக்காது. தெரிஞ்சுக்குங்க.''


தகப்பன் மறுபடியும் அவனை அடிக்கப் பாய்ந்தபோது அவன் அவரைப் பிடித்துத் தள்ளிவிட்டு வெளியே ஓடினான். அன்று ஓடியவன்தான். அதற்குப் பிறகு அவன் அந்த ஊருக்கே போகவில்லை.

வீட்டை விட்டு ஓடிப் பயணச் சீட்டு இல்லாமல் புகைவண்டியில் பக்கத்து ஊருக்குப் போய் ஏதேதோ சின்னச் சின்ன வேலைகள் செய்து ஒரு மாதம் போல் கழித்தான். அப்போதெல்லாம் அவன் அம்மாவின் ஞாபகம் வந்து அவன் குடலைச் சுருட்டும். திரும்பிப் போய்விடலாமா என்று மனசு அடித்துக் கொள்ளும். ஆனால் அவனுக்கு வாய்த்திருந்த நண்பர்களின் சேர்க்கையில் தாய், தகப்பனின் அன்பு அவனுக்குப் பெரிசாய்த் தெரியவில்லை. தாய் தகப்பனைச் சென்றடைந்தால் தன் சுயேச்சையான போக்குகளுக்குத் தடை விதிக்கப்படும் என்பது அவனுக்குப் பிடிக்காத ஒன்றாக இருந்ததால் அவன் அவர்களைப் பிரிந்தே இருந்து விடுவது என்று தீர்மானித்தான்.

சிறிது காலத்துக்குப் பிறகு பிழைப்புக்கு வழிகள் நிறைய இல்லாத அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு அவன் சென்னைக்கு வந்து சேர்ந்தான். சென்னையில் கார்த் தொழிற்சாலை ஒன்றில் சிறு ஊழியனாகச் சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து, இப்போது அந்த

கம்பெனியில் மெக்கானிக்காக இருந்து வருகிறான். அவனுடைய நண்பன் தன் தங்கையை அவனுக்கு மணம் முடித்துக் கொடுக்க விரும்பியபோது அவனுக்கு அவன் அம்மாவின் ஞாபகம் அதிகமாக வந்தது. அப்பா தன்னை அடித்தது தன்னைத் திருத்துவதற்குத்தானே என்ற எண்ணத்தில் கண்களில் கண்ணீர் வந்தது. அவன் தன் ஊருக்குப் போய் அவர்களைப் பார்த்து வருவதாகச் சொல்லிச் சென்றான்.

அந்தச் சிற்றூரில் அவர்கள் காணப்படவில்லை. தான் இன்னான் என்று அறிமுகப் படுத்திக் கொண்டதற்குப் பிறகு அவனை அடையாளம் கண்டு கொண்ட தெருப் பெரியவர்களில் சிலர் அவன் அம்மா காலமாகி விட்டாள் என்றும் அப்பா அதற்குப் பிறகு பிழைக்க வழி தேடி அந்த ஊரை விட்டே போய்விட்டார் என்றும் அநேகமாகச் சென்னைக்குத்தான் போயிருப்பார் என்றும் தெரி



மயக்கம் தராத மது ஒன்றை இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கிறார்கள். "பேர் டெல்லா" எனப்படும் இந்த மது பீர் போல் குடித்தாலும் மயக்கம் வராது. முஸ்லிம்கள் மது குடிக்கக் கூடாது என்று தடை இருக்கின்ற காரணத்தினால் அரபு நாடுகளில் இந்த மதுவுக்கு நல்ல கிராக்கியிருக்கிறதாம். ஆதாரம் : "காரவான்"

—தகவல் : எஸ். சையது முகமது

வித்தனர். முகம் மறந்துபோன அம்மாவை எண்ணிக் கண் கலங்கிவிட்டு அவன் சென்னையில் அப்பாவைத் தேடிப் பார்க்கும் எண்ணத்துடன் கனத்த இதயத்தைச் சுமந்து கொண்டு திரும்பி வந்தான். சென்னையில் வலை வீசித் தேடினான். மூன்று மாதங்கள் பயன் விளையாமல் கழிந்ததற்குப் பிறகு நண்பனின் ஆறுதல் மொழிகளில் மனம் தேறிக் காந்திமதியை மணந்து கொண்டான்.

சென்னையிலேயே அப்பா இருந்தால்கூடக் கண்டுபிடிப்பது கடினம்தான் என்று நினைத்துப் பெருமூச்சு விட்டான். இப்போது ஓர் இரண்டு வயதுக் குழந்தைக்குத் தகப்பனாகியிருக்கும் அவனுக்கு ஒரு தந்தையின் பாசம் தெளிவாகத் தெரிந்தது. தன் தவறுகள் புரிந்து அவன் அடிக்கடி வருந்தினான்.

புகை கொஞ்சம் குறைந்திருந்தது. அவன் திரும்பி உள்ளே வந்தான். கூடத்தில் இருந்த காந்திமதி, "கண்ணைத் தொடச்சுக்கிடுங்க... அழுத மாதிரி செவ செவன்னு இருக்குது" என்று சொன்னபோது, தன் கண்களில் இருந்த கண்ணீர் புகைக் கரிப்பால் விளைந்தது அல்ல, அழுத கண்ணீர்தான் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டு அவன் கண்களை வேட்டி நுனியால் ஒற்றித் துடைத்துக் கொண்டான்.

வழக்கம்போல் ஒன்பது மணிக்குச் சாப்பிட்டு எழுந்த அவன், "காந்திமதி! நான் எங்க ஆபீசர் காரை வெள்ளோட்டம் விடறதுக்குப் பூந்தமல்லி வரைக்கும் போக வேண்டிய வேலை இருக்குது. அவருக்குப் பூந்தமல்லியிலே ஒரு சிநேகிதரு இருக்காராம். காரை அங்கிட்டுவரை ஓட்டிப் பார்த்துட்டுத் திரும்புவாரு. அதனாலே ராத்திரி வர்றதுக்கு எட்டு மணியாகும்" என்று தெரிவித்து விட்டுச் சைக்கிளில் தன் தொழிற்சாலையை நோக்கிப் புறப்பட்டான்.

காரின் ஓட்டம் நன்றாகவே இருந்தது. எங்கும் சிக்காமல் வழுவழுவென்று ஓடியது. தேவையற்ற கீச்சிடல்கள், ஓசைகள், எவையும் இல்லாமல் சீராக ஓடியது. நண்பரின் வீட்டு வாசலில் இறங்கிய அதிகாரி, "கண்ணப்பன், நான் வர்றதுக்கு ஒரு அரை மணியாகும். நீ வேணு எங்கேயாவது போய்ச் சுத்திட்டு வர்றதாய் இருந்தா வா" என்று அவனை அனுப்பி வைத்தார்.

அவன் கால்கள் போன போக்கில் நடக்கலானான். பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்த ஒரு சின்னத் தெருவுக்குள் நுழைந்த போது சற்றுத் தொலைவில் இருந்த பெட்டிக் கடையின் மீது பார்வை விழுந்ததும் சிகரெட் குடிக்கும் உறுத்தல் கிளர்ந்தது. அவன் விரைந்து நடந்தான். கடையில் உட்கார்ந்து ஒரு பெரியவர் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவன் போய் நின்றும் அவனைப் பாராமல் இருந்தார். சட்டென்று அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. அவன் அப்பாவேதான். தலை நன்றாக நரைத்திருந்தது. தோல் சுருங்கி யிருந்தது. நிறம் குறைந்திருந்தது என்பவற்றைத் தவிர அவர் தன் அப்பாதான் என்பதற்கான சாயல்களும் அடையாளங்களும் மாறாமல் அப்படியே இருந்தன. கடையில் ஒரு பொடியனும் இருந்தான்.

இவனைப் பார்த்ததும், "என்ன வேணும்?" என்று அந்தப் பையன் கேட்டான். அவன் தன் போக்கில் "ஒரு வில்ஸ் குடுப்பா" என்றான். அவன் எடுத்துக் கொடுத்தான். அவன் சிகரெட்டைப் பற்றவைத்துக்கொள்ளாமல் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு கவனித்தான்.

பெரியவர் அசையாமல் வெறித்த பார்வையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்குக் கண் பார்வை சரியில்லை என்பதைக் கண்ணப்பன் அந்தச் சில விநாடிகளில் தெரிந்து கொண்டான்.

"தம்பி, இங்கிட்டு வா, சொல்றேன்" என்று அங்கே இருந்த பையனைச் சற்று ஓரமாக அழைத்தான். பையன் வியப்புடன்

வந்ததும், ''அந்தப் பெரியவருக்குக் கண் பார்வை சரியா இல்லையா?'' என்று விசாரித்தான்.

''ஆமாங்க. அவருக்கு மாலைக் கண்ணுங்க. ஏழு மணிக்கு அப்புறம் கண்ணு தெரியாது.''

''அவரு பேரு தெரியுமா உனக்கு?''

''தவசுப் பிள்ளைங்க!''

தன் ஊகம் சரிதான் என்பது இப்போது கண்கூடாகத் தெரிந்து விட்டதால் கண்ணப்பனின் கண்களில் குபீரென்று கண்ணீர் இமிறியது.

''எத்தினி நாளா இங்கே கடை வச்சிருக்காரு?''

''ரொம்ப நாளாங்க. ஆனா இப்ப ஒரு மாசமாத்தான் மாலைக் கண்ணு. அதுலேதான் ஏழுலேந்து எட்டு வரைக்கும் என்னை உதவிக்கு உக்காத்தி வச்சிக்காரு. மாசம் அஞ்சு ரூபா குடுப்பாரு. நான் கடையிலே உட்கார்ந்து படிச்சுக்கிட்டே வியாவாரத்தைப் பார்ப்பேன்!''

''பெரியவரு வீடு எங்கிட்டு?''

''அதோ எதிர்லே இருக்குது பாருங்க, அந்தச் சின்னக் குடிசையிலே இன்னொரு கௌவரோட இருக்காரு.''

''கடை எப்பத் தொறப்பாரு?''

''காலே ஏழுக்குத் தொறப்பாரு. ராத்திரி எட்டரைக்கெல்லாம் மூடிடுவாரு'' என்ற பையன், ''ஏங்க, நீங்க யாருங்க? அவருக்கு எதுனாச்சும் சொந்தமா? கண்ணு கலங்கி இருக்குதே?'' என்றான்.

'கெட்டிக்காரப் பயல்' என்று மனத்துக்குள் பொடியனை மெச்சிய கண்ணப்பன் ''ஆமா. ஆனா இப்ப நீ எதுவும் சொல்ல வேணாம். நாளைக் காலையிலே நான் அவரு வீட்டுக்கே வந்து பேசறேன்'' என்றான்.

''ஏங்க, இப்பவே பேசுங்களேன்.''

''இப்ப சமயம் சரி இல்லேப்பா. ஆனா, நீ ஒண்ணும் அவர்கிட்டே சொல்லாதே இப்ப. இந்தா இதை வெச்சுக்க'' என்று அவனிடம் ஒரு ரூபாயைக் கொடுத்தான் கண்ணப்பன்.

''இந்தப் பெட்டிக்கடை அவருக்கு மட்டும் சொந்தமில்லே. குடிசையிலே அவரு கூட இன்னொரு பெரியவரும் இருக்காருன்னு சொன்னேனில்லே, அவரும் இவரும் சேர்ந்து வச்சிருக்காங்க. அவரு தன்னார்தவரு. அதனாலே உள்ளாறவே இருப்பாரு...''

கண்ணப்பன் கிளம்பினான். போகு முன் ஆசை தீர அப்பாவை நன்றாகப் பார்த்து அவரது வயோதிகத் தோற்றத்தை மனத்தில் பதித்துக் கொண்டு கிளம்பினான். மனம் சொல்ல முடியாத பரவசத்தில் ஆழ்ந்தது. பாய்ந்து சென்று அவரைக் கட்டிக்கொள்ள அவன் கைகள் பரபரத்தன. அந்தப் பரபரத்தலை வெற்றி கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. இருந்தும், அடக்கிக் கொண்டான். சிகரெட் குடித்ததற்காக அடித்த அடிகளில் மனம் வெறுத்து மகன் ஓடக் காரணமாக இருந்த தாம் அதே சிக



பேனாக்கத்தியில் ஒரு ப்ளேட் இருக்கலாம்; இரண்டு மூன்று கூட இருக்கலாம். அதற்காக இவ்வளவா?

மேற்கு ஜெர்மானியத் தயாரிப்பான இந்த ராட்சத பேனாக் கத்திக்கு? சாணை தீட்டி மெருகு ஏற்றி வைத்துக் கொள்வதற்குள் போதும் போதுமென்றாகி விடாதோ?

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

ரெட்டுகளைத் தம் கடையில் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த நிலையில் தன் மகன் தம்மைப் பார்த்துவிட்ட சிறுமை அவரை அவமானப்படுத்தும் என்ற காரணத்தாலேயே அவன் தனது அப்போதைய வருகையை மறைத்து வைக்க எண்ணினான்.


அன்றிரவு முழுவதையும் அவன் கண்ணிமைக்காமல் கழித்தான். காந்திமதியிடம் பழங் கதைகளைப் பேசிப் பேசி உணர்ச்சிவசப்பட்டவாறே இரவைக் கழித்தான். அதிகாலை ஐந்து மணிக்குப் பூந்தமல்லி, நோக்கி உற்சாகம் பொங்கிய மனத்துடன் கிளம்பிவிட்டான்.

அவன் போனபோது அவர் குடிசைக்குள் உட்கார்ந்து ஏதோ பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அழுக்கு உடைகளுடன், சின்ன இலையில் இரண்டு இட்லிகளை வைத்துத் தின்று கொண்டிருந்த அவரைப் பார்த்தபோது அவன் மனம் உருகிப் போய் விட்டது.

முதல் நாள் அழுக்கி வைத்த உணர்ச்சிகள் பீறிட, ''அப்பா!'' என்று தழுதழுத்து நடுங்கிய பெருங் குரலில் கூப்பிட்டுக் கொண்டு அவன் விரைந்து போய் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

இலக்கியங்களிலே துகில் படைப்புகள் — 6





# ஓடிப்போனவனும் தேடிவந்தவளும்!

[சென்னையில் நடந்த கொலைகளுக்கும் இந்தக் கதைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.]

அவன் அந்த வீட்டின் முன் வந்து நின்றான். உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவு ஒன்பது மணிக்கு மேலாகிவிட்டதால் தெருவில் ஜனநடமாட்டம் இல்லை. வீட்டின் உள்ளே இருந்து ரேடியோவின் சப்தமோ, டெலிவிஷனின் சப்தமோ மிகவும் தெளிவாக, வெளியில் நின்று கொண்டிருந்த அவனுக்குக் கேட்டது...

''இன்று பிற்பகல் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு மன நோயாளி தப்பி விட்டான். அவனைப் பிடிக்க முயன்ற ஒரு நர்ஸை முரட்டுத்தனமாக அடித்துத் தள்ளிவிட்டு ஓடிவிட்டான். பார்ப்பதற்குச் சாதாரண மனிதனாகத் தோன்றும். அவன் உண்மையில் ஒரு பயங்கர மன நோயாளி— பொதுமக்கள் மிகவும் ஜாக்கிரதையாக அவனோடு நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கப்படுவதோடு அவனை நகரமெங்

கும் தேடித் திரியும் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு உதவும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.''

அவனுக்கு இதைக் கேட்டவுடன் சிரிப்புத்தான் வந்தது. முதலில் தப்ப விட்டு விடுவானேன் — பிறகு தேடித் திரிவானேன்? முதலிலேயே ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டியதுதானே?


முன் பக்கம் வெளிச்சம் இல்லை. வெளியில் இருந்த விளக்கு அணைக்கப்பட்டிருந்தது. படியேறி நின்றான். கதவைத் தட்டினான். வீட்டுக்குள் யாரோ நடமாடிக் கொண்டிருந்தது வெளிச்சத்தில் ஜன்னல் வழியாகத் தெரிந்தது. கதவு தட்டப்படும் சப்தத்தைக் கேட்டவுடன் ரேடியோவின் சப்தம் நின்று விட்டது.

இன்னொரு தடவை தட்டியவாறே, ''ஸார்....ஸார்....'' என்றும் குரல் கொடுத்தான் வெளியில் நின்று கொண்டிருந்தவன்.

வெளியிலிருந்த விளக்கு எரிந்தது. கதவு திறக்கப்பட்டது. திறந்தது ஒரு பெண். அழகாக இருந்தாள். வீட்டுக்காரரின் மனைவியாக இருக்க வேண்டும். கதவைத் தைரியமாகத் திறக்கிறாளே!

''உங்களுக்கு என்ன வேண்டும்?'' அவள் குரலில் நடுக்கம் இருந்தது போலத் தெரிந்தது அவனுக்கு! இரவில் ஒரு நபர் வந்து எதிரில் நின்றால் பயமாக இருக்காதா? தோற்றம் — அவன் பயந்த மாதிரியே தெரியவில்லை.

''எலெக்டரிக் காண்ட்ராக்டர் மிஸ்டர் மூர்த்தி இருக்கிறாரா?''



# ரா.வேங்கடசாமி

அவன் கேட்டான். பெயர்தான் பெரிய பலகையில் பெரிதாக எழுதி வெளியில் தொங்க விடப்பட்டிருக்கிறதே!

''அவர் இல்லை... ஊருக்குப் போயிருக்கிறார். நான்தான் இருக்கிறேன்...''

அப்படி யென்றால் இவள் அவர் மனைவியாகத்தான் இருக்க வேண்டும் — மிஸஸ் மூர்த்தி!

''நான் ஒரு எலக்ட்ரிஷியன். அடுத்த தெருவில் பத்து வீடுகளுக்கு மின்சார சப்ளை இல்லை. என்னைப் பார்க்கச் சொல்லி அனுப்பினார்கள். இங்கே வரும்போது என் 'கிட்'டைக் கொண்டுவர மறந்துவிட்டேன். பக்கத்தில் இருந்த சக ஊழியர் வீட்டில் வாங்கிக்கொள்ளலாம் என்றால் அவரும் வீட்டில் இல்லை. திரும்பவும் நான் அவ்வளவு தூரம் போய்விட்டு வர முடியாது. ரிப்பேர் செய்யாமல் திரும்பி விட்டாலும் நாளைக்கு வேலைக்கே ஆபத்து — திடீரென மூர்த்தி சார் ஞாபகம் வந்தது. அதனால் சாமான்களை இங்கிருந்து எடுத்துப் போக வந்தேன்'' என்றான் அவன். நம்பக் கூடிய விஷயத்தில் தான் அவன் பேசினான்.

வேலைக்கு வருபவன் சாமான்களைக் கொண்டு வர வேண்டாமோ? — அவள் நினைத்தாள்.

இதில் ஏதாவது பித்தலாட்டம் இருக்குமோ?

அவள் பேசாமல் இருப்பதை அவன் கவனித்து விட்டு, ''சாமான்களை நீங்களே எடுத்துக் கொடுங்கள். திரும்பவும் நானே கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன். என் பெயர் முத்து.... நீங்கள் வேண்டுமானால் ஆபீசுக்குப் போன் செய்து விசாரித்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''அவர் இல்லாத நேரத்தில் நான் எதையும் எடுத்துக் கொடுத்து எனக்குப் பழக்கமில்லை. நாளைக் காலையில் அவர் வந்துவிடுவார். அப்போது வாருங்கள் இப்போது நீங்கள் போகலாம்!'' — அவள் கதவை மூடப் போனாள். முத்துவுக்குப் 'போக்' சென்று போய்விட்டது.

''அவர் இல்லாத நேரத்தில் நான் இங்கு வந்தது தவறுதான்.... நீங்கள்தான் பெரிய மனசு வைத்து....'' என்று சொல்லிக் கொண்டே அவள் கதவை மூட முடியாமல் தன் காலை உள்ளே வைத்தான். அவள் திடுக்கிட்டாள்.

அவன் முகத்தில் தோன்றிய விகாரச் சிரிப்பு, அவள் எலும்பைத் தொட்டது.

''நீங்கள் செய்வது நன்றாக இல்லை.... ஆண்கள் இல்லாத வீட்டில் இந்த நேரத்தில் புகுந்துகொண்டு....''

அவள் அழுது விடுவாள் போலிருந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள்..,

அவள் கதவை விட்டு விலக அவன் உள்ளே நுழைந்தான்.

''வந்த வேலைதான் நடக்கவில்லை... அதிக தூரம் நடந்து வந்ததால் களைப்பாக இருக்கிறது... கொஞ்சம் குடிக்கத் தண்ணீராவது தருகிறீர்களா?''

''தருகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவள் உள்ளே விரைவாகப் போனாள்.

முத்துவும் வேகமாக அவள் பின்னால் போனான். மிஸஸ் மூர்த்தி இளமை கொஞ்சும் அழகியாக இருந்தது அவன் கண்களை உறுத்தியது.

தண்ணீர் கொண்டு வந்தவள், அவன் கூடத்தில் வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

''நீங்கள் இங்கே வரக் கூடாது. உங்களைக் கண்டதும் பயந்து விட்டேன்...'' என்று அவள் கத்தினாள்.

''மன்னிக்க வேண்டும் மிஸஸ் மூர்த்தி... உங்களைப் பயமுறுத்த வேண்டும் என்கிற எண்ணமே இல்லை...'' என்று சொல்லிக் கொண்டே அவன் தண்ணீரை வாங்கிக் குடித்தான்.

டம்ளரை அவன் கையிலிருந்து, அவள் கையில் வாங்கிக் கொள்ள, கையை நீட்டினாள்.

அவன் கொடுக்கவில்லை. அதைத் தன் கையில் வைத்துக் கொண்டே வீட்டைச் சுற்றி நோட்டம் விட்டான்.

அவன் நின்ற இடத்திலிருந்து பார்த்தால், வீட்டின் பின் பக்கக் கதவு திறந்துகிடந்தது தெரிந்தது. அங்கே இருந்த விளக்கும் எரிந்து கொண்டிருந்தது.

''மிஸஸ் மூர்த்தி... அதோ பாருங்கள் பின் பக்கக் கதவு திறந்து போடப்பட்டிருக்கிறது.... முதலில் அதைப் போய் மூடிவிட்டு வாருங்கள்...''

''நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்.... நான் அதைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்...''

அவள் கோபமாகச் சொல்லவும் அவன் கையமர்த்தினான்.

''நீங்கள் விரும்பினால் நான் போய் மூடி விட்டு வருகிறேன்...'' என்று முத்து அடி எடுத்து வைக்கவே அவள் அதற்கு இடம் கொடுக்காமல் வேகமாய் போய், அந்தக் கதவை மூடிவிட்டு வந்தாள். அதற்குள் முத்து வாயிற் கதவைத் தாளிட்டுவிட்டு வந்தான். டம்ளர் இன்னும் அவன் கையில் தான் இருந்தது.



''இதென்ன அக்கிரமம்? வீதிக் கதவை ஏன் மூடுகிறீர்கள்?... கூச்சல் போடவா?''

அவன் அமைதியாகப் பதில் சொன்னான்.

''இப்போது நீங்கள் சப்தம் போட்டால் அவமானம் உங்களுக்குத்தான். இப்போது நான் உங்களை என்ன செய்து விட்டேன்? கெடுதல் செய்ய நினைத்திருந்தால் இவ்வளவு நேரம் செய்திருக்க மாட்டேனா? எங்கள் காரியாலயத்துக்கு இங்கிருந்து கொஞ்சம் போன் செய்து கொள்கிறேன்.''

''அதற்காக வாயிற் கதவை நீங்கள் ஏன் மூடவேண்டும்?''

''என்னைத் தேடிக் கொண்டு யாராவது இங்கே வந்து விட்டால்...?''

எல்லாவற்றுக்கும் அவன் பதில் தயாராக வைத்திருந்தான். அவளால் பேச முடியவில்லை. தனியாக இருக்கும் நேரத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்குமல்லவா?

அவன் 'போன்' அருகில் போய் நெம்பர்களைச் சுழற்றத் தொடங்கினான்.

மிஸஸ் மூர்த்திக்குப் பொறுக்கவில்லை. இவனை இப்படியே விட்டுவிட்டால் அடுத்த படியாக என்னென்ன செய்வானோ? அருகில் இருந்த சிறிய ஸ்டூலை எடுத்து அவனை அடிக்கப் போனாள்.

நிழல் தன் பக்கம் விழுவதைக் கண்ட அவன் திடுக்கிட்டுத் திரும்பி, அடியிலிருந்து தப்பினான். அத்துடன், அவள் கன்னத்தில் ஓங்கி அறைய மிஸஸ் மூர்த்தி மயங்கிக் கீழே விழுந்தாள்.

முத்துவுக்குக் கைகால்கள் இப்போது நடுங்கத் தொடங்கின. தைரியம் விடை பெற்றுக் கொண்டது. ஒரே அடியில் அவள் இறந்து விட்டிருப்பாளோ? முகத்தின் அருகே கையை வைத்துப் பார்த்தான். லேசாக மூச்சு வந்து கொண்டிருந்தது. அவளைத் தூக்கிப் படுக்கையில் கிடத்திவிட்டுச் சப்தம் ஏதும் போடாமல் வந்த வழியே திரும்பிப் போய்விடலாம் என்று நினைத்து, செயலில் இறங்கினான் அவன்!

லேசாக மூடியிருந்த படுக்கை அறைக் கதவைத் திறந்தபோது அவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

படுக்கையில் இளம் பெண் கிடந்தாள். அவள் நெஞ்சில் ஒரு கத்தி முளைத்திருந்தது. அவள் இறந்திருந்தாள் என்பதில் சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை!

முத்து அறையைச் சுற்றிப் பார்க்க, சுவரில் தொங்கிய கல்யாணப் போட்டோவில் இருந்த பெண்தான் படுக்கையில் பிணமாகக் கிடந்தது தெரிந்தது!

அவன் மனத்தில் இருந்த திரை விலகியது போன்ற பிரமை!

படுக்கையில் கிடப்பவள்தான் மிஸஸ் மூர்த்தி! மயங்கிக் கிடப்பவள்... திறந்திருந்த பின் பக்க வழியாக வந்தவளோ?

தன்னைத் தைரியமாக அடிக்க வந்த துணிச்சல்! முத்துவுக்கு எல்லாமே புரிந்தது... உடனே போலீசுக்குப் போன் செய்யப் போனான், பைத்தியம் தெளிந்த முத்து!

அண்டமும் அகிலமும் அருள்அர சாட்சியைக்
கொண்டன ஓங்கின குறைஎலாம் தீர்ந்தன
பண்டங்கள் பலித்தன பரிந்துஎனது
உள்ளத்தில்
எண்டகும் அருட்பெருஞ் சோதியார் எய்தவே!

- திருஅருட்பா

---

துன்பத்தில் இன்பம்

## வெறுப்பும் விருப்பும்!

நான் வேலை பார்த்த அதே அலுவலகத்தில் டைப்பிஸ்டாக இருந்தவள் ஓர் அழகான திருமணமாகாத பெண். எனக்கு அவள்மீது உண்மையான அன்பு - அதாவது காதல். இதை எப்படி அவளிடம் தெரிவிப்பதென்று தெரியாமல் ஒரு நாள் துணிச்சலாக (?) ஒரு துண்டுச் சீட்டில் 'ஐ லவ் யூ' என்று எழுதிக் கையெழுத்தைப் போட்டு அவள் லீட்டிலிருந்த டிரேயில் போட்டு விட்டேன். அதை ஆபீஸரிடம் அவளே தான் அன்று கொடுத்திருக்க வேண்டும்! அன்று வாங்கிய 'டோஸ்' இன்றும் நினைவிலிருக்கிறது! இன்னொரு நாள் ஆபீஸர் காம்பில் இருக்கும் போது அரைநாள் லீவ் லெட்டரை டைப்பிஸ்ட் டிடம் கொடுத்துவிட்டு (ஆபீஸர் எதிர் பாராமல் காம்பிலிருந்து வந்தால் மட்டும் பயன்படுத்திக் கொள்வதற்காக) மாட்னி சினிமாவுக்குப் போய் விட்டேன்! அதிகாரி திடீரென காம்ப்பை முடித்துக்கொண்டு எதிர்பாராமல் வந்ததும் டைப்பிஸ்ட் வேண்டுமென்றே என் லீவுலெட்டரைக் கொடுக்காமல் பழிவாங்கி விட்டாள். இப்படி சிலபல நிகழ்ச்சிகளையும் 'துண்டுச்சீட்டு விவகாரத்தையும் வைத்து எனக்குப் பிடிக்காத ஊருக்கு 'டிரான்ஸ்ஃபர்' செய்து 'ரிலீவ்' செய்தும் விட்டார்கள்! என்னைப் பிடிக்கவில்லையென்றால் இப்படியெல்லாமா ஒரு டைப்பிஸ்ட் செய்வது என்று எனக்கு ஒரே வயிற்றெரிச்சல்.

நான் எனது பெட்டி படுக்கையுடன் ரயில்வே ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்த பொழுது அவள் என்னை நோக்கி விரைந்து வந்தாள்.

'நீங்கள் எழுதிப்போட்ட துண்டுச் சீட்டு என்னையுமறியாமல் டைப் செய்த பேப்பரோடு கலந்து எப்படியோ ஆபீஸர் 'கைக்குப் போய்விட்டது. அன்று உங்களை டோஸ் விட்டவர் என்னையும் 'ஒரு மாதிரி'ப் பார்த்தார். நானும் உங்களைக் காதலிப்பதாகக் காட்டிக்கொண்டால் ஆபீஸர் இன்னும் கோபப்பட்டு இரண்டு பேரையும் வேறு வேறு திக்கில் மாற்றி விடுவாரோ என்று பயந்து, உங்களை எனக்குப் பிடிக்காதது போல் நடித்துச் சில சில்லறை விஷயங்களில் உங்களை மாட்டி வைத்துவிட்டேன்! நீங்கள் மாற்றலில் செல்லும் ஊரும் எனது சொந்த ஊரும் ஒன்றே. இனி நீங்கள் ஓட்டலில் சாப்பிட வேண்டியிருக்காது. எனது சொந்த ஊரிலேயே எனக்கு வரன் செட்டிலாகியுள்ளதால் எனக்கும் அதே ஊருக்கு மாற்றல் வேண்டும் என்று நான் கேட்டதை உண்மையென்று நம்பி ஆபீஸர் ஆமோதித்து விட்டார்! எனவே விரைவில் நானும் அங்கு வந்து விடுவேன்!' என்றாள்.

இதைக் கேட்டதும் எனது ஆழ்ந்த வருத்தம் நொடியில் சிரிப்பாக மாறிவிட்டது!

— அ. சிங்காரவேலு



# கல்லைக் கனிய வைக்கும் அழகு!

"**எ**ன்ன? எனக்கு இந்தப் படத்தைக் காண்பிக்கிறீர்கள்?'' என்று கொஞ்சம் காரமாகவே கேட்டாலும் படத்திலுள்ள ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒரு சம்பவம் நினைவுக்கு வர, சொல்ல ஆரம்பித்தார் ஜெயலலிதா:

கொடைக்கானல் ஏரிக்கு அருகில் ''பாட்டும் பரதமும்'' வெளிப்புறப் படப்பிடிப்பு. ஒரு வயதான வெளிநாட்டு மூதாட்டியும், அவருக்கு அருகில் பழுத்த கிழவர் ஒருவரும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் இருவரையும் பார்த்தவுடன் கணவன் மனைவி போல் தோன்றியது. ஆனால் அப்படி அல்ல என்று அவரிடம் பேச்சுக் கொடுத்தவுடன் தெரிந்தது. பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த அம்மாது கடைசியாக ஒன்று கூறினார்: ''நீ ரொம்பவும் அழகாக இருக்கிறாய். உன் அழகு கல்லைக் கூடக் கனிய வைக்கும்.'' இந்தப் படத்திலுள்ள நினைவுக் கற்களையும் மூதாட்டியையும் பார்க்கும் பொழுது எனக்கு அந்தத் தினம் தான் நினைவுக்கு வருகிறது!

சின்ன வயதில் எனக்கு மயானம் என்றாலேயே பயம். எனக்கு ஏழு, எட்டு வயதிருக்கும் பொழுது ஊட்டிக்குச் சென்றேன். காலையில் குதிரை சவாரி செய்வது வழக்கம். ஒவ்வொரு நாளும் மயானத்தின் வழியாகத் தான் திரும்பி வர வேண்டும்.

மயானத்தைத் தாண்டும் போது கண்ணையும் வாயையும் இறுக மூடிக் கொள்வேன். மூச்சை மெள்ளத்தான் விடுவேன். ஒருநாள் என் காதுகளில் புதிய முத்துத் தோட்டை என் தாயார் போட்டிருந்தார். அதைக் காணவில்லை. எங்கெங்கோ தேடிய பிறகு, 'ஒருவேளைக் குதிரைச் சவாரியின் போது விழுந்திருக்குமோ' என்று ஒருவர் கேட்க 'மயானத்துக்கு அருகில் விழுந்திருக்கும்' என்றேன் நான். 'வா போய்த் தேடலாம்!' என்றனர். நான் விடாப்பிடியாக மறுத்தேன். எனக்குப் பிடிக்கவில்லை. ஒரே உதறல். மற்றவர்கள் சென்று தேடினர். நான் நினைத்தது போல் மயானத்திற்கு அருகில்தான் அது விழுந்திருந்தது. அகப்பட்டு விட்டது. இன்று நினைத்தாலும், 'என்ன அசட்டுப் பயம்' என்று எனக்கு நானே சிரித்துக் கொள்வதுண்டு.

ஒரு சமயம் பார்ஸி சங்கம் நடத்திய ஓர் இசை விழாவுக்குச் சென்றிருந்தேன். இடைவேளையின் போது நான் வந்திருப்பதை அறிந்து என்னை மேடைக்கு வரவழைத்து ஒரு மலர்க் கொத்து அளித்துக் கௌரவித்தார்கள். அவர்களது திடீர் வரவேற்பும் மரியாதையும் என்னைத் திக்குமுக்காடச் செய்து விட்டன.

புல்வெளியைப் பார்க்கும் போது விஜயா கார்டனில் ஒருநாள் நடந்த படப்பிடிப்பு நினைவுவருகிறது. ஷூட்டிங் நடுவில், ''அம்மா, கொஞ்சம் தள்ளி வாங்க!'' என்று என்னை யாரோ கூப்பிடுவது கேட்டது. 'யார்' என்று திரும்பிப் பார்க்க, சரசர வென்ற ஒலி. ஒரு பாம்பு நெளிந்து ஓடுவதைக் காட்டிக் கொடுத்தது. என்னை எச்சரித்தவருக்கு நன்றி கூறினேன். சிறிது நேரத்தில் அந்தப் பாம்பு பிடிக்கப்பட்டது. கொடிய விஷமுள்ள பாம்பு; விஷப் பிசகியிருந்தால் என்னைத் தீண்டியிருக்கும்!

பேட்டி: சலன்


சினி
ஸ்டில்லும்
சிந்தனையும்



# கல்லுக்குள் ஈரம்

தலைப்புக்கு ர. சு. நல்ல பெருமாளுக்குக் காப்பிரைட் கிடையாது. எப்படியோ காவிய நயமுள்ள தலைப்பு படத்துக்குச் சூட்டியதில் நமக்கு மகிழ்ச்சியே.

வெண்ணிற ஆடை நிர்மலா, திரைக் கதைக்குள் படமாக்கப்படும் ஷூட்டிங்கில் சில வசனங்கள் பேசி, சில நிமிஷங்கள் நடன அபிநயங்கள் பிடித்து, சில நிமிஷங்கள் நடித்ததோடு சரி. அப்புறம் அவருக்கு வேலையில்லை. சுதாகர் பரவாயில்லை. ஷூட்டிங்கில் நடித்ததோடு மட்டும் அல்லாமல் கிராமத்து வெகுளிப் பெண் காத்தியின் கரைகாணாக் காதலுக்கும் ஏமாற்றத்தினால் அவள் அடைந்த மரணத்துக்கும் காரணமாகி விடுகிறார்.

பாரதிராஜா, திரைக்குள் வரும் டைரக்டர், ஹீரோ. இத்தனை காலமும் அவரது படங்களின் மூலம் அவருடைய டைரக்ஷன் திறமையை மட்டும் பார்த்து வந்தவர்களுக்கு, அவர் டைரக்ட் செய்வதை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிட்டுகிறது. அவரது நடிப்புத் திறமையும் அருமையாக வெளிப்படுகிறது.

கிராம மக்களின் வெகுளித் தனத்தையும், சினிமா அவர்கள் வாழ்க்கையில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் இப்படம் நன்றாய் எடுத்துக் காட்டுகிறது.

காத்தியாக வரும் விஜய சாந்தி, சுதாகரிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டுத் தவிக்கும் காட்சிகளில் ரசிகர்களைத் தவிக்க வைக்கிறார்; தன் ஆசை கிட்டாத ஒன்று என்று அறிந்ததும்தான் எத்தனை கோபம், எத்தனை தொய்வு, எத்தனை கண் கலக்கம்!

சோலை என்ற இன்னொரு வெகுளிப்பெண் தம் நடிப்பில் ரசிகர்களை அயர வைத்து விடுகிறார். அவர் படத்தில் டைரக்டராக வரும் பாரதிராஜாவைக் காதலிக்கிறார். அவர் பார்வையில்தான் என்ன மருட்சி, பேச்சில் தான் எத்தனை தயக்கம்! கிராமப் பெண்களுக்கே உரிய, பகட்டில்லாத, வெளிப் படையாயில்லாத ஒரு நாணம் அவர் நடிப்புக்குச் சிகரம் வைத்து விடுகிறது. சோலையாக வருபவர் அருணா.

அருணா, விஜய சாந்தி இருவரும் பாரதி ராஜாவின் அரிய கண்டு பிடிப்புகள்! அறிமுக நடிகைகள் என்றால் நம்ப முடியவில்லை! கலையின் சிறப்பு அம்சங்கள் எங்கேயெல்லாம் ஒளிந்து கிடக்கின்றன என்று வியக்கிறோம். சாதாரணக் கற்களைக் கண்டெடுத்து, பாரதிராஜா சாணை பிடித்து, பட்டை தீட்டி மெருகேற்றி விட்டிருக்கிறார்!

கவுண்டமணியின் குடிகார பாத்திரம் மிகவும் வேடிக்கையானது. ஒவ்வொருவரிடமும் குழைந்து பேசி, ஐஸ் வைத்துக் காசு வாங்கிச் சென்று குடித்து விட்டு அவர்களிடமே சென்று கலாட்டா செய்வது மனத்தில் பதிந்து விடும் தமாஷ்தான்!

கிராமப்புறக் காட்சிகள் அதியற்புதமாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன. படம் பிடிக்கும் போதினிலே சுழலும் காமிரா, சுற்றுப்புறக் காட்சிகள், மக்கள் — யாவும் திறமையாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன. ஒளிப்பதிவுக் கலைஞர் நிவாஸ் பாராட்டுப் பெறுகிறார். அசல் தெருக்கூத்துக் காட்சி படத்துக்குச் சுவை கூட்டுகிறது. படத்தின் டைரக்டரும் நிவாஸ்தான். ''கல்லுக்குள் ஈரம்'' கண்டு களிக்க வேண்டிய படம்.

—காந்தன்

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran

நிகரில்லா வலிமைக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—லேசுடா லேசு,
நீடித்த உழைப்புக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—வீசுடா வீசு !



# நிர்லான்

## நைலான் மீன்பிடி வலை மணிக் கயிறு

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்:
"நிர்லான் ஹவுஸ்"
254—B, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு,
பம்பாய்-400 025

சென்னை கிளை:
300, மோப்ரேஸ் ரோடு
சென்னை—600 018

லின்டாஸ்-NIR-13-303 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு